Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 20.00

ஜன. 18 - 24, 2007


# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 696



## இலங்கை – இந்திய ஒப்பந்தம்; ஒரு பொன்னான வாய்ப்பு

## சாதிக்குமா சர்வகட்சி மாநாடு?






## தமிழர்களுக்குப் பிரச்சினை உண்டு

ஓர் ஆய்வுக் கட்டுரை





## நான் நம்பர் – 1

–விஜய்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## காலங் கடப்பதை அறிகிலரோ?

ஆசைதான் மனிதனை வழிநடத்துகின்றது என்றபோதிலும், ஆசைகள் பிறந்ததிலிருந்தே ஆரம்பிக்கின்றனவா? என்று ஓர் கேள்வி எழுந்தால் இல்லை என்று மறுப்பதற்கில்லை. மனிதன் சிசுவாக இருக்கும்போது அழுகிறான். இது பசிக்கிறதென்னும் ஆவலை வெளிப்படுத்துகிறது. பிள்ளையான பின் மண் விளையாட்டில் ஆசை. 'வளரும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்' என்பது பழமொழி. இந்தப் பிள்ளை வாலிபப் பருவத்தை அடைந்ததும் வேறொரு ஆசை பின்பு பொருளின் மீது ஆசை. இப்படியாக, பிறந்தது முதல் ஆசையிலேயே உழன்று கொண்டிருக்கும் மனிதன் என்றோ ஒரு நாள் இறக்கப்போகும் நாள் வரும் என்பதை மறந்துவிடுகிறான். மரணத்தின் பின் அவன் நிலை என்ன என்பதை அறியாது திகைக்கிறான். ஆனால், ஆன்மாக்களை நன்னெறிப்படுத்தும் இறை வழிபாடானது மனிதனை தீய வழியில் செல்லவிடாது தடுக்கும் என்பதை ஞானிகள் ஏற்கனவே கூறிவைத்திருக்கிறார்கள். அவைகளில் ஒன்று...

'பாலன் இளையன் விருத்தன் என நின்று
காலங் கழிவன கண்டும் அறிகிலார்' - திருமூலர் பாடல் - 181

என்ற வரிகள் மூலம் மனிதனின் அறியாமையைக் கூறினார்போலும்.

- என்.எஸ்.ராஜா, தம்பலகமம்.



## முன்னே செல்லும் தேவன்

'பின்பு அவர்கள் எருசலேமுக்குப் பிரயாணமாய்ப் போகையில், இயேசு அவர்களுக்கு முன்னே நடந்து போனார்; அவர்கள் திகைத்து, அவருக்குப் பின்னே, பயத்தோடே போனார்கள்.' மாற் 10.32.

பயங்கரமான சித்திரவதையுடன் கூடிய சிலுவை மரணம் அங்கே காத்திருக்கிறது. ஆனாலும் இயேசு சீஷர்களுக்கு முன்னே நடந்து போகிறார். அவர்களோ பயத்துடன் பின் தொடர்ந்து போகிறார்கள். அவரோ மரணத்தை எதிர்நோக்கியே செல்லுகிறார். அவருக்குத் தெரியும், மரணம் அவரை ஒன்றும் செய்யப் போவதில்லை. அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார் என வேதம் சொல்லுகின்றது. மூன்றாம் நாள் உயிரோடு எழும்பினவர், இன்றைக்கும் உனக்கு முன்னே போகிறார். அன்றைக்கு சீஷர்கள் மரண பயத்தோடு பின் தொடர்ந்தார்கள். இன்று நாமோ நித்திய ஜீவன் எமக்கு உண்டு என்கிற நம்பிக்கையுடன் தைரியமாகப் பின்தொடருகின்றோம். 'நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்.'

(ஏசாயா - 45:2)

-போல், திகனை

## செல்வத்தைச் செலவழிக்கும் முறை

இன்று பலர் பணம் பணம் என்று பஞ்சாய்ப் பறக்கின்றனர். இந்தப் பணத்தைச் சேர்க்கும் முறை, அவற்றை செலவழிக்கும் முறை அனைத்துமே தூய்மையானதாக இருக்க வேண்டும். இதில் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அனைவரும் அடிபணிந்து நடக்க வேண்டும்.

அருள் மறையாம் அல்குர்ஆன் கூறுகிறது, அல்லாஹ் உனக்கு அளித்திருப்பவையைக் கொண்டு தான தருமம் செய்து மறுமை வீட்டைத் தேடிக் கொள். இவ்வுலகில் நீ அனுபவிப்பதற்குரிய பங்கை நீ மறந்துவிட வேண்டியதில்லை. ஆனால் அல்லாஹ் உனக்கு நன்மையைத் தந்திருப்பது போல், நீ பிறர்க்கு செல்வத்தின் மூலம் நன்மை செய். இதை விடுத்து பூமியில் விஷமம் செய்து கொண்டிருக்க முயலாதே. நிச்சயமாக விஷமம் செய்வோரை அல்லாஹ் நேசிப்பதில்லை.

(அல்குர்ஆன் 28:77)

பணத்தைச் சேர்த்து வைப்பதில் பலர் இன்று கண்ணும் கருத்துமாக இருந்து, தானும் அதனை அனுபவியாது பிறர்க்கும் அவற்றை வழங்காது மடிந்து விடுகின்றனர். நாம் தேடிய செல்வத்தை செலவழிக்கும் முறை நல்வழியில் இருக்க வேண்டும். நமது உழைப்பில் நாம் அனுபவிப்பதற்கு ஓர் பங்குண்டு. இதுபோல் இதில் வறியவர்களுக்கு வழங்க வேண்டியதும் எமது கடமையாகும்.

-எம். சி. கலீல், கல்முனை - 05.

---

கவிதைப் போட்டி இல.693




பாராட்டுக்குரியது

### மனிதம்!

பயிற்சி கொடுத்து
பலி கொடுப்பாய்
அல்லது
பாலகன் என்றும்
பாராமல்
பலி எடுப்பாய்
நீ பயங்கரவாதி
உன்னிடம்
மனிதாபிமானம்
பார்க்க முடியாது.

- எம். பானு, திருமலை

# கவிதைப் போட்டி இல.696



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 23.01.2007.

கவிதைப் போட்டி இல.696
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### இந்நிலை என்று மாறும்?

கருவிலிருக்கும் குழந்தை
வெளிவரும் முன் தந்தையைச் சுட்டுக்
கொல்லும் துப்பாக்கி மனிதம்
பச்சிளங் குழந்தையை விட்டு
வைக்குமா என்ன?

- ஏ. கே. றினோஸா, பண்டாரவளை.

### பயங்கரவாதிகள்!

குழந்தையின்
உயிருக்கே
குறிவைக்கும்
கொலைகாரப்
பாவிகள்தான்
இந்த
உலகத்திலேயே
கொடிய
பயங்கரவாதிகள்!

- பாண்டியூர் பொன். நவநீதன், கல்முனை.

### கயவர்கள்!

பிஞ்சுக் குழந்தைக்கு
கைத்துப்பாக்கியால்
குறிபார்க்கும்
கயவர்கள் நாட்டில்
இருக்கும் வரை
சமாதானம் மலராது
சாவு மணிதான் அடிக்கும்.

- ஏ. எஸ். எம். ரவூப், கொழும்பு - 15.

### குறிகாட்டும் குறி!

புன்னகை புரியும்
சின்னக்குழந்தைக்கு
என்ன தெரியும்?
இனவாதக் கொலைகள்
இடம் பெற்றால் - இங்கு
இப்படித்தான் நிகழும் என்று
துப்பாக்கியாளர்கள்
இலக்கு வைக்கின்றனரோ?

- கவிக்குயிலன், சேனையூர்.

### தாயில்லாப் பேடியே!

நிலவைக் காட்டி,
சோறூட்டினா அம்மா!
துப்பாக்கியைக் காட்டி
சோறூட்டினவளையே
சமாதியாக்கச் சொல்றான்
தாயில்லாப் பேடி!

- திரு. இராசலிங்கம், நுவரெலியா.

### இரங்கு!

உன்னைப்
பகைத்துக் கொண்டவனையும்
கொன்று அவனின்
சந்ததியையுமா
கொல்லப்போகிறாய்?
பாவம் விட்டுவிடு
சுட்டுவிடாதே.

- காமீன் செய்னுலாப்தீன், கிண்ணியா- 05.




## உங்கள் பக்கம்

### சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுப்பார்களா?

இலங்கையில் தற்போது மூன்றில் இரண்டு பங்கு ஆசிரியர்களுக்குக் கணனி அறிவு இல்லையென கல்வியமைச்சின் ஆய்வொன்று தெரிவிப்பதாக செய்தியில் படித்தேன். அப்படியெனில் இலங்கையில் கணனிப் படிப்பை முடித்து விட்டுப் பலர் வேலை வாய்ப்பின்றி இருக்கின்றனர். அவர்களைப் பாடசாலையில் சேர்த்து ஏன் மாணவர்களுக்குக் கற்பிக்கக் கூடாது? பல ஆயிரங்கள் காசு செலவழித்துப் படித்த மாணவர் கதியைப் பற்றி அரசாங்கத்துக்கு அக்கறை இல்லையா? அரசாங்கம் இது பற்றி ஏன் சிந்திக்கவில்லை. ஆசிரியர்களுக்குக் கணனிப் பயிற்சியை வழங்குவதைவிட எத்தனையோ பேர் திறமையானவர்கள் இந்தத் துறையில் இருக்கும்போது, அவர்களை ஏன் பாடசாலையில் கணனி போதிப்பதற்குச் சேர்த்துக்கொள்ளக் கூடாது. மேலும் அரசாங்கம் சகல துறைகளையும் கணனி மயப்படுத்த வேண்டும். அவ்வாறு கணனிமயப்படுத்தினால் படித்துவிட்டு வேலையற்று இருக்கும் பல இளைஞர்கள் வேலை வாய்ப்பைப் பெறுவார்கள். இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதுடன், இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

–ஏ.பி.டிக்சன்,....

## கலைக்கூடம்

புதன் என்று வரும் என்று
காத்திருப்போம் முரசே உன்
முகங்காண தினமுரசு
கிடைத்தவுடன்
தடுமாற்றம் கைகளுக்கு ஏன்
தெரியுமா?
இருபத்து நான்கு பக்கங்களில்
முதல் எதைப் பார்ப்பதென்று
கண்ணைப் பறிக்கும் முன்
பக்கம்
கருத்தைக் கவரும் உட்பக்கம்
காதுக்கு இனிய கவிதைக்
களம்
மொத்தத்தில் நீ ஒரு
கலைக்கூடம்.

–எஸ்.புண்ணியம், திருமலை.

# வாசகர் சாலை

### இனிய தினமுரசே!

திடீர் திடீர் திருப்பங்களுடன்...,
தத்தித் தத்தி வாரம் ஒருமுறை நீ
வந்தாலும்,
தித்திப்பான புதுப்
புதுபடைப்புகளையெல்லாம் மனதுக்
கினியவையாக கண்களைப்
பறிக்கிறளவுக்கு...
அள்ளி அள்ளித் தெளிக்கிற உன்னை...,
மீண்டும் மீண்டும் பார்க்கத்
துடிக்கிறளவுக்கு
என் மனதைக் கொள்ளை கொண்ட
தித்திக்கும் தினமுரசே...!
அடுத்த வாரம் எப்போ வருமென்று
ஆவலோடு உனக்காகக் காத்திருக்கும்...

–றதி – பரீஸ், பிரான்ஸ்.

### புதுப்பொலிவு

தினமுரசின் 700 ஆவது வெற்றி வாரத்தை முன்னிட்டு தினமுரசு வாசகர்களுக்காக நடாத்தப்படும் கவிதை, சிறுகதைப்போட்டி பற்றி அறிந்தேன். புத்தாண்டில் பல புதுமைகளைப் படைக்கவிருக்கும் தினமுரசின் முயற்சி பாராட்டத்தக்கது. சகலருக்கும் களம் அமைத்துக் கொடுத்து, எழுத்துப் பசியைப் போக்க நினைக்கும் தினமுரசின் சேவை நம் அனைவருக்கும் தேவை!

–ஆமினா ஹஸனி, கல்முனை - 07.

### கொட்டும் முரசே!

தமிழர் தவிப்புக்களை தடையின்றிக் கொட்டும் முரசே! உன்னில் குறை காண்பார் உண்டோ! சிந்திக்க நல்ல சிந்தனைகள், நாட்டு நடப்புக்கு நல்ல நற்செய்திகள், ஒவ்வொரு எழுத்துக்கும் பெறுமதி சேர்க்கும் உன் பணி, என்ன குறை உன்னிலுண்டு. விண்ணப்பங்கள் உனக்கனுப்ப காத்திருக்கே பல படை. சிந்திக்க வழிசெய்யும் முரசே சற்றுச் சிரிக்கவும் நீ முழங்க மாட்டாயோ இது எனது விண்ணப்பம். நகைச்சுவைகள் தந்து நலம் சேர் எமக்கு. இனியென்ன சொல்ல முடியும் உன்னைப்பற்றி. வாரமொரு முறை முரசு கொட்டும் நீ தினமும் முழங்க மாட்டாயோ என்ற ஏக்கமுண்டு.


–இரா.தாரணி, நுவரெலியா.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென்றால்
# மண்சரிவு, மழை, வெள்ளம் தொடர்ந்தும் மக்களைப் பாதிக்கும்!

சுமார் 87,000இற்கு மேற்பட்ட மக்களை, அவர்களது வாழ்விடங்களை விட்டு வெளியேற்றிய மழை, வெள்ளம், மண் சரிவு ஆகியவற்றிற்குக் காரணம் இயற்கைக் காடுகளை அழிக்கும் சட்டவிரோத மரக் கடத்தல்காரர்களும், திட்டமிடாத வகையில் குடியிருப்புகளை ஏற்படுத்துபவர்களும் தான் என்று மண்சரிவு புவிச்சரிதவியல் ஆராய்ச்சியாளர் கே.எம்.எஸ். பண்டார தெரிவித்தார். சுமார் 3000இற்கு மேற்பட்ட வீடுகள் சேதமுற்றிருக்கின்றன. இதுவரை 18 பேர் மரணமுற்றிருப்பதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்திருக்கின்றது. இந்த நாட்டை ஆண்ட பிரிட்டிஷார், தமது சொந்த தேவைகளை முன்நிறுத்தி மலையகத்தில் திட்டமிடப்படாத முறையில் குடியிருப்புகளையும் வீதிகளையும் அமைத்தமையும் இந்த அனர்த்தத்திற்கு ஒரு காரணமென்று ஆய்வியல் நிபுணர் பண்டார தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்:

மத்திய மலையக மாவட்டங்களான நுவரெலியா, கண்டி, தெற்கே அம்பாந்தோட்டை, கிழக்கே அம்பாறை உட்பட ஆறு மாவட்டங்கள் மழை, வெள்ளம், மண்சரிவு ஆகிய இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இலங்கையில் சுற்றாடல் பாதுகாப்பிற்கென காத்திரமான திட்டங்கள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அது மட்டுமல்ல, இயற்கை வளங்களை பாதுகாப்பதனூடாகத்தான்



நுவரேலியா மாவட்டத்தில் வட்டவளை பிரதேசத்தில் இடம்பெற்ற மண்சரிவு அனர்த்தம்.

தேவையற்ற அனர்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியுமென்பதை அரசியல்வாதிகளாலோ அதிகாரிகளாலோ புரிந்து கொள்ள முடியவில்லை. தேசத்தைப் பாதிக்கக்கூடிய இரசாயனப் பொருட்களை வெளிவிடும் தொழிற்சாலைகளை தங்குதடையின்றி நிறுவதற்கு அனுமதிப்பதும் சதுப்பு நிலங்களை நிரப்பி வீடுகள், தொழிற்சாலைகளை அமைக்க அனுமதிப்பதும் இந்த அனர்த்தங்களுக்குக் காரணமாக அமைகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் குறித்து முன் கூட்டியே எதிர்வு கூறக்கூடிய, செயல்திறன்மிக்க கருவிகளை கால நிலை அவதான நிலையத்திற்கு பெற்றுக் கொடுப்பதோடு அங்குள்ள அதிகாரிகளுக்கு வெளிநாடுகளில் உரிய பயிற்சியும் அளிக்க வேண்டும். இந்தியா போன்ற நாடுகளில் மக்களைப் பாதிக்கும் அணைக்கட்டு, குடியேற்றத் திட்டங்கள் போன்றவற்றை அரசாங்கமோ அல்லது வேறு நிறுவனங்களோ ஏற்படுத்த முனைந்தால் சூழல் பாதுகாப்பு அமைப்புகள் துணிந்து நின்று போராடுகின்றன. ஆனால் இங்கே அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணங்களை முன்வைத்து அனல், ஜலசக்தி மின் திட்டங்களுக்கு எதிராக குரல் எழுப்புகிறார்கள்.

சுனாமிக் கடற்பேரழிவு இலங்கையின் கரையோர மாவட்டங்களைத் தாக்கி 40,000 இற்கு மேற்பட்ட உயிர்களைக் காவு கொண்டது. 5000இற்கு மேற்பட்டவர்கள் இன்னமும் காணாமல் போனவர்கள் பட்டியலில் இருக்கின்றனர். கிட்டத்திட்ட இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் நலன்புரி நிலையங்களில் அகதிகளாக அவல வாழ்க்கையை வாழ்கிறார்கள். இயற்கை அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது மட்டுமல்ல, பாதிக்கப்பட்டவர்களை அவலங்களிலிருந்து விடுவிப்பதும் ஒரு முக்கிய பணியாகும். இது அரசின் பொறுப்பு மட்டுமல்ல, மக்களின் பொறுப்புமாகும் என்று அவர் கூறினார்.

## அமைதியாக அழுது வடியும் அப்பாவித் தமிழ் மக்கள்

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள அப்பாவி மக்கள் அமைதியாக அழுது கொண்டிருக்கிறார்கள். புலிகளின் இரும்புத் திரைகளுக்குப் பின்னால் என்ன நடக்கிறது என்பது வெளி உலகத்துக்குத் தெரியாது. அடிமைகள் போல் வாழும் அப்பாவித் தமிழ் மக்கள் மீது புலிகள் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளைக் மேற்கொண்டு வருகிறார்கள். இதனால் புலிகள் தமிழ் மக்கள் சார்பாகப் பேசும் தகைமையை இழந்து விட்டனர். இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்த சங்கரி விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

## மனிதாபிமான கோரிக்கை

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இனந்தெரியாதவர்கள் என்று கூறப்படும் ஆயுததாரிகளால் மக்கள் படுகொலை செய்யப்படுவதையும், கொழும்பிலும் சுற்றப்புறங்களிலும் வர்த்தகர்கள் கடத்தப்பட்டுக் கப்பம் கோரப்படும் நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்தக் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று, மனிதாபிமான மக்கள் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. கடந்த வருடம் நாட்டில் 956 பேர் காணாமல் போயுள்ளனரென்றும், இவர்களில் 842 பேர் வடக்குக் கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்றும் அவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

## விடுமுறையில் செல்ல முனைந்தவர் சிக்கலில் மாட்டினார்

மாத்தறையிலுள்ள ஹோட்டல் ஒன்றில் 45 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணத்துடன் கைது செய்யப்பட்ட பொலிஸ் சப் - இன்ஸ்பெக்டரும், புலி இயக்க முக்கியஸ்தரும், இரகசிய பொலிஸாரின் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டிருக்கின்றனர். கிழக்கிலுள்ள உப்புவெளி பொலிஸ் நிலையத்திலும், திருகோணமலைத் துறைமுகப் பொலிஸிலும் சம்பந்தப்பட்ட இன்ஸ்பெக்டர் பணியாற்றி வந்துள்ளார். திருகோணமலையின் சுற்றுப்புறப் பகுதியான செல்வநாயகபுரத்தை பிறப்பிடமாகக் கொண்டவர் சம்பந்தப்பட்ட புலி உறுப்பினர். இவர்கள் இருவரும் கடந்த இருவருடத்துக்கு மிடையே நெருக்கிச் செயற்பட்டிருக்கின்றனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. சில மாதங்களுக்கு முன்னர், ஆடம்பரமான பஜிரோ ஜீப் ஒன்றில், இவர்கள் இருவரும், யாழ்ப்பாணம் சென்று திரும்பியிருப்பதாகவும், இலங்கையின் முக்கிய இராஜதந்திரி ஒருவரை இலக்கு வைத்துத் தாக்க உதவியும் ஒத்தாசையும் புரிந்தால், ஒன்றரைக்கோடி ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என சம்பந்தப்பட்ட புலி உறுப்பினர் உறுதியளித்திருக்கிறாராம். அத்துடன் தாக்குதல் வெற்றிகரமாக இடம்பெற்றால், குறிப்பிட்ட இன்ஸ்பெக்டருக்கு, பிரிட்டனில் வாழ்வதற்கான வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டிருந்தது. நீண்டகால விடுமுறையில் செல்ல இன்ஸ்பெக்டர் விண்ணப்பித்ததையடுத்தே, சந்தேகங்கொண்ட இரகசிய பொலிஸார் பின்தொடர்ந்து மோப்பம் பிடித்து, வலைக்குள் சிக்க வைத்துள்ளனர்.

## முக்கிய புள்ளி பலி

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதப்படையினருடன் ஏற்பட்ட மோதலில் சங்கர் என்ற இயக்கப் பெயர் கொண்ட புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார் என்று ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. வந்தாறுமூலையில் இடம்பெற்ற மோதலில் கொல்லப்பட்ட சங்கர், மட்டக்களப்பில் புலிகளின் நிதி சேகரிப்பு பிரிவுக்குப் பொறுப்பாக இருந்தவர் என்றும் ஊடக மத்திய நிலையம் அறிவித்தது. இதேவேளை அரச கட்டுப்பாட்டில் இல்லாத கஞ்சிகுடிச்சாறு பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட புலி இயக்க முகாம்களைப் படையினர் கைப்பற்றிருப்பதாகவும் ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

## சு.க – ஐ.தே.க உறவில் விரிசல் இல்லை
## விரைவில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான, யோசனைகள்

இந் நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றினைக் காணக்கூடிய அரசியல் தீர்வுப் பொதியை இன்னும் இரண்டு மாதங்களிற்குள் முன்வைத்து, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் திட்டமிட்டிருப்பதால் அரசுடன் இணைய முனையும் ஐ.தே.க.எம்.பி.க்களின் ஆதரவு உதவியாக அமையுமென்று சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். சுமார் 20 ஐ.தே.க.எம்.பி.க்கள் அரசாங்கத்துடன் இணையவிருப்பதாக சில வட்டாரங்களின் ஊகங்கள் தெரிவிக்கின்ற போதிலும் 16 பேர் இணையலாமென்று வேறு தரப்பினர் தெரிவிக்கின்றனர். எது எப்படியாக இருந்தாலும் பிரதான அரசியல் கட்சிகளும் இணைந்து செயல்படுவது இலங்கையில் நீண்டகால அரசியல் நோயான இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவுமென்று அரசியல் ஆய்வாளர் மதிவண்ணன் தெரிவித்தார். சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா ஜனாதிபதியாக இருந்தபோது பிரிட்டிஷ் அமைச்சர் லியாம் பொக்ஸின் ஏற்பாட்டின் மூலம் இரு பிரதான அரசியல் கட்சிகளும் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு ஒருங்கிணைந்து செயற்படுவதென்று முடிவுக்கு வந்திருந்தன. இந்த ஒப்பந்தம் லியாம் பொக்ஸ் ஒப்பந்தம் என்றும் அழைக்கப்பட்டது. ஆனால் பிராந்திய சபைகளைத் தீர்வாக முன்வைத்துச் சுதந்திரக் கட்சி அரசாங்கம் பாராளுமன்றத்தில் யோசனைகளை முன்வைத்தபோது, ஐ.தே.க.வினர் அந்தத் தீர்வுப் பிரதிகளை தீயிட்டுக் கொளுத்தியதோடு, குழப்பியுமடித்தனர். இது இந்த நாட்டு அரசியல் பாரம்பரியம் ஏற்படுத்திய சாபக்கேடாகும். அதிகாரத்திலிருக்கின்ற ஒரு கட்சி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு யோசனைகளை முன்வைத்தால் எதிர்க்கட்சி, குழப்பியடிப்பதே இந்த நாட்டின் வரலாறாகும். அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு எதிர்க்கட்சி, முனைவதே இதற்குக் காரணமாகும். இலங்கையின் விகிதாசாரத் தேர்தல் முறையின்படி எந்தக் கட்சியுமே, 100 அல்லது 110க்கு மேற்பட்ட, ஆசனங்களைப் பெறமுடியாது.

இந்த நிலையில் செயலாற்று அதிகாரமிக்க ஜனாதிபதி, தனது அதிகாரத்தை இனப்பிரச்சினைத் தீர்வுக்காகப் பலப்படுத்துவார் என்றால், அதில் தவறு எதனையும் காணமுடியாது. இரண்டு வருடங்களுக்கு சுதந்திரக் கட்சிக்கும், ஐ.தே.க.வுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம், அமுலில் இருக்கப் போகின்றது. இதேவேளை முஸ்லிம் காங்கிரஸும் அரசுடன் இணைந்து செயற்பட முன்வந்திருப்பது நல்ல சகுனம் என்றும் மதிவண்ணன் சொன்னார்.

யானைக்குட்டிகள் எனது பொக்கற்றுக்குள் இருக்கின்றன என்பது போன்ற மாற்றுத்தரப்பினரை சீண்டிவிடும் கதைகள் தவிர்க்கப்படுவது ஆரோக்கியமானதாக இருக்கும் என்றும் அவர் சொன்னார்.

## விமான உதிரிப்பாக விவகாரம்: ஐ.தே.க.வுக்குள் நெருக்கடி

விமான உதிரிப்பாகத்தை யாழ்ப்பாணத்திற்குக் கடத்திச் செல்ல முயற்சி எடுத்தார் என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கும் கொழும்பு மாவட்ட ஐ.தே.க. எம்.பி. மகேஸ்வரன் மீது ஐக்கிய தேசியக் கட்சி ஒழுங்காற்று விசாரணை நடத்த வேண்டுமென்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைக் கோரியுள்ளனர். "பிரிதியன்" என்ற மகேஸ்வரனுக்குச் சொந்தமான சரக்குக் கப்பலில் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லப்படவிருந்த உணவுப் பொருட்களுக்கு மத்தியில் இந்த உதிரிப்பாகம் கண்டு பிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. டென்மார்க் கப்பல் கம்பனியொன்றிடமிருந்து மேற் குறித்த கப்பலை பத்து இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு கடந்த ஏழாம் திகதி தான் கொள்வனவு செய்ததாக மகேஸ்வரன் கூறுகின்றார். ஆனால் 360 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு இக் கப்பலை கொள்வனவு செய்தார் என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே ஜான்ஸ் கிளிப்பர் என்ற கப்பலுக்கும் இவர் சொந்தக்காரராக உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. தென்னாபிரிக்காவின் டர்பன் துறைமுகத்திலிருந்து டென்மார்க் காப்டனுடனும் 16 வியட்நாமிய மாலுமிகளுடனும் கொழும்பு வந்த இந்தக் கப்பல் மகேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## வாகரை நிலையில் மாற்றமில்லை!

வாகரையிலிருந்து தப்பிச் செல்ல முடியாதபடி சுமார் 9500 பேர் சிக்கியுள்ளனரென்று மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். இவர்களில் பெரும்பாலானோர் வயோதிபர்களும், சிறுவர்களும், நோயாளர்களுமாவர். வாகரையிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும்போது ஏற்படக் கூடிய கஷ்டங்களுக்கு முகங்கொடுக்க முடியாததாலேயே இவர்கள் அங்கு தங்கியிருக்கிறார்கள். நத்தாருக்கு முன்னர் இருபது லொறிகளில் உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் இதுவரை உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படவில்லை. இதனால் வாகரைக்குப் பொருட்களைக் கொண்டு செல்ல அனுமதிக்குமாறு புலிகள் இயக்கத்தை மனிதாபிமான அமைப்புக்கள் கோரியுள்ளன.

## நடுநிலை வகித்தல் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும்

### - ஐ.சி.ஆர்.சி.யின் தலைமைப் பேராளர்

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் (ஐ.சி.ஆர்.சி.) பணிகளை நெறிப்படுத்தும் அடிப்படைக் கொள்கைகளுள், அதன் நடுநிலைக் கொள்கையே மிகப் பொதுவாக சர்ச்சைக்குள்ளாகிறது.

போர்த் தரப்புகள் பொதுவாக நடுநிலைக் கொள்கையை ஏற்றுக் கொள்ளுதல் என்பது மிகக் கடினமானதொரு விடயமாக உள்ளது. ஆயுதப் போராட்ட சூழ்நிலைகளில் ஏற்படும் அபிப்பிராயங்கள், நம்பிக்கைகள் அச்சூழ்நிலைகளின் இயல்பையே மாற்றக்கூடியவை. அத்தன்மையானது அனைவரையும், ஏன் மனிதாபிமானப் பணி நிறுவனங்களைக்கூட நடுநிலைத் தன்மையிலிருந்து விலகி நிற்கத் தூண்டக்கூடும். நீங்கள் எங்கள் பக்கமா? அல்லது அவர்கள் பக்கமா? என்ற மனநிலை நடுநிலைக் கொள்கைக்கு இடந்தராத ஒரு வரைவிலக்கணமாகும். சார்பாக நடக்க மறுக்கும் செஞ்சிலுவை சர்வதேசக் குழு போன்ற நிறுவனங்கள் நன்மைக்கும் தீமைக்கும் இடையில் வேறுபாடு காணத் தெரியாதவர்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றன என்று, இலங்கைக்கான ஐ.சி.ஆர்.சி.யின் தலைமைப் பேராளர் ரோன் வன்டன்கோவ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிரியின் செயல்கள் குற்றங்களாக தென்படுகையிலும் கூட, ஐ.சி.ஆர்.சி.போன்ற நிறுவனங்கள் தாம் நடுநிலையாளர்கள் என்று சொல்லிக் கொள்வது, முரண்பட்டு நிற்கும் தரப்புகள் நன்மைகள் கிடைக்கும்போது இவர்களை நேர்மையானவர்கள் என்றும் அல்லது தீமை கிட்டும்போது பக்கம் சார்ந்து போனவர்கள் என்றும் சொல்லக்கூடும்.

வேதனை, பயம், வெறுப்புணர்வு போன்ற தீவிர உணர்வுகளுக்குப் போர் காரணமாய் உள்ளது. தமது கண் முன்னாலேயே தமது வாழ்வாதாரங்கள் அழிக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டு நிற்பவர்களுக்கு, நடுநிலைக் கொள்கையை ஏற்றுக் கொள்வதென்பது முடியாததொன்று என்பதை ஐ.சி.ஆர்.சி. நன்கு புரிந்து கொண்டுள்ளது. உலகளாவிய ரீதியில் ஐ.சி.ஆர்.சி. பணியாளரில் அநேகமானோர் அனர்த்தங்களை தினமும் கண்டு அனுபவிக்கும் நாடுகளின் பிரஜைகள். அவர்களில் அநேகர் போரினால் பாதிக்கப்பட்டவர்கள். அவர்கள் நிச்சயமாக தவறிழைக்க மாட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. அதே வேளை, இலங்கையிலும் மற்றும் ஏறத்தாழ 80 நாடுகளிலும் பணியாற்றுகின்ற 12,000 இற்கு மேற்பட்ட ஐ.சி.ஆர்.சி. பணியாளர்கள் தமது கடமையில் காட்டும் அர்ப்பணிப்பு சந்தேகத்திற்கப்பாற்பட்டது. தினசரி கணிசமான தமது உயிராபத்தின் மத்தியில் மக்கள் படும் துயரத்தைக் கண்ணால் காணும் அவர்கள் நடுநிலையாகவே எப்போதும் நடந்து கொள்வதை, அவர்கள் துன்பங்களைக் கண்டும் பாராமுகமாய் அலட்சியமாய் இருக்கிறார்கள் என்று அர்த்தம் கொள்ளலாகாது என்றும் தெரிவித்தார்.

## சர்ச்சையைக் கிளப்பும் மற்றுமிரு தூக்குத் தண்டனைகள்

ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட உலகளாவிய ரீதியில் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்புகளுக்கு மத்தியில் சதாம் ஹுசேனின் ஒன்று விட்ட சகோதரர் பர்சான் என்பவரும், முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரியான ஹமீத் அல் பண்டாஹ் என்பவரும் தூக்கிலிடப்பட்டமை குறித்து உலகளாவிய ரீதியில் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. சதாம் ஹுசேன் தூக்கிலிடப்பட்ட அதே கட்டிடத் தொகுதியிலேயே இவர்கள் இருவரும் தூக்கிலிடப்பட்டிருக்கிறார்கள். சதாமின் ஒன்று விட்ட சகோதரர் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் தூக்கிலிடப்பட்டார் என்று எழுந்த குற்றச்சாட்டுக்கள் புதிய சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றன.

## யாழ்.மக்களின் உணவுப் பிரச்சினை பற்றி பிரணாப் முகர்ஜிக்கு அமைச்சர் டக்ளஸ் விளக்கம்

கடந்த ஒன்பதாம் திகதி கொழும்புக்கு வருகை தந்திருந்த இந்திய வெளிவிகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியுடன், தென்னிந்தியாவிலிருந்து யாழ்.குடா நாட்டுக்கு உணவுப் பொருட்களை எடுத்து வருவது தொடர்பாக சமூகசேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடினார். இலங்கையின் அரசியல் நிலை, குறிப்பாக யாழ்.குடா நாட்டு நிலை தொடர்பாகக் கேட்டறிந்த இந்திய அமைச்சர், யாழ். மாவட்ட எம்.பி.யான அமைச்சர் தேவானந்தாவின் கருத்துக்களை உன்னிப்பாகக் கேட்டறிந்தார். கடந்த நான் காம் திகதி தென்னிந்தியாவிலிருந்து காங் கேசன்துறைக்குக் கொண்டு வரப்பட்ட உணவுப் பொருட்களை இறக்குவது தொடர்பாக ஏற்பட்ட தாமதங்கள் பற்றியும் முகர்ஜிக்கு விளங்கப்படுத்தப்பட்டது. இனிமேல் தென்னிந்தியாவிலிருந்து ஊர்காவற்றுறைக்குப் பொருட்களை எடுத்து வந்து இறக்குவதில் இருக்கக் கூடிய சாத்தியங்கள் பற்றியும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் விளங்கினார். இவற்றையெல்லாம் கேட்டறிந்த அமைச்சர் முகர்ஜி, இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்குவதாகவும் கூறினார்.

இதற்கிடையில் ஆகஸ்ட் மாதம் பதினொராம் திகதி ஏ-9 பாதையிலுள்ள முகமாலை முன்னரங்கப்பகுதி மீது புலிகள் நடத்திய தாக்குதலால் சீர்குலைந்து போன யாழ். குடா நாட்டுக்கான பொருட்களின் விநியோகத்தைச் சரிவரக் கையாள்வதற்கு யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து பல வெகுஜன ஸ்தாபனங்கள் பாராட்டிக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளன. ஓரளவுக்கு நிலைமை சீரடைந்துள்ள போதிலும், உரிய தரப்பினருக்கு அழுத்தம் கொடுத்து மேலும் பொருட்களை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அழுத்தம் கொடுக்குமாறும் அமைச்சரை இந்த அமைப்புகள் கேட்டுள்ளன. இதேவேளை, யாழ்ப்பாணத்தில் தனியார் வர்த்தக நிறுவனங்கள் பொருள் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள போதிலும், பதுக்கல், ஊழல் நடவடிக்கைகளைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று யாழ். மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## ஊழலுக்கு இடம் தராமல் உண்மையாக செயலாற்றுங்கள்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

**தைப்பொங்கலைக்** கொண்டாடிய அனைவருக்கும் என் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்.

வடக்கில் - பொருட் தட்டுப்பாடு, கிழக்கில் அகதி அவலம், மேற்கு, மத்தியில் மண்சரிவு, வெள்ளம் எனும் இயற்கை அனர்த்தம், தெற்கில் அரசியல் அவலம் என்று நாட்டின் பல பகுதிகளிலும் வாழும் மக்களின் நிலை மிகப் பரிதாபமானதாக இருக்கிறது.

யுத்தத்தின் சுமைகளாகி விட்ட மக்களையும், இயற்கை அனர்த்தம் தாக்கிய மக்களையும் மீட்கவும், பராமரிக்கவுமான பெரும் கடினமான பணி அரசின் மீது விழுந்துள்ளது. பயங்கரவாத எதிர்ப்புகள் ஒருபுறமும், அரசியல் எதிர்ப்புகள் மறுபுறமுமாக அரசுக்குச் சீரான சேவையை நடத்தத் தடையாக இருக்கின்றபோதும், பல வகையான விமர்சனங்களையும் தாங்கியபடி செயலாற்ற வேண்டியுள்ளது. இதை உணர்ந்து அரசு செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் கட்சி, அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் அனைவரும் ஒன்றிணைந்து மக்களுக்கான சேவையைச் செய்ய முன்வர வேண்டும். துரதிர்ஷ்டவசமாக இத்தகைய சூழ்நிலை இலங்கையில் எக்கால கட்டத்திலும் ஏற்பட்டதே இல்லை.

அரசியல் போக்கு பற்றிப் பேசி நியாயம் தேட முற்பட்டாலும் அதற்கெல்லாம் அப்பால், சரியான திட்டமிடலோடு சுமார் 55000 பேர் அகதிகளாகவும், வெள்ளம், மண்சரிவு காரணமாக சுமார் 87000 பேரும் நிவாரணத்தை நம்பி வாழும் நிலையில் உள்ளனர். இது சவால் மிக்க பணியாகிய போதும், அரசு இச்சவாலை எதிர்கொண்டு சேவையாற்ற வேண்டும். இப்பணியின்போது முறைகேடுகள், அதிகார துஷ்பிரயோகங்கள், பதுக்கல்கள், இடம்பெற அதிக வாய்ப்புகள் உள்ளன. எனவே இந்த விடயத்திலும் அரசு கூடுதல் கவனத்துடன் அதிகாரிகளை வழிநடத்த வேண்டும். அதையும் மீறி தவறு செய்யும் அதிகாரிகளுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். அரசும், தொண்டு நிறுவனங்களும் மக்களுக்காக ஒதுக்கீடு செய்யும் அனைத்தும் உரிய மக்களைச் சென்றடைய ஒவ்வொரு அதிகாரியும் அர்ப்பணிப்போடு செயலாற்ற வேண்டும்.

இதேவேளை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை அரசு முன்வைக்கும் என்ற எதிர்பார்ப்புகள் தோன்றியிருக்கும் தற்போதைய நிலையில், ஆளும் கட்சிக்கும் பிரதான எதிர்க்கட்சிக்கும் இடையே செய்துகொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் தன்னோக்கத்தை அடையாமலே காலாவதியாகிவிடுமோ என்ற ஒரு நிலையும் ஏற்பட்டுள்ளது. இதற்குப் பிரதான காரணம், எதிர்க்கட்சியிலிருந்து சில உறுப்பினர்கள் ஆளும் கட்சியுடன் இணைந்து கொள்ளவுள்ளதால், விரைவில் புதிய அமைச்சரவை மாற்றங்களும், அரசியல் மாற்றங்களும் நிகழவுள்ளதாகும். ஜனாதிபதிக்கு தனக்கு ஆதரவு தெரிவிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ளும் தேவை உண்டு. அதேவேளை எதிர்க்கட்சிக்குத் தனது உறுப்பினர்களின் கட்சித் தாவலையும், கட்சியின் கட்டுக்கோப்பையும் பாதுகாக்க வேண்டிய தேவையும் உண்டு. இந்த இரு நிலைப்பாடுகளும் ஏற்படுத்தப்போகும் தாக்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளையும், அதற்காக தென் இலங்கை அரசியல் கட்சிகளிடத்தில் எதிர்பார்க்கப்பட்ட இணக்கப்பாட்டை சீர்குலைந்துவிடுமோ என்ற சந்தேகங்கள் இன்று எல்லோரிடமும் ஏற்பட்டுள்ளது.

ஆகவே கட்சித் தாவல்கள், பதவிப் பரிமாற்றங்கள் என்பன ஒரு காரணமாக மாறிவிடாமல் இருக்க வேண்டும். மாறாக அரசியல் தேவைகளுக்கு முதன்மை இடம் கொடுத்து இனப்பிரச்சினையின் தீர்வை பின்னுக்குத் தள்ளினால் விளைவு விருப்பத்துக்குரியதாக இருக்காது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# இலங்கை - இந்திய ஒப்பந்தம்; ஒரு பொன்னான வாய்ப்பு

**இலங்கை** - இந்திய ஒப்பந்தம் இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கிடைத்த ஓர் பொன்னான வாய்ப்பு. இப்படிக் கூறியவர் தற்போதைய சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தா. கிட்டத்தட்ட 19 வருடங்களுக்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு பதினாறு வருடங்களுக்கு மேலாகி விட்டன. தமிழர்களின், தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழ்விடமான வடக்கு - கிழக்கைத் தற்காலிகமாக இணைத்த இலங்கை - இந்திய ஒப்பந்தம், கடந்த வருடம் அக்டோபர் மாதம் 16ஆம் திகதி இலங்கையின் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம் பிரிக்கப்பட்டிருக்கிறது. வடக்கையோ கிழக்கையோ பிரதிநிதித்துவப்படுத்த வக்கற்ற சிங்களக் கடும்போக்காளர்களுக்குக் கிடைத்த இந்த வெற்றி, தற்காலிகமானதா? நிரந்தரமானதா? என்பதைக்



இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைசாத்தானபோது...

காலந்தான் தீர்மானிக்க வேண்டும். இந்த இணைப்போ? பிரிப்போ? நிரந்தரமானதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கும் முக்கிய அம்சமாகத் தமிழ் பேசும் மக்கள் எதிர்காலத்தில் நடத்தப் போகும் அரசியல் போராட்டங்கள் விளங்கப் போகின்றன.

கிழக்கு மாகாணத்தில் ஐம்பத்தியொரு சதவீத நிலப் பரப்பில் சிங்கள மக்கள் வாழ்வதாக சிங்கள பௌத்த கட்சியான ஜாதிக ஹெல உருமயவின் தலைவரான அத்துரலிய ரத்ன தேரர் எம்.பி தெரிவிக்கிறார். காலங்காலமாக சிங்கள - பௌத்த மேலாதிக்கவாதிகள் கட்டவிழ்த்து விட்டு வந்த வரலாற்றுத் திரிபுகளின் ஓர் அந்தத்தில் தொங்கிக் கொண்டு தேரர் கதையளக்கிறார். அரச போகத்தைத் தூக்கியெறிந்துவிட்டு அரச மரத்தை நோக்கிச் சென்று, ஞானம் பெற்றவர் போதி மரத்துப் புத்தர் சித்தார்த்தர். அரச மரத்தின் கீழ் ஞானம் பெற்ற புத்தரின் போதனைகளைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொண்டு அரச போகத்தைப் பெற்றுக் கொண்டு, வாழ்பவர்கள் பொய்களையும் புனைகதைகளையும் கூறுவது வேதனைக்குரியது. கிழக்கில் 51 சதவீத நிலப்பரப்பு சிங்கள மக்களின் கட்டுப்பாட்டிலிருப்பதாகத் தேரர் கூறுவது பச்சைப் பொய்யாகும். மகாவலி கங்கையின் வடபுறக் கரையோரப் பிரதேசங்களில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களின் வாழ்விடங்கள் திட்டமிட்டுப் பறிக்கப்பட்டு, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்களை அரசாங்கங்களே மேற்கொண்டு வந்திருக்கின்றன. 1950களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இக் குடியேற்றத் திட்டங்களால் தமிழ்பேசும் மக்களின் இனப் பரம்பலும் செறிவுகளும் குறைக்கப்பட்டன. தமிழ் பேசும் மக்களின் வாழ்விட நிலத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. இன்று கிழக்கில் வாழும் மக்களில் மூன்றிலொரு பகுதியினரே தமிழர்களென்றும் தேரர் புருடா விட்டிருக்கிறார்.

மகாவலியின் வடபுறத்தே தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டுமென்று தமிழர் தரப்புகள் தொடர்ச்சியாகவே கோரிக்கை விடுத்து வந்திருக்கின்றன. இந்தியத் தலைவர்களுடனும் இலங்கைத் தரப்பினருடனும் தமிழ்க் கட்சிகளும் அமைப்புகளும் நடத்திவந்த பேச்சு வார்த்தைகளின்போது இக் கோரிக்கை முக்கியமாக முன்வைக்கப்பட்டிருக்கிறது. இதன் எதிரொலியாகவே வடக்கு - கிழக்கு இணைப்பை வற்புறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ராஜிவ் காந்திக்கு ஏற்பட்டது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட அன்றைய ஜனாதிபதி ஜெயவர்த்தனாகூட, இணைப்புக்கு எதிராக இழுத்தடிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்திருக்கிறார்.

முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படுமென்ற நிபந்தனையுடன், வடக்கு - கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாக முஸ்லிம்கள் சார்பில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். இது முஸ்லிம்கள் தரப்பில் வெளிவந்திருக்கும் சரியான நிலைப்பாடு. திம்புலாகல தேரர் போன்றவர்கள் அரசாங்கங்களின் அனுசரணையுடன் மேற்கொண்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் மூலம் கிழக்கில், குறிப்பாக அம்பாறை விவசாயிகளின் வாழ்விடங்களும் வயற் காணிகளும் ஏப்பமிடப்பட்டிருக்கின்றன. கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் காரணமாக முஸ்லிம் மக்களின் சனத்தொகையும் விகிதாசாரமும் வீழ்ச்சியடைந்திருக்கிறது என்பது கிழக்கு மாகாண முஸ்லிம் தலைவர் களுக்கு தெரியாததல்ல.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், வடக்கு - கிழக்கு நிலை

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

தொடர்பான பாராளுமன்ற விவாதத்தில் பேசும்போது, வடக்கு - கிழக்கு இணைந்திருக்க வேண்டுமென்றும் இந்த இணைப்பு தகர்க்கப்படக் கூடாதென்றும் கோரிக்கை விதித்திருக்கிறார். காலம் கடந்த சுடலை ஞானம் சம்பந்தன் ஐயாவுக்கு ஏற்பட்டிருக்கிறதென்றே சொல்ல வேண்டும். இருபது வருடங்களுக்கு முன்னரே வடக்கு - கிழக்கு இணைப்பை வலியுறுத்திய இந்தியா, அதுவே தனது நிலைப்பாடென்றும் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது. இந்தியாவினால் அபிப்பிராயங்களை மட்டுமே தெரிவிக்க முடியுமேயொழிய, படைகளை அனுப்பிப் பலாத்காரமாக இணைப்பை ஏற்படுத்திவிட முடியாது. இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் ஒரே வழியென அன்றிலிருந்து இன்றுவரை வலியுறுத்தி வரும் இந்தியா, வடக்கு - கிழக்கு இணைப்பென்பது அந்தத் தீர்வின் மூலக்கூறு என்றும் அடித்துச் சொல்லி வருகிறது. ஆனால், புலிகளின் இயக்கத்தின் தொடர்ச்சியான நடவடிக்கைகள்தான் வடக்கு - கிழக்கு இணைப்பைப் பிரித்திருக்கிறதென்பதை சம்பந்தன் ஐயாவுக்கு இடித்துச் சொல்ல வேண்டியிருக்கிறது.

புலிகளுக்காக வாய் கிழியக் கத்தும் சம்பந்தன் ஐயா, புலிகள் இயக்கத்துக்குப் பயந்து தொடை நடுங்கிய காலத்தில், அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரிடம் கெஞ்சிக் கூத்தாடி, தோப்புக்கரணம் போட்டு, குண்டு துளைக்காத சிவப்பு நிற வாகனமொன்றினைப் பெற்றதை நாம் பிழையென்று கூற வரவில்லை. கலாநிதி நீலன் திருச்செல்வத்தைப் போன்று, அன்று சந்திரிகா குமாரதுங்கா சமர்ப்பித்த தீர்வுப் பொதி சம்பந்தமாக ஆலோசனைகள் கூறியவரென்ற வகையில் புலிகளின் துப்பாக்கி அச்சுறுத்தலுக்கு அவரும் உள்ளாக்கப்பட்டிருந்தார்.

புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும், மோதல்களை நிறுத்த வேண்டும் என்ற இரு நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இலங்கை - இந்திய ஒப்பந்தம் வடக்கையும் கிழக்கையும் இணைத்தது. இந்தத் தொழில்நுட்பக் காரணங்களை முன்வைத்தே, ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றம் வடக்கு -

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## ஐக்கியமும் போராட்டமும்

தமிழ் பேசும் மக்களைக் குறிப்பாக வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களை அடித்தளமாக கொண்டியங்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கியமும் போராட்டமும் என்ற இருமுனை உத்திகளைக் கையாண்டு தனது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. "மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி; என்றும் பிரிக்க முடியாத வடக்கு - கிழக்கு இணைப்பு; அதற்குள் முஸ்லிம் மக்களுக்கோர் அகச்சுயாதிக்கம்" என்பதே ஈ.பி.டி.பி.யின் மூலக் கோட்பாடாகும். சுமார் 18 வருடங்களுக்கு பின்னர் வடக்கு - கிழக்கு தற்காலிக இணைப்பு பிரிக்கப்பட்டமைக்கு காரணம் சிங்களக் கடும் போக்காளரின் முயற்சி மட்டுமல்ல, இந்த இணைப்பைத் தொடர்ந்து பேணி நிரந்தரமாக்குவதற்கு தமிழ் அமைப்புகளும், கட்சிகளும் ஐக்கியப்பட்டு செயற்பட முன்வராமையும் காரணமாகும். புலிகள் இயக்கமும் அதன் முகவர் அமைப்புகளும் தமிழ் ஈழ கோஷத்தைக் கைவிட்டு வடக்கு - கிழக்கு இணைந்த பாரம்பரிய தமிழ் பூமியை கட்டிக் காப்பதற்கு ஐக்கியப்பட வேண்டும். மாற்றுக் கருத்துக்கள் கொண்டவர்கள் என்பதற்காக மற்ற தமிழ் தரப்புகளை எமலோகத்துக்கு அனுப்பி வைக்கும் கும்பல்கள் சிங்களக் கடும் போக்காளர்களுக்கே பாதபூசை செய்கின்றன என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். எதிரி யார், நண்பன் யார் என்பதை வேறுபடுத்திப் பார்க்க முடியாத அரசியல் குருடர்கள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கெதிராக செயற்படுபவர்கள் என்பதே உண்மை. தமிழ் மக்களுக்குச் சார்பாக தமிழ் மக்களின் நடவடிக்கைகளுக்குக் கைகோர்ப்பதும் தமிழ் மக்களின் நலன்களை மறுக்கும் நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவதும் ஈ.பி.டி.பி.யின் நிலைப்பாடு.

## மண் பறிப்பு மூட்டிய தீ!

வடக்கு - கிழக்கு மண் பறித்தெடுக்கப்பட்ட விபரங்களைப் பல தடவைகள் இந்தப் பகுதியில் நாம் ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்தியிருக்கிறோம். திருகோணமலை மாவட்டத்தில், இலங்கை சுதந்திரம் பெற்றபோது ஐந்து சதவீதமாக இருந்த சிங்கள மக்களின் எண்ணிக்கை, இரண்டாயிரமாம் ஆண்டுக்குப் பின்னர் எப்படி 38 சதவீதமாக மாறியதென்பதை, அங்கு மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்திட்டங்கள் பற்றிய புள்ளிவிபரங்களுடன் அம்பலப்படுத்தியிருந்தோம். தமிழர்களின் பாரம்பரிய பூமிகளாக விளங்கிய கந்தளாய், கல்லோயா போன்ற இடங்களில் டி.எஸ்.சேனநாயக்கா பிரதமராகவிருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சிங்களக் குடியேற்றத்திட்டங்கள் தங்கு தடையின்றித் தொடர்ந்து வந்துள்ளன.

1946ஆம் ஆண்டு கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி, அப்போதைய மொத்த சனத்தொகை 2,79,112 ஆகும். இதில் 27,556பேர் மட்டுமே சிங்களவர்கள். அதாவது சிங்கள மக்களின் விகிதாசாரம் மொத்த சனத்தொகையில் 9.87 சதவீதம் மட்டுமே ஆனால், 1981ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி கிழக்கின் மொத்த சனத்தொகையில் 24.98 சதவீதத்தினராக சிங்கள மக்களின் எண்ணிக்கை வளர்ச்சியடைந்தமைக்கு திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்களே காரணம். தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் மொத்த விகிதாசாரம் 75.02 சதவீதமாகவிருந்தது. 1921ஆம் ஆண்டு கிழக்கில் சிங்கள மக்களின் விகிதாசாரம் 4.5 சதவீதமாக இருந்ததென்று மகாவலி அபிவிருத்திச் சபையின் முன்னாள் பணிப்பாளரான டி.தர்மசேன குறிப்பிட்டுள்ளார். வடக்கு, கிழக்கிலிருந்து 1947ஆம் ஆண்டு முதல் 1956ஆம் ஆண்டுவரை எந்தவொரு சிங்கள எம்.பி.யும் தெரிவு செய்யப்படவில்லை. முதன் முதலாக 1960ஆம் ஆண்டு அம்பாறையிலிருந்து சிங்களவரொருவர் எம்.பி.யாகத் தெரிவு செய்யப்பட்டார். வடக்கில் முதலாவது சிங்கள எம்.பி. 1990களுக்குப் பின்னர்தான் வவுனியாவிலிருந்து தெரிவு செய்யப்பட்டார்.

முல்லைத்தீவு, மணலாறு என்ற இடத்தின் பெயர் சிங்களத்தில் வெலிஓயா என்று மாற்றப்பட்டு, 3364 சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. உடவளவையில் மகாவலிக் குடியேற்றத் திட்டத்தின்கீழ் 85, 773 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. இவற்றுள் 1121 குடும்பங்கள் மட்டுமே தமிழர்கள். முஸ்லிம்கள் தரப்பில் 2,703 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. தமிழ் பேசும் மண்ணை அபகரித்தவர்களே, இந்த நாட்டில் இனப் பிரச்சினையைத், தோற்றுவித்த பிரம்மாக்கள். இந்த இனவெறி நோய்க்கு நிவாரணம் காணப்படவில்லையென்றால், பிரச்சினை தீரப் போவதில்லை.

## ஊரிலிருந்து....



தைப்பொங்கல் கொண்டாடத்திற்குப் பொருட்கள் அனுப்பிவச்ச அத்தனை பேருக்கும் முதலில என்ர நன்றிகள் உரித்தாகட்டும்.
இங்க யாழ்ப்பாணதில இருக்கிற நோயாளிக்கு ஒரு முக்கியமான மருந்தை கொழும்பில் இருந்து வேண்டி அனுப்ப முடியாத நிலையில நண்பர் ஒருவர் இருக்கிறாருங்கோ. அவரின்ர சகோதரன் கொழும்பில் இருக்கிறார். மருந்தும் வேண்டி வச்சிருக்கிறார், தபாலில அனுப்பினால் எத்தனை மாதம் செல்லுதோ எண்டு யோசிச்சுக் கொண்டு இருக்கிறார். விமானம் மூலமாக யாரும் பிரயாணம் செய்தால் கொடுத்து விடலாம் எண்டால், முன்னப் பின்னத் தெரியாதவை உதவப் பயப்படுகினம், தெரிஞ்சவை யாரும் யாழ்ப்பாணம் போறதாகவும் இல்லையாம், பாவம் ஒரு சகோதரனுக்கு இன்னொரு சகோதரன் உதவ முடியாத கொடுமையாக் கிடக்குதுங்கோ.
நிலமை மாறுமே?

# சாதிக்குமா சர்வகட்சி மாநாடு?

**இலங்கையில்** எரிந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் - தீர்வுத்திட்ட யோசனைகளை இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முன்வைக்கும் முஸ்தீபுகள் உள்ளன.

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவினால் கூட்டப்பட்ட அனைத்துக்கட்சிகளின் கூட்டம் இனப்பிரச்சினைத் தீர்வுத்திட்டத்தை முன் வைப்பதற்கு முன், தென் இலங்கையில் ஒரு அரசியல் இணக்கப்பாடு ஏற்படவேண்டும் என்ற எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் விதமாக அமைந்தது. இலங்கையின் வரலாற்றில் டி.பி. விஜயதுங்க தவிர்ந்த அனைத்து ஜனாதிபதிகளாலும் அனைத்துக்கட்சிகளின் கூட்டம் நடத்தப்பட்ட போதும், இனப்பிரச்சினைக்கானத் தீர்வு தொடர்பில் அந்த அனைத்துக்கட்சிகள் கூட்டங்களில் எத்தகையதொரு முன்னேற்றங்களையும் காணமுடியவில்லை.

ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தற்சமயம் கூட்டியிருக்கும் அனைத்துக்கட்சிக் கூட்டம் கடந்த ஜனவரி எட்டாம் திகதி நடந்த இறுதிக் கூட்டத்துடன் 22 அமர்வுகளைக் கடந்துள்ளது. தவிரவும், முக்கியமான திருப்புமுனையையும் ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே நடந்த 21 கூட்டங்களிலும் விவாதிக்கப்பட்ட விடயங்கள் வெங்காயத்துக்குள் விதை தேடியது போல் அமைந்திருந்தது எனலாம்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதித்துவம் இல்லாமல் ஏனைய கட்சிகளின் தலா ஒவ்வொரு பிரதிநிதிகள் பங்கு கொண்ட நிலையில் நடந்தது. இதில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே தமிழ்க் கட்சியாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மட்டுமே பங்கு கொண்டது. முஸ்லிம் மக்களையும், மலையக மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி முஸ்லிம் கட்சிகளும், மலையகக் கட்சிகளும் கலந்து கொண்டன. இந்த நிலையில் மேலக மக்கள் முன்னணி இந்த அனைத்துக் கட்சியிலிருந்து இடை நடுவில் விலகிக் கொண்டது. இந்த நிலையில் முன்னர் நடைபெற்ற சர்வகட்சி மாநாடுகளில், பேரினவாதக்கட்சிகளின் விதண்டாவாதவிவாதங்களே அதிகமாக இடம்பெற்றது. அதாவது தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் என்ன பிரச்சினை இருக்கிறது, அவர்களுக்கு ஏன் தீர்வு வழங்கப்படவேண்டும், இலங்கையில் தமிழர்களுக்கு பூர்வீக உரிமை இல்லை என்றவாறெல்லாம் எரிச்சல் தரக்கூடிய விவாதங்களும் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன. இதற்கு எதிராகவும், அவர்களுக்கு விளக்கமளிக்கும் வகையிலும் ஈ.பி.டி.பி.யின் பிரதிநிதியான எஸ்.தவராஜா தமிழர்களின் வரலாற்றுப் பின்னணியையும், தமிழர்களுக்கு மறுக்கப்பட்ட நியாயங்களையும், தமிழர்களை அடக்குவதற்கு எடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களையும், தமிழர்கள் இவற்றையெல்லாம் எதிர்த்து நடத்திய அகிம்சைப் போராட்டங்களையும், பின்னர் போராட்டம் வளர்ச்சி கண்டு வன்முறைக்குள் புகுந்ததையும் விளக்கிக் கூறினார். அவர் சமர்ப்பித்த மேலே குறிப்பிட்டவை அடங்கிய விளக்கங்கள் ஓர் ஆய்வுக்கட்டுரையாக சர்வகட்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது. அது தமிழாக்கம் செய்யப்பட்டு முரசில் பிரசுரிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இந்த நாட்டில் தமிழ்மக்களுக்கு பிரச்சினைகள் உண்டு அவை கௌரவமான அரசியல் தீர்வின் மூலம் தேவையான சட்டதிருத்தங்கள் செய்யப்பட்டு தீர்வு காணப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தார்.



இதில் கவனிக்க வேண்டிய விடயம் வடக்கு, கிழக்கு தமிழர்களின் பிரச்சினை பற்றியும் அதற்கான தீர்வு பற்றியும் உரிமையோடும் உரக்கவும் எடுத்துக் கூறவேண்டிய இவ்வாறான பல சந்தர்ப்பங்களையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நழுவவிட்டுள்ளது. எப்போதும் இவ்வாறான களம் அமைகின்றபோது அதை ஆய்வு செய்து பாராமல் , தமிழர்களின் நியாயங்களை முன்வைக்காமல் தூர விலகி நின்று கொண்டு எதிர்ப்பதும், உண்மைக்குப் புறம்பாக விமர்சிப்பதும் விவேகமற்ற போக்காகும். துரதிஷ்டவசமாக தமிழர்களின் அரசியலில் அப்படியும் ஒருபக்கம் அன்று முதல் இன்று வரை எழுதப்பட்டுக் கொண்டே வருகிறது. அவ்வாறான தவறான பக்கங்களின் கதாநாயகர்கள் துணிச்சலோடும், நம்பிக்கையோடும் மாற்றுத் திட்டங்களுடன் தமிழர்களைக் குறிவைக்கும் எத்தகைய களத்திலும் இறங்கி நியாயம் கேட்கவும், மாற்று அபிப்பிராயங்களை முன்வைக்கும் தமிழ் மக்களின் ஜனநாயக அரசின் பிரதிநிதிகளை துரோகிகள் என்று கூறித் தப்பித்துக் கொள்ளுவதும்தான் தமிழ் மக்களுக்குச் செய்யும் பெரும் துரோகமாகும் என்பதை உரியவர்கள் புரிந்து கொள்வது அவசியமாகும்.

இதற்கு உதாரணம் 2000ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஒரு அரசியல் தீர்வை முன்வைத்தபோது, அந்த தீர்வு ஆலோசனைகளை ஆராய்ந்து தமிழர்களின் நலன்களை எடுத்துக்கூறி என்ன குறைபாடுகள் உள்ளன, அதை எவ்வாறு நிவர்த்திக்கலாம் தவிரவும் மேலதிகமாக என்ன விடயங்களை இணைத்துக்கொள்ள வேண்டும் என்று 19 பக்க இணைப்பு ஒன்றையும் ஈ.பி.டி.பி. சமர்ப்பித்திருந்தது. அதை சந்திரிகா அம்மையாரும் ஏற்றுக்கொண்டார். ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தை, தமிழர் விடுதலைக் கூட்டணியும் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க.வுடன் சேர்ந்து எதிர்த்தனர். ஐ.தே.க. பாராளுமன்றத்துக்குள்ளேயே அந்தத் தீர்வுப் பொதியைத் தீயிட்டு எரித்தது. இது வரலாறு.

இது இவ்வாறு இருக்க தற்போது சர்வகட்சிகள் கூட்டம் முன்னைய அனுபவங்களையும், பெரும்பான்மை நிபுணர்குழுவின் ஆலோசனைகளையும் உள்வாங்கிக் கொண்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத்திட்டம் ஒன்றை வரையும் ஒரு முக்கியமான திருப்பத்துக்கு வந்துள்ளது. அதாவது கடந்த எட்டாம் திகதி நடந்த சர்வகட்சிக் கூட்டத்திற்கு ஐ.தே.கட்சியின் இரு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ஜி.எல்.பீரிஸ், கே.என்.சொக்ஸி ஆகிய இருவருமே கலந்து கொண்டவர்களாவர்.

ஏற்கனவே நிபுணர்களின் பெரும்பான்மைக் குழு சமர்ப்பித்த தீர்வு யோசனைகளையும், அவை வெளியானதையும் ஒரு காரணமாகக் கூறி சர்வகட்சி மாநாட்டிலிருந்து வெளியேறி விடுவோம் என்று கூறிக்கொண்டிருக்கும் ஜே.வி.பி., ஜே.எச்.யு.ஆகிய கட்சிகள் தற்போது ஒரு புதுப் பிரச்சினையைத் தூக்கியுள்ளது.

ஏற்கனவே சர்வகட்சி மாநாட்டில் ஒவ்வொரு கட்சிகளையும் சேர்ந்த தலா ஒரு பிரதிநிதிகள் கலந்து கொண்டிருக்கையில் ஐ.தே.கட்சி மட்டும் எவ்வாறு இரு பிரதிநிதிகளை அனுப்ப முடியும் என்பது தான் தற்போதைய சர்ச்சையாகவுள்ளது. உண்மையில் ஒருவரோ பத்துப்பேரோ கலந்துகொண்டாலும் அவர்கள் குறித்த கட்சியின் ஒற்றை முடிவையே பிரஸ்தாபிப்பார்கள் என்பது ஒன்றும் புரியாத புதிரல்ல.

தென்னிலங்கையில் ஒரு கருத்து உடன்பாடு ஏற்பட்டால்தான் பிரச்சினையைத் தீர்க்க முடியும். ஆகவே இதுபோன்ற அரசியல் காரணங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வெறுமையான காரணங்களைக் கைவிட்டு, அனைத்துக் கட்சிகளும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். ‘கூடிவரும்போது குடும்பி நட்டுக் கொண்டு நிற்குமாம்’ என்பது போல், தற்போதுள்ள நிலையை தேவையற்ற சர்ச்சைகளைக் கூறி குழப்பியடித்தால் அது இந்த நாட்டின் சாபக்கேடாகும். இந்தச் சூழலை சமாளிக்கவும் எதிர்கொள்ளவும் ஜனாதிபதியின் துணிச்சல் மிகுந்த செயற்பாடு அவசியமாகும்.

சர்வகட்சி மாநாட்டுக்குத் தலைமை ஏற்றிருக்கும் அமைச்சர் திஸ்ஸ வித்தாரண, அனைத்துக் கட்சிகளுக்கும் இரண்டுவார கால அவகாசத்தில் அரசியல் தீர்வுத்திட்டம் குறித்த தத்தமது நிலைப்பாட்டை அறிக்கையாகத் தரும்படி கேட்டிருப்பதும், அதையும் பெரும்பான்மை நிபுணர் குழுவின் யோசனையையும், இலங்கையின் இறையாண்மை, நில அமைப்பு சமூக அமைப்பு, என்பவற்றைக் கவனத்தில் கொண்டும் தீர்வு திட்டம் விரைவில் தயாரித்து அனைத்துக் கட்சிகளுக்கும், ஜனாதிபதிக்கும் சமர்ப்பிக்கப்படும் எனவும் கூறியிருப்பது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனைத்துக் கட்சி மாநாட்டைக் கூட்டியதன் நோக்கத்தை எட்டும் இடத்தை நெருங்கியிருப்பதுபோல் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. ஒரு வாரகாலத்துக்குள் அனைத்துக்கட்சிகளும் தமது நிலைப்பாட்டை முன்வைக்கும் வேலைகளில் மிகவும் துரிதமாக செயற்பட்டு வருகின்றன. இந்த நிலையில் தீர்வுத்திட்ட ஆலோசனைகளில் முஸ்லிம்களின் நிலை தொடர்பாகவும் கூடிய கவனம் செலுத்தப்படவே வேண்டுமென பலமான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றது. வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் சார்பில் ஈ.பி.டி.பி.யினால் சமர்ப்பிக்கப்படும் தீர்வு ஆலோசனைகளில் நிச்சயமாக சகோதர முஸ்லிம் மக்களின் கௌரவத்தையும் சமூக அமைப்பை பாதுகாக்கும் வகையிலுமாக முஸ்லிம்களுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படும் என்று


அலசுவது

- மதியூகி -


ஈ.பி.டி.பி.யின் பேச்சாளர் எஸ்.தவராஜா கூறுகிறார். இதேபோல் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு காணப்படும் போது முஸ்லிம்களுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என்றும், வடக்கு - கிழக்கு இணைவின் ஊடான தீர்வு தமிழ் மக்களுக்கு வழங்கப்படுவதாக இருந்தால், முஸ்லிம்களுக்கும் தனியான அலகுக்குள் தீர்வு காணப்படவேண்டும் என்பதை பிரதான முஸ்லிம் கட்சிகள் வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிலையில் அனைத்துக் கட்சிகளும் தமது ஆலோசனைகளைச் சமர்ப்பித்தபிறகு தேவையற்ற காலதாமதத்துக்கு இடம் கொடுக்காமல் தீர்வுத் திட்டத்தை அரசு முன்வைக்க வேண்டும். சர்வதேச சமூகத்துக்கும், இலங்கை மக்களுக்கும் அனைத்துக் கட்சிக்கூட்டத்தையே ஒரு கவசமாகக் கூறி வந்த அரசாங்கம், இனியும் காலத்தை இழுத்தடிக்கக்கூடாது.

## அதிரடி அய்யாத்துரை

**கூத்தமைப்பு** எம்.பி. யாகப் புதிதாக நியமனமான சிறீர காந்தருக்கு தன்ர நியமனம் சரிதானோ உதுவேலை செய்யுதோ எண்ட சந்தேகத்தை எப்புடி நிவர்த்தி செஞ்சவா எண்டு தெரியுமோ. லண்டனுக்கு வீஷா கேட்டு ஒரு அப்பிளிகேஷன் போட்டவராம். அவையும் வீஷா கொடுத்திட்டினமாம். எம்.பி.யான புளுகத்தில லண்டனுக்குப் போய் திரும்பினாப் பிறகுதான் தன்ர பதவியை சர்வதேச சமூகம் அங்கீகரிச்சுட்டுது எண்டு சொன்னவராம்.



என்னதான் இருந்தாலும் படிச்ச மனிசன், அதுவுமில்லாம ஒரு சட்டத்தரணி. அவருக்குத் தெரியாததா எண்டு நீங்கள் திங் பண்ணிப் போடாதேங்கோ. இப்பெல்லாம் அதிகமாகப் படிச்சவைதானுங்கோ அதிகமாகத் தப்புத்தாளங்கள் போட்டுக் கொண்டிருக்கினம். அதில சீறிர காந்தர் மட்டும் என்ன விதிவிலக்கா முடியுமோ. ஒருக்கால் போட்டு வந்திட்டால் திரும்பவும் வீஷா தருவினமாம் எண்டதாலை சிலவேளை நாட்டில சண்டை கூடிச்சுது எண்டால் தலை நகரில நிண்ட மாதிரியே வீஷாவை எடுத்துக் கொண்டு எஸ்கேப் ஆகிடலாம் எண்டதுதானுங்கோ அவரின்ர திட்டமாம். இப்ப தெரியுதோ, சந்தேகத்தை ஏன் உப்பிடி ஒரு முறையில நிவர்த்திச்சுக் கொண்டவர் எண்டு. அவர் பார்ளிமெண்டில உரையாற்றேக்க இதுவரை அஞ்சு தமிழ்த் தலைவர்களை கொலை செய்து போட்டினமாம். அந்த லிஸ்டில உவரின்ர முதல் தலைவர் சிறீ சபாரட்ணத்தை ஏன் மறந்தவர், அவருக்கு என்ன நடந்தது எண்டதையும் ஒருக்கால் உதே வீரத்தோடை பார்ளிமெண்டில தன்னும் முழக்கியிருந்தால் சூப்பராக இருந்திருக்கும். ஆனால் அதைச் செய்யயில்லைங்கோ. உது உவரின்ர தனிப்பிழை இல்லையுங்கோ. ஒரு கூட்டமே இண்டைக்கு உந்த நிலையிலதான் நிக்கினம், எல்லாம் செத்துப் போன அவையின்ர தலைவர்மாருக்குத் தெரியாதெண்ட வரைக்கும் சரி எண்டு நினைக்கினமாக்கும்.

**ரெண்டெழுத்தாரின்ர** சில முகாம்களை பச்சைப் படையினர் கைப்பற்றினாப் பிறகு தொண்டு நிறுவனங்கள் சிலதின்ர வண்டவாளங்கள் தண்டவாளம் ஏறியிருக்குதுங்கோ.

தொண்டுப் பணி செய்யிறம் எண்டு உவை பயங்கரவாதத்துக்கு முண்டு குடுத்திருக்கினம் எண்டு தென் இலங்கையில தீ பற்றிக் கொண்டு எரியுது. இவை என்னடாவெண்டால் நாங்கள் மக்களுக்குக் கொடுத்த சாமான்களை ரெண்டெழுத்தார் பறிச்சு எடுத்திருப்பினம், அவைக்கு ஒண்டும் நேரடியாக நாங்கள் கொடுக்கயில்லை எண்டு விதண்டாவாத வியாக்கியானம் சொல்லினமுங்கோ. உந்தத் தொண்டு நிறுவனங்களின்ர இலச்சினை பொறிக்கப்பட்ட பொருட்கள் ரெண்டெழுத்தாரின்ர முகாம்களில பாவிக்கப்பட்டிருக்கெண்டு பிரச்சினை வந்த பிறகு உதைச் சொல்லாமல் முன்னமே சொல்லியிருக்கலாமே எண்டு திருப்பிக் கேக்கிறவைக்கு இவை சொல்லிற பதில் ஏற்புடையதாக இல்லையுங்கோ.


சரி, இவை வழங்கயில்லை எண்டதை ஒரு காரணத்துக்காக ஏற்றுக்கொண்டாலும், இவை வழங்கிய பொருட்களை சனங்களிட்டை இருந்து ரெண்டெழுத்தார் பறிச்சது தப்பு எண்டும், தங்கட இலச்சினை பொறிக்கப்பட்ட பொருட்களை ரெண்டெழுத்தார் துஷ்பிரயோகம் செய்ததையும் கண்டிச்சு ஒரு நடவடிக்கை எடுப்பினமோ இல்லையோ. உதைப் பார்க்கேக்க எதிர்காலத்தில உதுபோலை இன்னும் என்னென்ன கொடுக்கல் வாங்கல் அம்பலமாக இருக்குதோ எண்டு யோசிக்க வேண்டியிருக்குதுங்கோ.

**அண்டை** நாட்டின்ர வெளிவிவகார அமைச்சர் அண்மையில வந்துபோனவரெல்லோ, அவர் வந்துபோனது தொடர்பான வியாக்கியானத்தை ஒரு பத்திரிகையில படிச்சேனுங்கோ. அதில அவை ஒரு கண்டு பிடிப்பு பிடிச்சிருக்கினம். அதாகப்பட்டது தற்போதைக்கு அதிகாரத்தரப்பும், ரெண்டெழுத்தாரும் நெருங்கிப்பேச்சு நடத்தக்கூடிய நிலைமை இல்லை எண்டதைத்தான் முகர்ஜி தன்னுடைய விஜயம் மூலமாகத் தெரிஞ்சு கொண்டவராம். எப்புடி இருக்குப் பகிடி பார்த்தியளோ. உதைத் தெரிஞ்சு கொள்ள அவர் விஜயம் செய்ய வேணுமோ. என்னவொரு சின்னப் பிள்ளைத்தனமான நினைப்புகள் எங்கட ஆக்களுக்கு. முகர்ஜி வாறார், வந்து அதிகாரமானவரின்ர காதில் மண் சேர்த்துப் புடிச்சித் திருகப்போறார் எண்டு வாய்க்கு வந்தபடி வாரி விட்டுக் கொண்டிருந்திச்சினம். அது நடக்கயில்லை எண்டவுடன் பிளேட்டைத் தூக்கித் திருப்பிப் போட்டினம். உவை உப்பிடி தங்கட தவறுகளையும், மற்றவையின்ர தவறுகளையும் மறைச்சு தங்கட விளையாட்டுக்களைக் காட்டித்தானேங்கோ நாட்டுநிலைமையை உந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டிருக்கினம். சமாதானத்துக்காக ஊடகங்கள் அதிகப் பங்களிப்புச் செய்ய வேணும் எண்டு கருத்துக்கள் முன்வைக்கப்படேக்க எல்லாம் சரிதான், சரிதான் எண்ட கணக்கா தலையாட்டிக் கொண்டு திரிவினம். ஆனால் தங்கட வேலையில உதுகளை கவனத்தில நிறுத்திச் செய்ய மாட்டினம். உவை எங்கட சனத்தைப் பிடிச்ச நோயுங்கோ. உதுக்கு மருந்தே இல்லையுங்கோ.

**ரவீயான** ராயர் கொல்லப்பட்டது தொடர்பான விசாரணைகள் சரியான வகையில நடத்தப்படயில்லை எண்டும், அது தனக்கு ஏமாற்றம் எண்டும் சம்மந்தமானவர் சபையில உரை நிகழ்த்தேக்க சொன்னவர். அவர் சொன்னது சரிதான். எந்த விசாரணையும் ஒழுங்காக நடந்து உண்மையான குற்றவாளி சட்டத்துக்கு முன்னால நிறுத்தப்படயில்லை எண்டால் அது ஏமாற்றம் தானுங்கோ. உதில சம்பந்தமானவரின்ர ஏமாற்றம் ஒண்டும் புதுமையானதில்லையுங்கோ. இனந்தெரியாத நபர்கள் எண்ட பேரில கொலைகள் நடக்கேக்கையும், கடத்தல்கள் நடக்கேக்கையும் உதே ஏமாற்றத்தை எத்தினபேர் சொல்லிச்சினம் இன்னும் எத்தினபேர் சொல்லிக்கொண்டு ஏமாந்துபோய் இருக்கினம். அவைக்காகவோ, அதுக்காகவோ ஒருக்கால் தன்னும் மனம் உருகி பொய்யாகத் தன்னும் ஏமாறத்தெரியாத சம்மந்தமானவர் உப்ப ஏமாந்திட்டன் எண்டு சொல்லிறது எடுபடாதுங்கோ.

உண்மையிலேயே சம்மந்தமானவரின்ர தற்போதைய நிலைமை என்ன தெரியுமோ. நாட்டின்ர பாதுகாப்பு ஏற்பாடுகள் எண்டது. நடந்த தவறுகளுக்குச் சம்பந்தமான குற்றவாளிகளைப் பிடிக்குதோ, தண்டனை கொடுக்குதோ எண்டதெல்லாம் தேவையில்லாத விஷயங்கள். தன்ர தலைக்கு ஆபத்து வராமல் காத்துக் கொள்ள உதவினால் அதுவே பெரிய உபகாரம் எண்டதுதானுங்கோ. சம்மந்தமானவர் அப்பிடிப்பேசினார் இப்பிடிப் பேசினார் எண்டு ஊடகங்கள் தலைப்புச் செய்தி போட்டு உசுப்பேத்திப் பார்க்கினம் உதுகளுக்கு மயங்கினாரோ பிறகு உடம்பு ரணகளமாகினாலும் விடமாட்டாங்கள். கொஞ்சம் ‘கெயர்புல்லா’ இருங்கோ எண்டு வாத்தியார் அட்வைஸ் சொல்லுறாருங்கோ.

# எறும்பு!



தருவது: தேசன்

**நாம்** ஒவ்வொருவருக்கும் எறும்பு மிக அற்பமான உயிரினம். கடித்த எறும்பை நசுக்கிப் போட்டு விட்டால், வலி கூடக் கொஞ்சம் குறைந்து போனதான நினைப்பு. எறும்புக்கு ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு பூதம். எறும்புகள் மனிதனை ஒரு நாளும் அண்ணாந்து பார்த்து வியப்பதில்லை. எறும்பு கற்றுக்கொள்ளும் பாடம் எதுவும் மனிதனிடம் இல்லை. எறும்புகள் நம்மை எதிர்பார்த்து வாழ்க்கை நடத்துவதில்லை. எந்த எறும்பாவது, எப்போதாவது சோம்பேறித்தனமாகப் போவதை எவரும் கண்டிருக்க முடியாது. எறும்புகள் சுறுசுறுப்புக்கு உதாரணமானவை. அவற்றின் பயணப் பாதையும், அவற்றின் செயற்பாடும் வியக்க வைப்பவை. ஒன்றன் பின் ஒன்றாகச் சரியான தடத்தில் எறும்புகள் பயணிப்பதை ரசித்தவர்களுக்கு எறும்புகளின் பயண நேர்த்தி தெரியும்.

கொழும்பில் அடிக்கடி காணக்கூடிய சம்பவம், முக்கிய பிரமுகர்களின் வாகனத் தொடரணிகள் போகும்போது, ஒன்றன்பின் ஒன்றாகப் போவதை விடவும், சரியான பக்கம், பிழையான் பக்கம் என்று இரு பக்கமாகவும் அவசரமாகப் பயணிப்பதையும், சில வேளைகளில் நடைபாதை வழியாகவும் ஏறி இறங்கி வாகனங்கள் செல்வதையும் சர்வசாதாரணமாகக் காணலாம்.

நாம் அற்பமாகக் கருதும் எறும்புகள் எத்தனை அவசரத்திலும் ஒழுங்கைத் தவறுவதில்லை. மனிதன் சின்னச் சின்ன அவசரத்துக்கெல்லாம் ஒழுங்கு தவறி, பரபரப்புக் காட்டிப் பயணிக்கும் போக்கை என்னவென்று சொல்லலாம். ஒழுங்குகள், சட்டங்கள் என்பவற்றை வகுத்துக் கொண்டதே அதை நம் வசதிக்காக மீறத்தானோ என்று கூடச் சில பொழுதுகளில் நான் நினைப்பதுண்டு.

அப்படிச் செல்பவர்கள் எங்காவது முட்டிக் கொண்டால், அப்போதுதான் அது பிழை. இல்லாதவரை, அது சரி என்றாகிவிட்டது. தலைநகரில் வீதிகளைக் கடக்கும் போது, வீதிகளின் குறுக்கே இருக்கும் மஞ்சள் கோடுகள் ஊடாகவே போகவேண்டும். இல்லாமல் நினைத்த இடத்தில் குறுக்காகக் கடந்துபோய் பிடிபட்டால் 150 ரூபா அப்ராதம் கட்டவேண்டும் என்றொரு சட்டம் உண்டு. என் கேள்வியெல்லாம், அந்தச் சட்டத்தைப் போட்டவர்கள் அதையெல்லாம் மீறிச் செய்யும் தவறுகளுக்கெல்லாம் யார் பொறுப்புக் கூறுவது என்பதுதான். இது இருக்கட்டும். இதைப்பற்றி எழுதுவதற்காக எறும்பைத் தலைப்பாகத் தெரிவு செய்யவில்லை.

எறும்பினுடைய குணாம்சங்களில் முக்கியமானது, மழைக் காலத்துக்கு ஈடுகொடுக்கும் வகையில் தனக்கான உணவை எறும்பு முன்னரே சேமித்து வைத்துவிடும். குறிப்பாக, சேமித்து வைப்பது எறும்பினுடைய விசேட குணங்களில் ஒன்று. அதை எறும்பிடமிருந்து நாம் கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டும். நம்மில் எத்தனை பேர் வெயில் காலம், மழைக் காலம் என்று இயற்கையை எதிர்பார்த்து அல்லது உணர்ந்து நமக்கான தேவைகளைப் பூர்த்தி செய்கிறோம்; சேமித்துக் கொள்கிறோம்? இந்தக் கேள்வியை நாம் ஒவ்வொருவரும் நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டும்.


# போவோம் ரசிப்போம்




நீங்கள் சேமித்து வைத்தீர்களா? என்று இன்னொருவரைப் பார்த்து எனக்குக் கேட்க முடியாது. அந்தக் கேள்வியைக் கேட்க வேண்டிய முதல் நபராக இருப்பவர் என் தந்தையார். "இன்றைய நாளை திருப்தியோடும், சந்தோஷமாகவும் அனுபவியுங்கள். நாளைய நாள் எப்படி இருக்கப் போகிறது என்பதை நாளை பார்த்துக் கொள்ளலாம்" என்று அவர் அடிக்கடி சொல்வார். அவரைப் பொறுத்தவரை நாளைய நாள் பற்றிய கவலைகள், இன்றைய சந்தோஷத்துக்கு ஏன் தடையாக இருக்க வேண்டும் என்பதுதான்.

அவர் கடுமையாக உழைத்தார். எல்லா வரவுகளையும் செலவுகளிலேயே கணக்குக் காட்டினார். மிகுதி என்பதே இருக்கவில்லை. இன்றைக்கும் அவரது போக்கு அப்படித்தான் இருக்கிறது. சுனாமி வந்து வீட்டைச் சூறையாடிவிட்டு, எங்களைத் தெருவில் வெறும் கையோடு விட்டுச் சென்றபோதும், தற்காலிகமாகக் கிடைத்த ஓலைக் குடிசையை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டவர் அவர்.

அப்பாவின் இந்த வாழ்க்கை முறையைப் பின்பற்ற முடியாது என்பதுதான் என் அபிப்பிராயம். எறும்புகள் வாழும் வாழ்க்கை பல உண்மைகளை உணர்த்துகின்றன. தற்செயலாக ஏற்படும் இயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்ள முடியாமல் தவித்துப் போய் மனிதன் கையேந்தும் நிலையைத் தவிர்க்க முடியாது தான். ஆனால் எதிர்பார்க்கக்கூடிய சவால்களை எதிர்கொள்ளும்முன், அதற்கான ஆயத்தத்தை ஏன் நம்மால் செய்ய முடியாது என்பதுதான் என் கேள்வி. இந்தப் பாடத்தை ஒரு எறும்பிடமிருந்தா மனிதன் கற்றுக்கொள்வது என்று நம்மில் பலர் நினைக்கலாம். அப்படி நினைத்துக் கொள்ளுமளவுக்கு நம்மிடம் என்ன இருக்கிறது? நாம் கற்றுக்கொள்ளும் படியாக எதுவும் இருந்தால் அதை அந்தக் கண்ணியத்தோடு கற்றுக்கொள்வோம். எறும்பு, தன்னைப் பார்த்துக் கற்றுக் கொள்ளுங்கள் என்று எந்த மனிதனுக்கும் கட்டளையிடவில்லை. அது வாழ்கிற வாழ்க்கை நமக்கு முன்னுதாரணமாக இருக்கிறது. "எறும்பு ஊரக் கற் குழியும்" என்பார்கள். எறும்பின் நேர்த்தியான பயணம் இங்கே வலியுறுத்தப்பட்டுள்ளதாகவே கருதுகிறேன். நேர்த்தியான எந்தப் பயணமும் நிச்சயம் வெற்றிப் பயணமாகும். கண்ணுக்குப் புலப்படும் அத்தனை நல்ல முயற்சிகளையும் கர்வம் இல்லாமல் கற்றுக்கொள்வோம். இன்னொருவர் நம்மைப் பார்த்துக் கற்றுக்கொள்ளும் வாழ்க்கையை வாழ்வதே பிறவிப் பயனாகும். ஆகவே, ஒவ்வொருவரும் பிறவிப் பயன் எய்துவோம். அப்போதுதான் வாழ்க்கை அர்த்தப்படும். ●





**நிருபித்து காட்டும் என் மந்திர சக்தி**

என் மளையாள ஜக்கம்மா சக்தியால் உள் நாட்டவருக்கும் வெளிநாட்டவர்க்கும் பிரிந்த நட்புகளை ஒன்று சேர்த்து வைப்பது, ஓடிப்போனவர்களை தேடிவர செய்வது, தடைபட்ட திருமணங்களை நிவர்த்தி செய்து வைப்பது, நிச்சயிக்கப்பட்ட திருமணங்களை நிறை வேற்றி வைப்பது, காதலிலே தோழ்வியுற்றோர்களை அதிசயதக்க வகையில் காதலை கை கூட செய்வது, நாடு விட்டு நாடு, இடம் விட்டு இடம் மாறி தத்தளிக்கும் கணவன் மனைவியை ஒன்று சேர்ப்பது, தன் பிள்ளை தாய் தந்தையரின் பேச்சை கேட்டு நடக்க, குடி போதை அகல, செவ்வாய் தோச பரிகாரம் செய்து கொள்ள, குழந்தை பாக்கியம் கிட்ட, கடன் தொல்லை தீர, மனப்பயம் கோபம், நித்திரையின்மை, தலைமுடி உதிர்தல், பெண்களுக்கு மாதவிலக்கு சீரற்ற நிலைமை நிவர்த்தி பெற பில்லி சூனிய சாபங்களை அகற்றி அன்றன்றாடு இங்கு நடைபெறும் அக்கினி குண்டல அக்கிய பூஜையில் தேவியின் பிரசனத்தால் உங்கள் பிரச்சனையனைத்தும் மழையை கண்ட பனி போல் மறைந்து சுகவாழ்வு பெறுவது திண்ணம். குறிப்பாக மக்களுக்கு பத்திரிகை மூலமாக <u>என் புகைபடத்தை அடையாளம் காட்டி விளம்பரம் செய்வதென்றால் மக்களுக்கு ஒளிவு மறைவு இன்றி அற்புத சேவையால் அதிசயத் தக்க வகையில் கடந்த 39 வருஷங்களாக உண்மை நிருவனமாக எமது மலையாள மந்திரீக உச்சாபீடம் செயல் திறனை காட்டி வருகிறது</u> இனி அன்பர்களின் ஒரு சில கடிதங்கள். மேலதிக விபரங்களுக்கு எமது வெப் தளத்தை நாடுங்கள். <u>சாத்திர கண்ணாடியாக ஒருவரின் ஜாதகத்தில் ஆணிவேர் அக்குவேறாக யு4 எணைந 331 பக்கம் கொண்ட அருள்ஞான சித்த கணிப்பு எளிதிக்கொள்ள விரும்புவோர் மனு செய்யவும்.</u>

**சுவிஸ் அன்பரின் கணவன் மனைவி பிணக்கு தீரல் மடல்**

மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையால் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எனது குடும்பத்தை 700 முஆ அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**லண்டன் அன்பரின் மடல், எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தால்.**

பெறும்மதிப்புக்குறிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் 39 வயதில் அதிசயத் திருமணம்.**

பெரும்மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம மகளுக்கு பரிகாரம் செய்தால் அதிசயத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடான கோடி நன்மைகள்.

**Prof.P.K.SAMY(J.D.G.A.N.) JP Iah**

SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA, PEEDAM.
NO-162 KOTAHENA STREET MAYFIELD ROAD COLOMBO-13
011-2470615,011-2342463,011-2342464, FAX-0094-11-2344831
வெப்தளத்தை பாருங்கள் www.drpksamy.com.
④ நுவெரலியா கிளை-33 Daily Fair Complex 052-2222508-


## முரசு வாசகர்களுக்கான போட்டி

*தினமுரசு வாசகர்களுக்கு...*

## தினமுரசின் 700 ஆவது வெற்றி வாரத்தை முன்னிட்டு நடாத்தப்படும் கவிதை, சிறுகதைப் போட்டி.

ஜனரஞ்சகப் பத்திரிகைத் தளத்தில் இன்றைய கால கட்டத்தை தினமுரசின் முன் அல்லது தினமுரசின் பின் என்று வரையறுக்க முடியும். குறிப்பிட்டவர்கள் மட்டும் பேனை பிடித்து எழுதிப் பிரபலம் தேடிக் கொண்டிருந்த சூழலைத் தகர்த்து, எல்லோருக்கும் களம் அமைத்துக் கொடுத்த பெருமையும் தினமுரசையே சாரும். ஆகையால்தான், தினமுரசு, அதன் ஆசிரியர் அற்புதன் ஆகிய பெயர்கள் ஒவ்வொருவர் மனதிலும் தாரக மந்திரமாகப் பதிந்திருக்கின்றது. இன்றைய படைப்பினைப் பார்க்கின்றபோது அனேகமானோர் முரசு அடையாளங் காட்டியவர்களாகவே இருப்பது பெருமைக்குரியது. எமது நோக்கமும் அதுவே. அதனடிப்படையில் படைப்புலகில் ஏற்கனவே முகம் காட்டியவர்களையும், முகம் காட்ட முயற்சித்துக் கொண்டிருப்பவர்களையும் ஒரே தளத்தில் சந்திக்கச் செய்யும் துணிச்சல் மிகுந்த முயற்சியே இது.

***போட்டி நிபந்தனைகள்:***

கவிதை, சிறுகதை என்பன கீழ்வரும் தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட வேண்டும்.

! யுத்தம் ஏற்படுத்திய சமூகத் தாக்கம்
! சிறகொடிந்த சமாதானப் புறா
! மலையகத்தில் மலர்ந்து சருகாகிப் போனவர்களின் சமகாலம்
! காதலும் வாழ்க்கையும்
! மிச்சமிருக்கும் கல்வி
! நாமும் மற்றவரும்

இத்துடன் மேற்படி தலையங்கங்களைத் தழுவிய ஆக்கங்களையும் எழுதுவதற்கும் வாசகர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

✦ **கவிதை**: மரபுக்கவிதையாயின் 20 வரிகளுக்கு மேற்படாமலும், புதுக்கவிதையாயின் ஒரு பக்கத்திற்கு மேற்படாமலும் அமைதல் வேண்டும்.

✦ சிறுகதை: கையெழுத்துப் பிரதிகளாயின் 05 பக்கங்களுக்கு மேற்படாமலும், தட்டெழுத்துப் பிரதிகளாயின், 03 பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் அவசியம்.

✦ தங்களது சகல ஆக்கங்களும் சொந்தக் கற்பனையில் உருவானதாக இருக்க வேண்டும். ஏனைய படைப்பாளிகளின் ஆக்கங்களைத் தழுவியவையோ அல்லது களவாடப்பட்டவையோ நிராகரிக்கப்படும்.

✦ நடுவர்களால் தெரிவுசெய்யப்படும் தலா மூன்று சிறந்த ஆக்கங்களுக்குப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படும்.

✦ *சகல ஆக்கங்களையும் 31. 01. 2007 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்க வேண்டிய முகவரி,*

**பரிசுப்போட்டி - 700**
**தினமுரசு வாரமலர்**
**த. பெ. இல. 1772.**
**கொழும்பு.**

**எழுதுவோர் எழுதலாம்**
**ஒவ்வொரு எழுத்தும் பெறுமதி மிக்கது.**

# தமிழர்களுக்குப் பிரச்சினை உண்டு

## ஓர் ஆய்வுக் கட்டுரை


எஸ்.தவராஜா

### வரலாற்றுத் திரிபுவாதிகளை வாயடைக்க வைக்கும் சான்றுகள்!

**முழு நாட்டையுமே கந்தக பூமியாக மாற்றிய தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு, குறிப்பாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் மாநாடு இதுவரை 22 சந்திப்புகளை நடத்தி முடித்திருக்கிறது. இந்த சர்வகட்சிக் கமிட்டிக்கு நிபுணத்துவம் நிறைந்த ஆலோசனைகளை வழங்கவென நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு, அண்மையில் சமர்ப்பித்த ஆலோசனைப் பொதிகளடங்கிய அறிக்கைகள் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தன. பதினேழு பேரைக் கொண்ட இந்த நிபுணர்கள் குழுவில் பதினொரு பேரை பெரும்பான்மையாகக் கொண்ட நிபுணர்கள் குழு தெரிவித்த ஆலோசனைகளில் முன்னேற்றகரமான பல அம்சங்கள் அடங்கியிருந்தன.**

**இந்த நாட்டு வரலாற்றில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதெல்லாம், கடும் போக்காளர்கள் கடுகடுப்படைந்து எட்டப்பட்ட ஒப்பந்தங்களைக் கிழித்தெறிய வைத்துள்ளார்கள். இதன் எதிரொலிகள் சர்வ கட்சிப் பிரதிநிதிகள் கமிட்டிக் கூட்டத்திலும் நிபுணர்கள் குழு சமர்ப்பித்த ஏனைய நான்கு அறிக்கைகளிலும் (பெரும்பான்மைக் குழுவின் அறிவுரை தவிர்ந்த) தென்பட்டன. வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைகளையும் அபிலாஷைகளையும் ஏற்றுக் கொள்ள மறுத்தவர்கள்தான் இந்த நாட்டின் இனப்பிரச்சினை, இலங்கையை எரியூட்டிய அனுமார் வால் போல இன்னமும் நீண்டு கொண்டிருப்பதற்குக் காரணம். இலங்கையைச் சிங்கள மக்களின் முதுசொமாகவோ சீதனமாகவோ நினைத்துக் கொண்டு கதையளக்கும் சிங்களக் கடும் போக்காளர்களுக்கு, முன்னாள் யாழ்.மாவட்ட எம்.பி.யும் சர்வகட்சி மாநாட்டுக் கூட்டங்களில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் பங்குபற்றுபவருமான திரு.எஸ்.தவராஜா வரலாற்றுச் சான்றுகளோடு காட்டமாகக் கொடுத்த பதில் இப் பகுதியில் இவ் வாரம் முதல் தொடர்ந்து பிரசுரிக்கப்படும்.**

**தமிழர்களின்** துன்ப துயரங்கள் மற்றும் அபிலாஷைகள் பற்றிய விடயங்கள் குறித்தோ அல்லது அவர்களின் பழைய வரலாறு குறித்தோ நான் அலசப் போவதில்லையென்று இந்தக் கமிட்டிக்கு நான் ஏற்கனவே அறிவித்திருந்தேன்; பதிலாக தமிழ் பேசும் மக்களின், குறிப்பாக வடக்கிலும், கிழக்கிலும் வாழும் மக்களின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம் என்ற விடயம் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த காலங்களில் ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக தமிழ்த் தலைவர்கள், தமிழ் மக்களின் துன்ப துயரங்கள் மற்றும் அபிலாஷைகள் குறித்து தென்னிலங்கைத் தலைவர்களுக்கு விபரித்திருக்கின்றனர். இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. பின்னர் அவை கிழித்தெறியப்பட்டன அல்லது அமுல்படுத்தப்படவில்லையென்றும் நான் தெரிவித்திருக்கிறேன். தமிழர்களுக்குப் பிரச்சினைகள் உண்டா? இல்லையா? (சில கமிட்டி அங்கத்தவர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலாக) என்பதற்குப் பதிலளிக்க இது உகந்த தருணமல்லவென்றும் நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அதி மேதகு ஜனாதிபதி இந்த நாடு எதிர்நோக்கும் பிரச்சினைக்குத் தீர்வொன்றினைக் காண்பதற்காக இக்கமிட்டியினை நியமித்திருக்கிறாரென்றும் நான் மேலும் குறிப்பிட்டிருந்தேன். எனவே தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எமது கட்சி கொண்டிருக்கும் அபிப்பிராயங்களை நான் நேரடியாகவே தெரிவிக்கின்றேன்.

இதற்கிணங்க, தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் பிரதேசங்களில் அதிகாரப் பகிர்வுக்கான பொறிமுறையொன்றினை ஏற்படுத்துவதன் மூலமாக தீர்வொன்றினைக் காண முடியுமென்று எனது உரைகளின் போது குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது, தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளுக்குத் தீர்வு காணும் விதத்தில் மத்தியில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒழுங்குமுறையொன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

எனினும் பேராசிரியர் நளின் டி சில்வாவும் திரு.கம்மன்பிலவும் வித்தியாசமான பரிமாணங்களில் இனப் பிரிவினையின் வரலாற்று வளர்ச்சி பற்றிக் குறிப்பிட்டு சில விடயங்களைத் தெரிவித்துள்ளனர். இதனால் எனது கட்சியான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கூடாக வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கும் ஒரேயொரு கமிட்டி அங்கத்தவரென்ற வகையில், உண்மைகளைச் சரியான பரிமாணத்தில் முன்வைக்க வேண்டிய கடப்பாடு என் மீது சுமத்தப்பட்டுள்ளது என்று நான் நினைக்கிறேன். இல்லையேல், இந்த நாட்டிலுள்ள தமிழர்களின் வரலாறு குறித்து நான் தவறிழைத்தவனாகி விடுவேன். எனவே தமிழ் மக்கள் செறிந்தும் நிலத் தொடர்புடனும் வாழ்ந்து வரும் பிரதேசங்களுக்கு அதிகாரப் பகிர்வு ஒழுங்கொன்றினை மேற்கொள்ளுமாறு முன்வைத்த கோரிக்கைக்கும், மத்தியுடன் அதிகாரப் பகிர்வொன்றினைக் கோருவதற்கும், வழிவகுத்த விடயங்கள் மற்றும் காரணங்கள் பற்றி ஓர் அட்டவணை வடிவில், வரிசைக் கிரமமாக முன்வைக்க விரும்புகிறேன். பேராசிரியர் நளின் டி சில்வா, பிரிட்டிஷார் 1833ஆம் ஆண்டில் அல்லது அந்த ஆண்டு வாக்கில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திய காலத்திலிருந்து தமது வாதங்களை ஆரம்பித்தார். திரு.கம்மன்பில வரலாற்றின் ஆரம்ப காலத்தைத் தொட்டு, தமது வாதத்தை முன்வைத்தார். இன்றிலிருந்து 2000 வருடங்கள் வரை நான் பின்னோக்கிப் பார்க்க விரும்புகிறேன்.

### வரலாற்றுப் பதிவு

இந்த நாட்டில் 2000 வருடங்களுக்கு மேலாக தாம் வாழ்ந்து வருகிறார்கள் என்பதே தமிழ் மக்களின் வாதமாகும். அதாவது, சிங்களவர்கள் வாழ்ந்த அந்தளவு காலம் அநேகமாக தமிழர்களும் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதே அவர்களின் வாதம். இதற்கு ஆதாரமாக 'வையா', 'யாழ்ப்பாண வைபவ மாலை', 'மட்டக்களப்பு தமிழகம்' போன்ற நூல்களையும் பிதா ஞானப்பிரகாசர், பேராசிரியர் கே.கணபதிப்பிள்ளை, முதலியார் எஸ்.இராசநாயகம், கலாநிதி கே.இந்திரபாலா, கலாநிதி கே.குணராசா ஆகியோர் எழுதிய நூல்களையும் என்னால் காட்ட முடியும். ஆனால் இந்த நூல்கள் யாவும் தமிழர்களான நூலாசிரியர்களால் எழுதப்பட்டதால், தமிழர்களின் நோக்கிலிருந்து வரலாற்றை முன்வைத்திருக்கிறார்களென்று கூறி, பேராசிரியர் நளின் டி சில்வாவும் திரு.கம்மன்பிலவும் மறுப்புத் தெரிவிப்பார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இதைப் போன்றே பௌத்த தேரர்களால் எழுதப்பட்ட மகாவம்ச, தீபவம்ச, சோழவம்ச நூல்கள் யாவும், தமிழர் தரப்பு வரலாற்றைப் பதிவு செய்யத் தவறி விட்டன என்பதே தமிழ் மக்களின் கருத்தாகும்.

எனவே தலைவர் அவர்களே, நினைவிலில்லாத காலம் தொட்டே தமிழ் மக்கள் இந்த நாட்டில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்ற அவர்களின் உறுதிப்பாட்டை சுயாதீனமான தகவல் மூலம் நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். முதலாவதாக, மிகப் பிரபலமான இணையத்தளமான என்சைக்ளோபீடியாவில் வித்திபீடியா என்ற தலைப்பின் கீழ், புராதன தமிழர் வரலாறு மற்றும் இலங்கையின் வரலாறு ஆகியவற்றில் நான் கண்டு கொண்டதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

*"புராதன தமிழர் தேசமென்பது, புராதன காலங்களில் பிரதான மொழியாகத் தமிழ் விளங்கிய பிரதேசங்களான தென்னிந்தியாவையும் வடக்கு, கிழக்கு இலங்கையையும் குறிக்கிறது. சங்க காலத்தில் இந்தப் பிரதேசங்கள் சோழ, சேர, கொங்கு மற்றும் தொண்டை என்று கூறப்படும் பாண்டியர் ஆகிய மூன்று தமிழ் வம்சத்தவர்களால் ஆளப்பட்டு வந்தது. புராதன தமிழ் தேசத்தின் சமூக, அரசியல் மற்றும் கலாசார நடைமுறைகள் உட்படப் பிரதான தகவல் மூலங்கள் கிறிஸ்துவுக்கு முந்திய நூறாம் ஆண்டு கால சகாப்தத்திலிருந்து இருநூறாம் ஆண்டு கால சகாப்தம் வரையிலான சங்க இலக்கியங்கள், புராதன தமிழ் இலக்கியங்கள் ஆகியவற்றிலிருந்தும் கல்வெட்டுச் சான்றுகள், உலோக நாணயங்கள் மற்றும் சில கிரேக்க, லத்தீன், சமஸ்கிருத மொழியிலான சில குறிப்புகளிலிருந்தும் பெறப்பட்டுள்ளன."*

*"மகாவம்சம் மிகவும் காலம் பிந்திய இலக்கிய விடயமாகும். கிறிஸ்துவுக்கு முந்திய 543ஆவது சகாப்தத்தில் (அல்லது கிறிஸ்துவுக்கு முந்திய 486ஆவது சகாப்தத்தில்) தம்பபன்னையில் விஜயனும் அவனது தோழர்களும் வந்திறங்கி ஆயிரம் வருடங்களுக்கும் அதிகமான காலங்கள் பிந்தியே எழுதப்பட்டது. பரம்பரை பரம்பரையாகக் கூறப்பட்டு வந்த இந்தக் கதை, சுருக்கப்பட்டு கிறிஸ்துவுக்குப் பிந்திய ஆறாம் நூற்றாண்டில், இலங்கை மன்னன் தாதுசேனனின் சகோதரரான மகாநாம தேரோ என்ற பௌத்த பிக்குவினால் எழுதப்பட்டது. வாய்மூலம் தெரிவிக்கப்படும் இத்தகைய கருத்துக்கள் என்றுமே மாற்றங்களுக்கும் சேர்க்கைகளுக்கும் உட்படக் கூடியவை. எனவே விஜயனையும் அவனைப் பின்பற்றியவர்களைப் பற்றியும் வாய்மூலம் கூறப்பட்டு வந்த பாரம்பரியக் கதை அக்காலகட்டத்தில் (அதாவது கிறிஸ்துவுக்குப் பின்னர் ஆறாம் நூற்றாண்டில்) இந்தியாவிலும் இலங்கையிலும் நிலவிய வரலாற்று, அரசியல் மற்றும் சமூக யதார்த்தங்களைப் பிரதிபலிக்கக் கூடியதாக மாற்றியமைக்கப்பட்டது. இல்லையேல் மகாவம்சத்தில் மேற்கொள்ளப்பட்ட பிந்திய மாற்றங்கள், பிந்திய ஆளும் வம்சப் பரம்பரையினரின் அரசியல் செல்வாக்குக்குட்பட்ட பிற்காலத்திய பிக்குகளின், திருத்தங்களுக்கும் இடைச்செருகல்களுக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கலாம். மகாவம்சத்தின் (ஆறாவது அத்தியாயம்) ஒருங்கிணைக்கப்பட்ட சிங்கபாகு /விஜயனின் கதையில் காணப்படும் பூகோள ரீதியான அமைப்பில், வெளிப்படையான முரண்பாடுகள் காணப்படுகின்றன. மேலும், உண்மைக் கதை முகப் பெறுமானத்தில் நம்பக்கூடிய அளவுக்கு மிகுந்த கற்பனைக் கதையாகும். வடக்கு - கிழக்கு நாடுகள் பற்றி அல்லது அந்த மக்கள் பற்றிய அநுராதபுர காலத்திய (இத் தீவின் தெரிந்த ஆரம்ப காலப் பதிவுகள்) புராதன கல்வெட்டுச் சாசனங்கள் பற்றிய குறிப்புகள் போதியளவு இல்லாமை - வடக்கு, கிழக்கு இந்தியாவிலிருந்து வந்து குடியேறியவர்கள் இந்த விளையாட்டின் பிந்திய ஆட்டக்காரர்கள் என்பதை தெளிவாக சுட்டிக் காட்டுகிறது."*

*"நாட்டின் எழுதப்பட்ட வரலாறு பூராவும் தமிழின் பிரசன்னம் குறிப்பிடப்படுகிறது. இதன் மூலங்கள் பற்றிய காலம் குறிப்பிடப்படவில்லை. ஆனால், தென்னிந்திய திராவிட மொழிக் குழுவினரின் வருகை பற்றிய காலகட்டம், பிந்தியே குறிப்பிடப்பட்டுள்ளது. டெக்கான் பீடபூமிக்கு அண்மித்ததாகத் தீவு இருந்ததால், மனித வரலாறு பூராவும் பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்கள் அங்கிருந்து இங்கும், இங்கிருந்து அங்கும் பிரயாணம் செய்திருக்கலாம். சிங்களவர்களுக்கும் இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்குமிடையில் பல தொடர்ச்சியான யுத்தங்கள் நடைபெற்றன. இந்தத் தீவு, கிஸ்துவுக்குப் பிந்திய முதலாவது ஆயிரம் வருடங்களில் பல்வேறு தமிழ் இராஜகுமாரர்களால் கட்டுப்படுத்தப்பட்டது."*

இதே என்சைக்கிளோபீடியாவில், இதே அத்தியாயத்தின் கீழ், 'கி.மு.21 'இற்கு முந்திய சகாப்த தென்னிந்திய அரசியல் வரைபடம்' என்ற தலைப்பில் காணப்பட்ட வரைபடமொன்றும் என் வசமுள்ளது. இதில் இலங்கையின் கணிசமான பகுதி சோழர்களின் ஆதிக்கத்தில் இருந்ததாகக் காட்டப்பட்டுள்ளதைக் காணமுடியும்.

இரண்டாவதாக, அமெரிக்காவின் காங்கிரஸ் நூலகத்தில் நான் கண்டுகொண்ட இலங்கை பற்றிய நாட்டு அறிக்கையிலிருந்து குறிப்பிட விரும்புகிறேன்.

*"சிங்களவர்களா அல்லது இலங்கைத் தமிழர்களா தீவின் முதலாவது குடியேற்றவாசிகளென்பதை உறுதிப்படுத்துவது கஷ்டமானது. ஆனால் ஆரம்ப காலங்களிலிருந்தே இலங்கை, ஓர் பல்லின சமூகமாக இருந்து வந்துள்ளதென்று சான்றுகள் பகர்கின்றன. திராவிடக் குடியிருப்பாளர்கள் வருவதற்குப் பல நூற்றாண்டுகள் முன்னதாக இந்தோ - ஆரிய மொழி பேசுபவர்கள் குடியேறி ஆதிக்கம் செய்திருக்கலாமென்றும் இலங்கை வரலாற்றாசிரியர் கே.எம்.டி.சில்வா நம்புகிறார். ஆனால் இந்த இரு இனக் குழுக்களும் ஆரம்பத்திலேயே இணைந்து கொண்டதால், பெரும்பாலும் இந்த இரண்டினையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாத நிலையே ஏற்பட்டது."*


(தொடரும்)

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**பாலசந்தர்** என்பது பிள்ளையாரின் திருநாமங்களில் ஒன்று. அதனால் தானோ என்னவோ, பாலசந்தர் தமிழ் சினிமாவின் புதிய எழுச்சிக்குப் பிள்ளையார் சுழியாக விளங்குகிறார்.

காலம், தமிழ் சினிமாவின் சரித்தை எழுதும்போது, பாலசந்தர் என்னும் நுவலரும் திறன் வாய்ந்த நூதனக் கவிஞனுக்காகப் பக்கங்களை ஒதுக்க வேண்டி வரும்.



ஏனெனில், இன்னமும் அவரது சாதனைகளை வெள்ளித்திரை வெளிப்படுத்த இருக்கிறது.

முதல் நாள் படப்பிடிப்பில், நான் நடிக்கத் தொடங்கு முன் - பாலசந்தர் என் கைகளைப் பற்றி, 'Wish you best of luck' என்றார்.

உடனே நான் அவர் கால்களைத் தொட்டு வணங்கினேன்.

பாலசந்தர் அதிர்ந்து போனார் ஆனால் நான் ஆத்மார்த்தமாகத்தான் அந்தக் காரியத்தைச் செய்தேன்.

ஏனெனில் - பாலசந்தரின் பாதம் தொட்டுப் பரவியது, கவிஞர் வாலி அல்ல் ஒரு கற்றுக்குட்டி நடிகன்.

**அவையடக்கம்**

"ஆதவன் ஒளிச்சிறப்பை - சிறு
அகலொன்று புகல்வதொப்ப -
குல
மாதரார் பிள்ளைப்பேற்றை -
ஒரு
மலடிதான் மொழிதலொப்ப -
பல
நூதனக் கலை வனப்பை -
விழி
நோயுளான் நுவல்வதொப்ப -
அட!
மேதகு கம்பன் மேன்மை - ஒரு
பேதை நான் பேச வந்தேன்!"

வழக்கமாகக் கம்பன் விழாக்களில் நான் பாடும் அவையடக்கம் இது.

அறிவார்ந்த பெருமக்களின் புகழை, அவர்தம் அவையடக்கமே அகலப்படுத்தியிருக்கிறது என்பது அரிச்சுவடியாக நான் படித்த பாடம்.

"அடக்கம் அமரருள் உய்க்கும்" என்பது ஆன்றோர் வாக்கு. 'அடக்கம்', அறிவிலிகளின் ஆயுதமல்ல. இது நிறை குடத்தின் நிசப்தம். எப்படி, 'அஹிம்சை' கோழைகளின் ஆயுதமல்ல; அது வீரத்தின் விலாசம் என்று காந்தி சொன்னாரோ அப்படி.

'அகம்' அனவரதமும் 'தை தை' யென்று ஆடுமாயின் அதுவே 'அகந்தை' எனப்படும். தகுதி வாய்ந்த சாதனையாளர்களுக்குத் தானெனும் தருக்கும், செருக்கும் மிகுமாயின் அந்தத் தலைக்கனமே தருணம் பார்த்து அவர்களைத் தரையில் சாய்த்துவிடும் என்பது நமக்கெல்லாம் போதிக்கப்பட்ட பாலபாடம்.

செருக்கேறிச் சுழலும் சித்தத்தைச் சும்மா இருக்க வைப்பது சுலபகரமான காரியமல்ல. சிந்தைக்கு சும்மா இருத்தலிருந்தே சுகம் சித்திக்கிறது.

"இன்று வருமா? நாளை வருமா? இல்லை, என்று வருமோ? சும்மாயிருக்குஞ் சுகம்?" என்று வள்ளலாரே வருந்தி வினாயெழுப்புகிறார். கையது கொண்டு மெய்யது போர்த்திய அருட் பிரகாசரே அப்படிச் சொல்லுகிறார் என்றால், வெந்ததைத் தின்று வேளை வந்தால் போகும் நாமெல்லாம் எம்மாத்திரம்? புகையிலையை அடக்குவது போல், புத்தியை அடக்கி விட முடியுமா என்ன? சுக்குமாந்தடியாலடித்தா மனத்தைச் சும்மாயிரு என அமர்த்த முடியும்?

எல்லாமறிந்த மேதை என எல்லாராலும் ஏத்தியும் போற்றியும் பேசப்பட்ட மேலை நாட்டின் மிகப் பெரிய சிந்தனையாளர்கள் எமர்சனைப் பார்த்து எவனோ ஒருவன் கேட்டான்:

"இத்துணைக் காலம் வாழ்ந்து நீங்கள் அறிந்து கொண்டது என்ன?"

எமர்சன் ஏக்கப் பெருமூச்சோடு பதிலிறுத்தார்:


"எதுவுமே அறிந்து கொள்ளவில்லை என்பதைத்தான், இத்துணைக்காலம் வாழ்ந்து நான் அறிந்து கொண்டேன்"

(தொடரும்.......)

---

# இளமைதுள்ளும் காதல்!

**வடக்குத்** திரையுலகின் இன்னொரு இளமைதுள்ளும் காதல் ஜோடி பிபாஷாபாசு - ஜான் ஆப்ரகாம். இந்தக் காதலர்களுக்கு நடுவிலும் பல வில்லிகள் - வில்லன்கள். அதாவது அவர்களின் குடும்பத்தரப்பில் இருந்து அல்ல. சினிமாவில்தான். ஜான் ஆப்ரகாமுடன் ஜோடி சேரும் நடிகைகள் ஜானை நட்புடன் அழைத்து கடலை போட, இது கேள்விப்பட்டதும், சம்பந்தப்பட்ட நடிகையைத் தேடிப்போய் பிபாஷா பாசு சண்டை போட்டிருக்கிறார். அதே சமயத்தில் பிபாஷா பாசுவை யாராவது கொத்திக்





கொண்டு போனால் ஜான் சொல்லில் எகுறுகிறாராம். இப்போது இரண்டு பக்கமும் வில்லி - வில்லன்கள் இல்லாத நிலை ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.

பிபாஷாவுக்கு ஜானைப் பிடிக்கும். ஜானுக்கு பைக்கைப் பிடிக்கும். "எங்கள் காதல் உருவாகக் காரணமாக இருந்தது அந்த பைக்தான். எனவே அவர் பைக்கை நேசிப்பது என்னைக் காதலிப்பது போலத்தான்" என்கிறார் பாசு. 'தூம்' படத்தை ஜானுக்காகவே 20 தடவைகள் பார்த்தேன். நானும் ஆப்ரகாமும் சேர்ந்து நடிக்க வேண்டும் என்று விருப்பமுண்டு. 'தூம்' முதல் பாகத்தில் அவர் நடித்தார். இப்போது இரண்டாம் பாகத்தில் நான் நடிக்கிறேன். 'மகாபாரதம்' புராணப் படத்தில் திரௌபதி வேடத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறேன்" என்கிறார். சரி எப்போது 'டும்டும்' என்றால்,

நம்மூர் நடிகைகளைப்போல "அதற்குள் என்ன அவசரம்? இன்னும் கொஞ்சநாள் காதலிக்கிறோம். சினிமாவிலும் இன்னும் சாதிக்கணும். அதனாலே இப்போது காதலித்துக் கொண்டே இருக்கிறோம். அதிலும் காதலிக்க அதிக நேரம் கிடைப்பதில்லையே" என்ற கவலைதான் என்கிறார்.

---




**விளையாட்டில்** அக்கறை காட்டியதைப் போலவே கற்றுக் கொள்வதிலும் அதிக ஈடுபாடு காட்டினார். அவர் விரும்பிப் படித்த முதலாவது நூல் விவிலிய நூல் தான்.

இதற்குப் பிரதான காரணமாக அமைந்தது, விவிலிய 'பழைய ஏற்பாடு' புத்தகமானது கடவுள் மனிதனை எதற்காகப் படைத்தார், எவ்வாறு படைத்தார், ஆதாம் - ஏவாள் படைக்கப்பட்ட கதை, அதைத் தொடர்ந்து மோசே, எகிப்தில் அடிமைகளை விடுவித்துக் கொண்டு மீண்டு வரும்போது, வனாந்தரங்கள், பாலை வனங்கள் வழியாக 40 ஆண்டுகள் அலைந்து பாதை தவறிபட்ட துன்பங்கள், பின்னர் இஸ்ரேல் எனும் தாயகத்தை நோக்கி நடந்த யாத்திரையின் போது நடந்த நிகழ்ச்சிகள் என்பன பிடலை வியப்பில் ஆழ்த்துபவைகளாகவே இருந்தன.

மோசே எழுதி வெளியிட்ட 'பத்துக் கற்பனைகள்' 'சட்ட விதிகள்', பின்னர் யோசுவா ஜெரிகோ நகரின் கோட்டையைத் தகர்த்துப் பிடித்தது. சாம்சன் என்ற மாவீரன் தன் கரங்களால் மாளிகைத் தூண்களை நொறுக்கியது, திமிங்கிலம் விழுங்கிட அதன் வயிற்றில் மூன்று நாட்கள் இருந்துவிட்டு மீண்டும் வெளிவந்த யோனாசின் கதை, பாபிலோன் நகரம் பாவம் செய்ததற்காகத் தண்டிக்கப்பட்டது, தீர்க்கதரிசி தானியேலின் கதை, கோலியாத் என்ற பராக்கிரமசாலியை தானியேல் என்ற சிறுவன் கவன் கல்லால் அடித்து வீழ்த்தியது, யோசேப்பு - சகோதரர்கள் கதை என ஆபிரகாம் தொடங்கி யோவான், இயேசுநாதர் என்று பழைய ஏற்பாட்டைப் படித்த போதுதான் பிடலுக்கு போர் முறைகளைப் பற்றியும், வெற்றிகளின் மகத்துவம் பற்றியும் மேலும் சூட்சுமங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது. பழைய ஏற்பாட்டைப் படித்தபோது பல சம்பவங்கள் தனக்குப் படிப்பினையாகவும் முன்னெச்சரிக்கை உணர்வைத் தந்ததாகவும் பிடல் அடிக்கடி கூறுவார்.

பொதுவாக மேடைப் பேச்சுக்களில் விவிலியக் கதைகளை ஞாபகப்படுத்தியோ, உதாரணப்படுத்தியோ கதைகளைக் கூறிக் கருத்துக்களை சுவையாகக் கூறுவார் பிடல். அவர் கருத்துக்களை முன்வைக்கின்ற தோரணையும், சுவாரஸ்யமும் கூட்டத்தை ஈர்த்துக் கட்டிப் போட்டிருக்கும். பிடலின் பேச்சைக் கேட்பதற்கென்றே கூட்டம் கூடியது எனலாம்.

பெலன் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு ஹவானாவில் இருந்த கத்தோலிக்கக் கல்லூரியில் பயின்ற போது, அங்கும் பல வித்தியாசமான அனுபவங்கள் அவருக்குக் கிடைத்தன. அங்குள்ள கல்லூரிகளில் பல வகையான மாணவர்கள் கல்வி பயன்று வந்தனர். இவர்கள் பெரும்பாலும் அரச உயர் அதிகாரிகளினதும், பண்ணையார் வீட்டாரினதும் பிள்ளைகளாகவே இருந்தனர். பிடல் பெரிய நிலச் சுவாந்தரின் மகனாக இருந்த போதும், ஹவானாவில் இருந்த உல்லாச வீடுதிகளுக்கோ, நீச்சல் குளம் ஆகியவற்றுக்கோ, பணக்காரர்களின் வீடுகளில் நடத்தப்பட்ட விருந்துகளுக்கோ பிடலை எவரும் அழைக்கமாட்டார்கள். இதற்குக் காரணம், பிடல் பரம்பரைப் பணக்காரர் அல்ல என்பதாகவே கூறப்பட்டது. அவர் ஒரு விவசாயியின் மகன் என்றே அவருக்கான கௌரவம் மறுக்கப்பட்டது.

தன்னை யாரும் அழைக்கவில்லை என்பதற்காகப் பிடல் கவலைப்படவில்லை. தன்னை அழைக்க வேண்டும் என்று பிடல் விரும்பவுமில்லை. மனிதர்களை மனிதர்களாகப் பார்க்காத, பணத்தைக் கொண்டு மதிப்பீடு செய்யும் பணக்கார வர்க்கத்தினரைப் பிடல் நேசிக்காததும் இதற்கு ஒரு காரணமாக இருந்தது. ஒதுக்கி நடப்பவர்களை தானே ஒதுக்கி வைத்து விடுவது என்ற முடிவுக்கு வந்தார்.

இந்தக் காலப் பகுதியில் பிடல் சிறந்த விளையாட்டு வீரர் என்பதாலும், நல்ல மாணவர் என்பதாலும், மாணவர் தலைவராகவும், புதியனவற்றைத் தேடும் குழுவின் தளபதி என்றும் நியமிக்கப்பட்டார். மாணவர் தலைவராக இருந்த பிடல், மலை ஏறுவதில் அதிக அக்கறை காட்டினார். இதுபற்றி பிடல், பின்னாளில் நினைவு கூரும் போது, 'என் அரசியல் போராட்டங்கள் பெரும்பாலும் மலைகளில் தான் பல ஆண்டுகள் நடக்கப்போகிறது என்பது அப்போது தெரியாது' என்பார்.

தருவது
**எம். கேஷிகன்**

மாணவர்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வுக் கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கு மாணவர் தலைவர் என்ற பதவி பிடலுக்கு இன்னும் வாய்ப்பாக அமைந்தது.

### கியூபா விடுவிப்பு!

அமெரிக்க அரசு பிளாட் ஒப்பந்த அடிப்படையில் ஸ்பெயின் நாட்டினுடைய ஆட்சி அதிகாரத்தை 1920 ஆம் ஆண்டிலேயே முடிவு கட்டியது. இந்த நடவடிக்கையை நியாயப்படுத்தும் விதமாக கியூபாவின் விடுதலையாகக் கூறியது. ஆனால், உண்மையில் ஸ்பெயின் அதிகாரத்தை விடவும், அமெரிக்கக் கூலிகளின் நிர்வாகங்கள் ஆட்சி பீடமேறத் தொடங்கிய பிறகுதான் கியூபாவில் ஜனநாயகத்துக்குச் சாவுமணி அடிக்கப்பட்டது எனலாம். அமெரிக்கா கூறுகிறபடி அது நியமிப்பவர்களைத் தொடர்ந்து கியூபாவின் குடியரசுத் தலைவர்களாகத் தேர்தல்களில் நியமித்துக் கொண்டது. 1926 ஆம் ஆண்டு மார்ச்சடோ என்பவர் இவ்வாறுதான் குடியரசுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் பொறுப்புக்கு வந்தபிறகு கியூபாவில் சில மாற்றங்களைச் செய்ய முற்பட்டார். அதன்படி 1928 இல் அரசியல் சட்டத்தை திருத்துவதாகக் கூறி, குடியரசுத் தலைவரின் அதிகாரக்காலத்தை நான்கு வருடத்திலிருந்து ஐந்து வருடங்களாக நீடித்தார். அதுமட்டுமல்லாமல் அடுத்து அவரே நடத்திய தேர்தலில் அவர் மட்டுமே வேட்பாளராகப் போட்டியிட்டு தானே வெற்றிபெற்றதாகவும் அறிவித்தார். மார்ச்சடோவின் இந்த முடிவை மக்கள் எதிர்த்தனர். மக்களின் விருப்பு வெறுப்புகளை மார்ச்சடோ கருத்தில் கொண்டிருக்கவில்லை. அன்றுமுதல் மாணவர்களும், விவசாயிகளும் மற்றும் ஜனநாயகத்தை விரும்பிய ஏனைய அரசியல் கட்சியினரும் திரண்டு மார்ச்சடோ அரசுக்கு எதிராகப் போராடினார். இந்தப் போராட்டங்களை மார்ச்சடோ அரசு மிகக்கடுமையான வகையில் அடக்கமுற்பட்டது. 1930 முதல் 1933 வரையான மூன்று ஆண்டுகளில் கொடுமையான



அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டு இரும்புக் கரங்கொண்டு மக்களை அடக்க முற்பட்டார் மார்ச்சடோ. மக்கள் பல துயரங்களுக்கு முகம் கொடுத்தபடி அரசின் அடக்கு முறைக்கு எதிராகப் போராடினர். இதையெல்லாம் அமெரிக்க அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

பிரச்சினைகள் அதிகரிக்க அதிகரிக்க நாடே போர்க் களமாகக் காட்சியளித்தது. இந்தக் காலகட்டத்திலேயே 1929 இல் சட்டவிரோதமாக்கப் பட்டிருந்த கியூபா கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரும், மாணவர் இயக்கத்தின் தலைவருமாகவிருந்த ஜூ லியோ அண்டோனியோ மெல்லா, மெக்ஸிக்கோவில் சர்வாதிகாரியின் ஏவுதலின்படி கூலிப் படையினரால் கொல்லப்பட்டார்.

(அசத்தல் தொடரும்)


# பிரதமர் பண்டாரநாயக்கா படுகொலை

**இலங்கைப்** பிரதமராக இருந்த பண்டாரநாயக்கா சுட்டுக் கொல்லப்பட்டார். இவர், உலகின் முதல் பெண் பிரதமரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் கணவராவார்.

சோசலிஸ சிந்தனை மிக்க பண்டாரநாயக்கா 1951 ஆம் ஆண்டு "ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி"யைத் தொடங்கினார். மக்கள் ஆதரவுடன் ஆட்சியைப் பிடித்து, இலங்கையில் பிரதமராகப் பதவி வகித்து வந்தார்.

**புத்த பிக்கு வேடத்தில் தாக்குதல்**

பண்டாரநாயக்கா தினமும் காலை வேளைகளில் தன்னைப் பார்க்க வீட்டிற்கு வருபவர்களைச் சந்திப்பது வழக்கம். இதன்படி 25 - 09 - 1959 அன்று காலை 10 மணியளவில் வீட்டிற்கு வெளியே பெரும் கூட்டம்



கூடியிருந்தது. அவர்களைச் சந்தித்து விட்டு பண்டாரநாயக்கா வீட்டிற்குப் போனார்.

வாசலில் புத்த பிக்கு வேடத்தில் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவரைப் பார்த்ததும் பிரதமர் கை கூப்பி வணங்கினார். ஆனால் அந்தப் பிக்குவோ தன்னுடைய கைத்துப்பாக்கியை எடுத்து பண்டாராநாயக்காவை நோக்கிச் சுட்டார்.

சற்றும் எதிர்பாராத பண்டாரநாயக்கா அதிர்ச்சியடைந்து, வீட்டிற்குள் ஓடினார். பிக்குவும், அவரைப் பின்தொடர்ந்து ஓடியபடியே சுட்டார். மொத்தம் 6 தடவை சுட்டார்.

**4 குண்டுகள் பாய்ந்தன!**

பண்டாரநாயக்காவைக் காப்பாற்றச் சென்ற ஒருவர் மீதும் குண்டு பாய்ந்தது. அவரும் காயம் அடைந்தார். இரத்தம் பீறிட பண்டாரநாயக்கா கீழே விழுந்தார். உடனடியாக அவரைப் பெரிய (அரசாங்க) ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். டாக்டர்கள் பரிசோதித்துப் பார்த்ததில், பண்டாரநாயக்காவின் உடலில் 4 குண்டுகள் பாய்ந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு குண்டு இடது மணிக்கட்டில் பாய்ந்திருந்தது. இரண்டாவது குண்டு வலது விலாவில் பாய்ந்து கல்லீரலில் ஊடுருவி இடது பக்கம் விலா வழியாக வெளியே சென்றுவிட்டது. மூன்றாவது குண்டு முதுகிலும், நான்காவது குண்டு அடி வயிற்றிலும் பாய்ந்திருந்தன.

இவற்றில் மூன்று குண்டுகள் உடலைத் துளைத்து விட்டு வெளியே சென்று விட்டன. வயிற்றில் தங்கிவிட்ட ஒரு குண்டை, ஐந்து மணி நேரம் ஆபரேஷன் செய்து அகற்றினார்கள்.

**நெருக்கடி நிலை பிரகடனம்**

பண்டாரநாயக்கா சுடப்பட்ட செய்தி, காட்டுத்தீபோல் இலங்கை முழுவதும் பரவியது. மக்கள் இடையே பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டன. இலங்கையில் "நெருக்கடி நிலை" பிரகடனப்படுத்தப்பட்டது. கலவரம் ஏற்படாமல் இருக்க இராணுவமும், பொலிஸும் குவிக்கப்பட்டன.

ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதும் பண்டாரநாயக்கா ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் கூறப்பட்டிருந்ததாவது:-

"புத்த பிக்கு வேடம் அணிந்த ஒரு முட்டாள் என்னைச் சுட்டுவிட்டான். அவனைப் பழிவாங்கக் கூடாது. மக்கள் பொறுமையாக இருக்க வேண்டும். ஆத்திரப் படக்கூடாது. நான் பிழைத்து எழுந்து, சேவை செய்வேன் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த நெருக்கடி நிலையைத் தைரியத்துடன் சமாளிக்கும்படி எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன்"

இவ்வாறு பண்டாரநாயக்கா கூறியிருந்தார்.

**புத்த பிக்கு**

பண்டாரநாயக்காவைச் சுட்ட பிக்குவைப் பொதுமக்கள் பிடித்துக் கொண்டனர். அடித்து உதைத்ததில் அவர் மயக்கம் போட்டு விழுந்தார். பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

பண்டாரநாயக்காவின் காவற்காரர் திருப்பிச் சுட்டதில் அவருடைய தொடையில் குண்டு பாய்ந்தது. அவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அவருடைய கூட்டாளி ஒருவனும் சிக்கினான்.

பண்டாரநாயக்காவைச் சுட்டவர் பெயர் 'சோமராமதேரோ' என்று தெரியவந்தது. அவர் புத்த மத பிக்குவாகவும், நாட்டு வைத்தியராகவும் இருந்தவர்.

**மரணம்**

ஆபரேஷனுக்குப் பிறகும் பண்டாரநாயக்காவின் உடல்நிலை மோசமாகவே இருந்து வந்தது. ஒரு தடவை தண்ணீர் வேண்டும் எனக் கேட்டார். இரண்டாவது தடவை எழுந்து "சுட்டவர் எப்படி இருக்கிறார்" என்று விசாரித்தார்.

மறுநாள் (26 ஆம் திகதி) காலை 7 மணியளவில் உடல் நிலை மேலும் மோசமானது. பண்டாரநாயக்காவுக்கு மூச்சுத் திணறியது. இரத்த ஓட்டம் தடைப்பட்டது. 8 மணிக்கு அவரது உயிர் பிரிந்தது.


அருகில் மனைவி மற்றும் மூன்று குழந்தைகளும் இருந்தார்கள்.

**நேரு அனுதாபம்**

பண்டாரநாயக்கா இறந்த செய்தி உடனேயே ரேடியோ மூலம் இலங்கை மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதைக் கேட்டு இலங்கை முழுவதும் துக்கத்தில் மூழ்கியது. கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டன.

இந்தச் செய்தி டெல்லிக்கு எட்டியதும் அரசியல் வட்டாரத்தில் பெருங்கவலை ஏற்பட்டது. இந்திய அரசாங்கக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டன. சென்னைக் கோட்டையிலும் கொடி அரைக் கம்பத்தில் பறந்தது.

பண்டாரநாயக்காவின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவித்து பிரதமர் நேரு, ஜனாதிபதி ராஜேந்திரபிரசாத், சுதந்திரக்கட்சித் தலைவர் ராஜாஜி மற்றும் பல நாட்டுத் தலைவர்களும் அனுதாபச் செய்தி அனுப்பினார்கள்.





மரணம் அடைந்தபோது பண்டாரநாயக்காவுக்கு 60 வயது. 1899ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி பிறந்தார். இங்கிலாந்து நாட்டுக்குப் போய்ப் படித்தார். வக்கீல் வேலை பார்த்தார்.

1927இல் அரசியலில் குதித்தார். 1931இல் இருந்து இலங்கை சட்ட சபையில் உறுப்பினராக இருந்தார். 1936 இல் முதல் மந்திரியாக இருந்து வந்தார். 1951 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தொடங்கினார்.

**1956 இல் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

பண்டாரநாயக்கா திருமணம் ஆனவர். பண்டாரநாயக்காவின் மனைவி ஸ்ரீமாவோ. இவர்களுக்கு சுனேத்ரா, சந்திரிகா என்ற இரு மகள்களும் அநுரா என்ற மகனும் இருந்தார்கள்.

**புதிய பிரதமர்**

பண்டாராநாயக்கா இறந்ததும், இலங்கை மந்திரி சபையில் அவசரக் கூட்டம் நடந்தது. "தஹநாயக்கா" என்பவர் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனே அவர் பதவி ஏற்றுக் கொண்டார்.

**உடல் அடக்கம்**

பண்டாரநாயக்காவின் உடல் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக 4 நாட்கள் வைக்கப்பட்டிருந்தது. இலட்சக்கணக்கான சிங்கள மக்களும், இலங்கை வாழ் தமிழ் மக்களும் அவரது உடலைப் பார்த்துக் கண்ணீர் சிந்தினார்கள்.

பின்னர் பண்டாரநாயக்கா உடல் அலங்கரிக்கப்பட்ட வண்டியில் வைத்து இறுதி ஊர்வலம் நடந்தது. பீரங்கிக் குண்டுகள் 19 தடவை முழங்க, ஊர்வலம் புறப்பட்டது.

30 மைல் தூரத்தில் இருக்கும் பண்டாரநாயக்காவின் சொந்த ஊரான 'ஹொரகொல்ல'வுக்கு ஊர்வலம் போய்ச் சேர்ந்தது. அங்கு பண்டாரநாயக்காவின் உடல் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.


அக்டோபர் 1ஆம் திகதி மாலை பண்டாரநாயக்காவின் தந்தை அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்துக்கு அடுத்தாற்போல் பண்டாரநாயக்காவின் உடல் இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

இலங்கை கவர்னர் ஜெனரல் குணதிலக, புதிய பிரதமர் தஹநாயக்கா, மந்திரிகள், பிரமுகர்கள் மற்றும் இலட்சக்கணக்கான ஆண்களும், பெண்களும் இதில் கலந்து கொண்டார்கள்.

உடல் அடக்க நிகழ்ச்சியில் மூவாயிரம் புத்த பிக்குகள் கலந்து கொண்டார்கள். அவர்களுக்குப் பலத்த பொலிஸ் காவல் கொடுக்கப்பட்டது. ●

# பாடம் புகட்டிய வியட்நாம் 23

**தமது** தலைவர் அங்கு வருவதையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு இருந்தன. அப்பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கிடையில் வியட்கொங் இராணுவத்தினர் ஊடுருவக் கூடும் என்ற பயத்தினால் அமெரிக்காவிலிருந்து விசேட அவர்கள் அமெரிக்காவில் விசேட பயிற்சியினைப் பெற்றிருந்தனர். அதாவது ஆயுதங்கள் சகிதம் வரும் ஒருவரை தமது கையில் எந்த வித ஆயுதமும் இல்லாமல் சமாளிக்கக்கூடிய அளவில் பயிற்சியினை மேற்கொண்டிருந்தார்கள். இப் பயிற்சியினைப் பெற்றவர்களை அனேகமாக போர் நடவடிக்கைகளின் போது முன்னே விடாமல் இவர்களைக் கொண்டு விசேட கெரில்லாத் தாக்குதல்களை நடத்துவது வழமை.



அதிரடிப் படையினர் வட வியட்நாமிற்கு வரவழைக்கப்பட்டிருந்தார்கள்.



அப்படிப்பட்ட படையினரை அமெரிக்க ஜனாதிபதியின் பாதுகாப்பிற்காக வட வியட்நாமில் குவித்திருந்தார்கள். வியட்நாமிய மக்கள் அனைவரும் அக்குவேறு ஆணிவேராகப் பிரித்து பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அவர்களைப் போட்டு அவ்வாறு வாட்டி எடுத்து சோதனைகளை மேற்கொண்டிருந்தார்கள். இவ்வளவு பாதுகாப்பு இருப்பதால் இனி மேல் வியட்கொங் இராணுவத்தினரால் தம்மை நெருங்க முடியாது என்று பெருமிதம் கொண்டான் ரிக்.

இங்கு காட்டிற்குள் அமெரிக்க ஜனாதிபதி வந்தவுடன் தாக்குதல் நடவடிக்கைகளை எப்படி தொடுப்பது என்று வியூகம் வகுக்கப்பட்டுக் கொண்டு வந்தது. இவ் வியூகத்தில் ஜனாதிபதி கென்னடிக்கு எந்த வித சேதாரமும் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்று வியட்கொங் இராணுவத் தளபதி கட்டளை பிறப்பித்திருந்தார்.




அக்கட்டளையினை அனைத்து வியட்கொங் இராணுவ வீரர்களும் ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

ஜனாதிபதி எந்த நாளில் தாம் வருவார் என்பதை முன்கூட்டியே அறிவித்திருக்கவில்லை. குறிப்பிட்ட ஒரு நாளில் அவர் அங்கு வந்திறங்குவார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வறிவித்தலில் ஜனாதிபதியின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களையும் மிகவும் அவதானமாகக் கவனிக்குமாறு உறுதியான கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

வட வியட்நாமில் பிரதான படை முகாம் அமைந்திருக்கும் இடத்தில் இருந்த அனைத்து போக்குவரத்து பாதைகளும் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்து நெரிசல் பாதையில் இருந்தது. இந்நெரிசலைப் பயன்படுத்தி வியட்கொங் இராணுவத்தின் சிலர் வட வியட்நாமிற்குள் புகுந்தனர். அவர்கள் கையில் எந்த வித ஆயுதங்களையும் கொண்டு வந்திருக்கவில்லை. ஆயுதம் தாங்கி வருவது தங்கள் பாதுகாப்பிற்குப் பங்கம் விளைவிக்கும் என்று அவர்கள் நிராயுதபாணிகளாகவே இருந்தார்கள்.

(தொடரும்)



முல்லை போன்ற முறுவல் – காட்டி,
மோக வாதை நீக்கி,
எல்லை யற்ற சுவையே! – எனை நீ
என்றும் வாழவைப்பாய்.
– சுப்பிரமணிய பாரதியார்

# பாப்பா முரசு

## குட்டி சூரியன்!



**முன்னொரு** காலத்தில் ஆட்டாம்பட்டி என்ற கிராமத்தில் காளையப்பன் என்பவன் வாழ்ந்து வந்தான். அந்த காலத்தில் விளக்கு வெளிச்சத்தைக் கூட அறியாத ஜனங்கள் அவர்கள். நாகரிகமே அறியாமல் அந்த ஊர் மக்கள் பத்தாம் பசலிகளாக வாழ்ந்து வந்தனர். மாலை நேரம் வந்து சிறிது இருட்டிவிட்டாலும் போதும் அந்த ஊரில் உள்ள எல்லோரும் படுத்துத் தூங்கிவிடுவர். இருட்டில் வெளிச்சத்தை உண்டாக்க விளக்கு என்ற ஒன்று இருப்பதே அவர்களுக்குத் தெரியாது.

பல ஆண்டுகளுக்கு முன்னரே வேற்றூர் சென்றுவிட்ட தன் நண்பனைக் காண நினைத்தான் பக்கத்து வீட்டுக்கார காளையப்பன். பல நாட்கள் பயணம் செய்து நண்பனின் ஊரை அடைந்தான். நண்பனும் இவனை வரவேற்றான். இரவு நேரம் வந்தது. வீடு முழுவதும் வெளிச்சம் தந்து கொண்டிருந்த அந்த விளக்கை வியப்புடன் பார்த்தான் காளையப்பன்.

தன் நண்பனிடம், "அறை முழுவதும் நல்ல வெளிச்சம் தருகிறது. இதுபோன்ற ஒன்றை நான் இதுவரைக்கும் பார்த்ததேயில்லை.

### பாப்பா முரசு சிறுகதை

இதன் பெயர் என்ன?" என்று கேட்டான் அவன்.

நண்பனைக் கேலி செய்ய நினைத்த நண்பன், இதுவா இதுதான் குட்டிச் சூரியன். இங்கிருந்து நீண்ட தூரமுள்ள தீவுகளில் இதைப் போன்ற குட்டிச் சூரியன்கள் ஏராளமாக உள்ளன. யார் அங்கு சென்றாலும் இதைப் போன்ற ஒன்றைப் பிடித்து வரலாம். நானும் அப்படித்தான் பிடித்து வந்தேன். இந்த ஊரிலுள்ள எல்லோர் வீட்டிலும் இதைப் போன்ற குட்டிச் சூரியன் நிறைய உள்ளது என்று கதை அளந்தான்.

அதை உண்மை என்று நம்பி அவன் ஊருக்குச் செல்லும்போது எப்படியாவது அந்த குட்டிச் சூரியனை திருடிச் செல்ல வேண்டுமென்று நினைத்தான்.

நள்ளிரவு நேரம் விழித்த அவன், நண்பன் நன்றாக உறங்குவதை அறிந்தான். எரிந்து கொண்டிருந்த அந்த விளக்கை எடுத்து வீட்டுக் கூரையில் மறைத்து வைத்தான்.

சிறிது நேரத்தில் வீடே தீப்பிடித்துக் கொண்டது. விழித்த நண்பன், அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓடி வந்தான். வீடு முழுவதும் எரிந்து சாம்பல் ஆயிற்று. தீயில் எரிந்து போகாத பொருட்கள் ஏதேனும் கிடைக்குமா என்ற எண்ணத்தில் அந்தச் சாம்பலைக் கிளறித் தேடினான் நண்பன்.


காளையப்பனும் சும்மா இருக்காமல் சாம்பலைக் கிளறினான்.

நீ என்ன தேடுகிறாய்? என்று எரிச்சல்பட்டான் நண்பன்.

ஊருக்குச் செல்லும் போது எடுத்துச் செல்லலாம் என்ற எண்ணத்தில் குட்டிச் சூரியனை எடுத்து வீட்டுக் கூரையில் ஒளித்து வைத்தேன். அதைத்தான் தேடுகிறேன் என்று சொன்னான் காளையப்பன். வீடு எரிந்து சாம்பலானதற்குக் காரணம் நண்பனுக்குப் புரிந்தது. முட்டாளான இவனோடு பழகியதற்காகத் தன் தலைவிதியை நொந்து கொண்டான் அவன்.

நீதி : முட்டாள்களிடம் விளையாட்டிற்குக் கூட பழக்கம் கூடாது. பிறகு அதுவே வினையாகிவிடும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 23.01.2007

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 678**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 676

**பரிசுக்குரியவர்:**
**பு. துர்ஷிகா, தரம் -3, மட்/கோட்டமுனை கனிஸ்ட வித்தியாலம், மட்டக்களப்பு.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| கமிலஸ் கிருத்திகன், 9, அம்மன் கோவில் வீதி, பண்டாரிகுளம், வவுனியா. | த. சௌமியா, தரம் 6T, வுல்வெண்டால் மகளிர் மகா வித்தியாலம், கொழும்பு -13 |
| பர்வீன் பளீல், 37/15, ஹிஜ்ரா மாவத்த, மல்லவபிடிய, குருநாகல். | டி. ஆர். ஹெவின்ஸ்ரன், 82, புதுச்செட்டித் தெரு, கொழும்பு - 13 |
| ஜெ. மயூரன், தரம் 4, தூய தோமாவின் கல்லூரி, பண்டாரவளை. | L. கனிசியஸ், பிரதான வீதி மன்னார் |
| கா. பிரசாந்தி, 89, பாபா பதி இல்லம், ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை. | பெ. பிரதீபன், குருமன்காடு வவுனியா. |
| ந. வித்யாஷினி, 42. இந்துமதி இல்லம், ரஜாவல்ல, திகன. | சா. டனிஸ்ரன், பிரதான வீதி மட்டக்களப்பு. |

## ஆத்திசூடி

### பழிப்பன பகரேல்

நீ மற்றவர்களை அழுக்காறு காரணமாகத் தரக்குறைவாகக் கேவலமான வார்த்தைகளால் பேசாதே.

எஸ். நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

## அன்புதான் உலகில் பெரியது...



சின்னப் பாப்பா, சின்னப் பாப்பா
சொல்வதை நல்லாக் கேட்டுக்கோ
சொல்லிய படியே நடந்துக்கோ
சொல்லும் உண்மை
புரிஞ்சுக்கோ!

அன்பு தான் உலகில்
பெரியது
அன்புக்கீடு இணை
கிடையாது
அன்பின் வகையோ
பலவாகும்
அன்பிலும் சிலவகை
வம்பாகும்!

அம்மா அன்பு கிடைக்காது
காசுக்கேதும் போகாது
வம்பு தனிலும் மாட்டினும்
வளமார் அன்பே விடையாது!


அண்ணா அன்பு தனிரகம்
என்றும் அதுவே உயர்வாகும்
தம்பி அன்பு ஒருவிதம்
தொல்லை தந்திடுத் தனி
சுகம்

ஆசிரியர் அன்போ கடிவாளம்
கட்டுக் கோப்பைத் தந்திடுமே
பாசமுள்ள தந்தையாரும்
காட்டும் அன்பே கரிசனம்!
அன்பு பலவாய் இருந்தாலும்
அன்பைப் புரிந்து பழகிக் கொள்!
வம்பு தும்பு எதுவரினும்
வகையாய் நின்றிடும் அன்பு தானே!

## அதிசய உலகம்


### ஐந்து நிமிடத்தில் ஐநூறு பேர் காலி!

**எ**றும்பு தின்னிகள் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள் தானே புஜ்ஜூஸ்...இவைகள் நம் நாட்டில் இல்லை. ஆனால், தென் அமெரிக்காவில் தான் மிக அதிகமாகக் காணப்படுகிறது. மூன்றடி உயரமும், ஆறடி நீளமும் உள்ள விலங்கு இது. இதன் மூக்கு நீண்டு தடித்து கூர்மையாக இருக்கும். பாம்புகளைக் கண்டால் இது பயப்படுவது இல்லை. தன் கூரிய நகங்களால் பாம்பையும் கிழித்து எறிந்து துண்டுகளாக்கிவிடும். எனவே, பாம்புகள் இவற்றைக் கண்டால் அலறி ஓடும். பகல் நேரத்தில் அமைதியாக தன்னுடைய இருப்பிடத்தில் படுத்துத் தூங்கும். இரவு வேளையில் வேட்டைக்குக் கிளம்பும்.



முதலில் கறையான் புற்று மற்றும் எறும்பு புற்றுகளில் தன்னுடைய நீண்ட மூக்கை உள்ளே நுழைக்கும். பிறகு தன்னுடைய நீளமான நாக்கை நீட்டி, இங்கும் அங்கும் துழாவும் போது அந்தப் புற்றில் உள்ள எறும்புகள் அதன் நாக்கில் உள்ள பசையில் ஒட்டிக் கொள்ளும். கால்களில் உள்ள கூரிய நகங்களால் கரையான் புற்றுகளைக் கூடத் தகர்த்தெறியும். புற்றுகளில் இருந்து வெளிவரும் கரையான்களையும் எறும்புகளையும் நாக்கால் நக்கி விழுங்கும். ஐந்து நிமிடத்தில் ஐநூறு எறும்புகளைத் தின்னும் இயல்புடையது.

## வைரமா அள்ளலாம்!



**ஆ**ற்றில் தூண்டில் போட்டால் மீன் கிடைக்கும் அல்லவா? ஆனால், ஒரு ஆற்றில் மட்டும் வைரங்கள் கிடைக்கிறது தெரியுமா? வயிமா என்ற ஆற்றில் தான் நிறைய வைரங்கள் கிடைக்கிறது. ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சேராலியன் என்ற நாட்டில் நிறைய வைரச் சுரங்கங்கள் உள்ளன. இந்தச் சுரங்கங்களில் இருந்து வெளியேறும் கழிவுகள், இந்த வயிமா ஆற்றில் வந்து விழுகிறது. இதனால் இங்குள்ள கிராமத்து மக்கள் ஆற்று மணலை அரித் தெடுத்து கிடைக்கும் வைரங்களை நல்ல விலைக்கு விற்கின்றனர். வாரீகளா நாமும் ஒரு எட்டு இந்த வயிமா ஆற்றுக்குப் போய் நிறைய வைரங்களை வாரிகிட்டு வரலாம்.

## சில விடுகதைகள்


1. வானத்துக்கும் பூமிக்கும் ஒரே கம்பி அது என்ன?
2. நடமாடும் சின்னஞ்சிறு வீடு சிட்டம்மாவுக்கு அது கூடு அது என்ன?
3. நேரான சாலையிலும் நெளிந்து வளைந்தே செல்வான் அவன் யார்?
4. தண்ணீருக்குள் பாதுகாப்பு தரைக்கு வந்தால் யார் காப்பு அவன் யார்?
5. வீட்டுக்கூரையில் தூங்குவது அதிகாலை அலாரம் அது என்ன?
6. கால்கள் நான்கிருந்தும் நடக்காதவன் அவன் யார்?
7. அண்ணன் வேக நடைக்காரன் தம்பி அன்ன நடைக்காரன் காலம் காட்டும் பணியில் இருவரும் ஓடிப்பிடிக்கிறார்கள் அவர்கள் யார்?
8. மழைக்கு முன் வரும் ஒளியும் ஒலியும் அது என்ன?
9. குளத்தோர பாட்டுக்காரன் பாம்புக்கு விருந்தாவான் அவன் யார்?
10. கொட்டினால் கடுக்கும் ஆனாலும் அவன் சேமித்தது இனிக்கும் அவன் யார்?

**விடைகள்**
1. மழை
2. நத்தை
3. பாம்பு
4. மீன்
5. சேவல்
6. நாற்காலி
7. கடிகாரத்தில் சின்னமுள் பெரியமுள்
8. இடி - மின்னல்
9. தவளை
10. தேனீ




# உயரமான மசூதி!

**ச**வூதி அரேபியாவின் ரியாத்திலுள்ள கிங்டம் மத்திய கட்டடத் தொகுதியின் 77 ஆவது மாடியிலுள்ள மன்னர் அப்துல்லா மசூதியே, மிக உயர்ந்த மசூதியாகும். நில மட்டத்திலிருந்து 183 மீற்றர்கள் அல்லது 600 அடி உயரமானதாகும். 2004ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஐந்தாம் திகதி இந்த மசூதி நிர்மாணித்து முடிக்கப் பட்டது.



# இதுவும் சாதனைதான்

**உ**லக சாதனையை எதில் நிகழ்த்துவது என்று சிலருக்கு விவஸ்தையே கிடையாது. மத்தியூ வின் என்ற பிரிட்டிஷ் பிரஜை லண்டனிலுள்ள உலக சாதனைப் புத்தகத்தை வெளியிடும் கின்னஸ் அலுவலகத்துக்கு 2005 ஆம் ஆண்டு டிசம்பரில் சென்று ஓர் உலக சாதனையை நிலைநாட்டினார். ஒரு நிமிடத்துக்குள் ஒன்றன் பின் ஒன்றாக 44 ரப்பர் பாண்டுகளை தனது தலைக்கு மேலாக இழுத்துப் போட்டு இச்சாதனையைப் படைத்தார் அந்த மனிதர். ஒவ்வொரு ரப்பர் பாண்டும் 3.9 அங்குலத்துக்கு மேற்படாத நீளத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்பது போட்டி



# எதிர்ப்பு சக்தி

**கீழே** விழுந்து விடாதபடி பூமியின் ஈர்ப்புச் சக்தியைத் தடுக்கும் கருவியொன்றில் தொங்கிக் கொண்டு மூன்று பந்துகளை மாறி மாறி எறிந்து நீண்ட நேரம் இந்த வித்தையை சாதித்தவர் என்ற பெயரை அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மார்க் எஸ்ஸன் என்பவர் தட்டிச் சென்றுள்ளார். 55.9 செக்கன்களுக்கு அவர் இந்த வித்தையைச் செய்து காட்டியுள்ளார். அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் உள்ள சிட்னி என்ற இடத்தில் அமைந்திருந்த, செவன் நெட் வேர்க் ஸ்டுடியோவில் இந்தச் சாதனையை 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி நிகழ்த்தினார்.



# பனிப் படகு

**த**டித்த பிளாஸ்ரிக் மேற்பகுதியைக் கொண்ட துணிக்குள் காற்றினை ஊதிச் செய்யப்படும் பனிக்கட்டிப் படகினை 'எயர்போர்ட்' என்று அழைக்கிறார்கள். இந்தப் படகில் சவாரி செய்பவர்கள் மார்புப் பகுதி படத்தக்கதாக வைத்து உந்துவதன் மூலம் ஒருவகைப் போட்டி ஐரோப்பிய நாடுகளில் நடத்தப்படுகிறது. சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த லோரன்ற் மத்தே என்பவரே இவ்வகைப் படகில் மிக வேகமாகப் பயணித்தவராவார். மணித்தியாலத்துக்கு 141.7 கிலோ மீற்றர் வேகத்தில் அல்லது 88.1 மைல் வேகத்தில் இவர் சவாரி செய்து சாதனை படைத்தார்.

2005 ஆம் ஆண்டு பிரான்சின் லெஸ் ஆர்க் என்ற இடத்தில் நடைபெற்ற பகிரங்க கில்ஸ் போட்டியில் அவர் இச் சாதனையைப் படைத்தார்.



# அபூர்வமானது

**மு**லையூட்டிகளென்ற வகைக்குள் சேர்த்துக்கொள்ள முடியாதளவுக்கு அபூர்வ உடலமைப்பைக் கொண்ட உயிரினமொன்று உள்ளது. இதனை ஆபிரிக்க ஆட்வார்க் என்றழைக்கிறார்கள். 'குழாய் வடிவிலான பல்' அல்லது 'நியூபிலின் டேற்றா' என்ற வகையைச் சேர்ந்த பிராணியென்று இதனை அழைக்கிறார்கள்.





எஸ். ஜே. சூர்யா - மீரா ஜாஸ்மின்
திருமகன்

# திருமகன்

# நான் நம்பர்-1
-விஜய்

விஜய் நடித்த 'போக்கிரி' படம் பொங்கல் வெளியீடு. இதுகுறித்து விஜய் கூறியதாவது: 'போக்கிரி' படம் அனைத்துத் தரப்பினருக்கும் பொங்கல் விருந்தாக அடைந்து இருக்கும். கடந்த 7 மாதம் கடுமையாக உழைத்திருக்கிறேன். கதையோடு காட்சி அமைப்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்பட்ட படம். 'போக்கிரி'யைத் தொடர்ந்து 'அழகிய தமிழ்மகன்' படத்தில் நடிக்கிறேன். இந்த ஆண்டு 3 படங்கள் வெளிவரும் வகையில் திட்டமிட்டிருக்கிறேன். நல்ல கதை அமைந்தால் 'ஆன்டி ஹீரோ'வாக நடிக்க ஆசை. ஆனால் ரசிகர்கள் விசிலடிக்கிற மாதிரி, படங்களில் நடிப்பதே இப்போதைய திட்டம். அடுத்த சூப்பர் ஸ்டார் நான்தான் என்ற கருத்து பரவி இருப்பதில் மகிழ்ச்சி. ஒவ்வொரு துறையில் இருப்பவர்களுக்கும் அந்தத் துறையின் நம்பர் வன் இடத்தைப் பிடிக்க ஆசை இருக்கும். அதற்காக உழைப்பார்கள். நானும் அப்படித்தான் சூப்பர் ஸ்டார் ஆக வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்படவில்லை. அதுவாக வந்து சேர்ந்திருக்கிறது. அந்த இடத்துக்கு நான் தகுதியானவனா என்பது பற்றி எனக்குத் தெரியாது.' - இவ்வாறு விஜய் கூறினார்.



மதுரிமா

சி னி வி சி

# 'அண்ணா'வாக கமல்?

செங்கை சினி ஆர்ட்ஸ் என்ற பட நிறுவனத்தார் பேரறிஞர் அண்ணாவின் வாழ்க்கை வரலாற்றை 'அண்ணா' என்ற பெயரில் எடுக்கவுள்ளனர். மிகப் பெரிய பட்ஜெட் காரணமாக இந்தப் படத்தைப் பொதுமக்களிடம் பணம் பெற்று உருவாக்கத் திட்டமிட்டு அதற்கான அறிவிப்பை வெளியிட்டனர். இதைக் கேள்விப்பட்ட வெளிநாடு வாழ் தமிழ் தொழிலதிபர் ஒருவர், 'பொதுமக்களிடம் பணம் கேட்க வேண்டாம். நானே முழுச் செலவையும் ஏற்றுக்கொள்கிறேன். அண்ணா மீது கொண்ட அளவற்ற பற்றினால் இதைச் செய்கிறேன். இந்த வேடத்துக்குப் பொருத்தமான ஒரே நடிகர், கமல்ஹாசன்தான்; அவரிடம் நடிக்க சம்மதம் கேளுங்கள். நானும் அதற்கான பேச்சு வார்த்தையில் ஈடுபடுகிறேன். தயவு செய்து தற்போது எனது பெயரை வெளியிட வேண்டாம்' எனக் கேட்டுக்கொண்டுள்ளார். இப்படத்தில் நடிக்க கமல் சம்மதித்தால் அண்ணாவின் பிறந்த நாளான செப்.15ஆம் திகதி பூஜையோடு படப்பிடிப்பு துவங்கும் என்று செங்கை சினி ஆர்ட்ஸ் பட நிறுவனத்தார் தெரிவித்தனர். கமல் சம்மதிப்பாரா?



ஆர்யா - பூஜா
ஓரம் போ

# நான் கதக் டான்ஸர்!

ஒரு பாட்டுக்கு ஆட மாட்டேன் என்று சொன்ன பிறகு ஹீரோயின் வாய்ப்புகள் வருவது சந்தோஷமாக இருக்கிறது. தமிழில் 'சொல்லி அடிப்பேன்', 'ஆரியா', 'திருரங்கா', நடிகை படங்களில் நடிக்கிறேன். இதில் 'நடிகை' படத்தில் கதக் டான்ஸர் கேரக்டர் உண்மையிலேயே நான் கதக் டான்ஸர் என்பதால், படம் முழுக்க அந்த மாதிரி வேடத்தில் நடிக்க வேண்டும் என்ற நீண்ட நாள் ஆசை நிறைவேறியுள்ளது. தெலுங்கில் 'எவரு அத்தடு' படம் விரைவில் வெளியாகிறது. புதுமுகம் சரத் தயாரித்து இயக்கி நடிக்கும் 'மீ 'வி ஹி தீ 'வி' மராட்டிப் படத்தில் நடிக்கிறேன். எனக்கு தாய்மொழி மராட்டி என்பதால், அப்படத்துக்கு நானே டப்பிங் பேசுகிறேன். புது ஹீரோ ஜோடியாக 'போஜ்புரி' படத்தில் நடிக்கிறேன். கேரக்டர் பிடித்ததால் அப்படத்தை ஒப்புக்கொண்டேன். அங்கு நக்மா, ரம்பா, குஷ்புவுக்கு வரவேற்பு இருக்கிறது. எனது படம் வெற்றிபெற்றால், தொடர்ந்து போஜ்புரி படத்தில் நடிப்பேன் என்கிறார் தேஜாஸ்ரீ.

# உதயன் இயக்கத்தில் சிம்பு!

புதுவருட ஆட்டத்திற்குத் தயாராகி விட்டார் சிம்பு. காதல் கத்திரி காய் இவற்றுடன் படம் இயக்கும் ஆசையையும் மூட்டை கட்டி பரணுக்கு அனுப்பி விட்டார். 2007இல் ஐந்து படங்களில் நடிக்க வேண்டும் என்பது சிம்புவின் டார்கெட். ஒரு நல்ல செய்தி, இந்த ஐந்து படங்களையும் வெளி ஆட்களே இயக்குகிறார்கள்.

'திமிரு' படத்தை இயக்கிய தருண்கோபி, சிம்புவை வைத்து படம் இயக்குகிறார். ஜி.வி.பிலிம்ஸ் தயாரிக்கும் இப்படம் சிம்புவுக்கு இந்த ஆண்டின் முதல் படமாக இருக்கும்.

அடுத்து விநியோகஸ்தர் திருச்சி விஸ்வநாத் தயாரிக்கும் படத்தில் நடிக்கிறார். இயக்கம் உதயன்.

அடுத்தடுத்து அடி வாங்கிக் கொண்டிருந்த விஜயகாந்துக்கு, பாலைவனச்சோலையாக அமைந்த படம் 'பேரரசு'. பைனான்ஸ் பிரச்சினையால் படம் பல வருடம் பெட்டிக்குள் கிடந்தாலும் பழைய வாசனை அடிக்காமல் ரசிகர்களுக்கு புத்தம்புது அனுபவத்தை பேரரசு தந்தது. வில்லன், நாயகன் என எதிரும் புதிருமான இரண்டு வேடங்களையும் விஜயகாந்த் செய்தது 'பேரரசு'வின் இன்னொரு புதுமை.

இந்தப் படத்தை இயக்கிய உதயன் சொன்ன கதை சிம்புவை ரொம்பவே இம்ப்ரஸ் செய்ய உடனடியாகக் கால்ஷீட் கொடுத்திருக்கிறார்.

தருண்கோபி படம் முடிந்ததும் உதயன் இயக்கும் படத்தில் நடிக்கிறார் சிம்பு.

# பாம்புக்குப் பதறிய கீர்த்தி சாவ்லா!

'பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்'. இதில் கீர்த்தி சாவ்லா எம்மாத்திரம்? கடந்த சில நாட்களாக மைலாப்பூர் கோகுலம் 'வுசில் 'சூர்யா' படத்தின் படப்பிடிப்பு நடந்து வருகிறது. ஸ்டண்ட் மாஸ்டர் ஜாக்குவார் தங்கம் முதன் முதலாக இயக்கும் படம். இவர் மகன் விஜய சிரஞ்சீவி ஹீரோ. கீர்த்தி சாவ்லா ஹீரோயின்.

படத்தில் விஜய சிரஞ்சீவி பயங்கர ஜாலி பேர்வழி. அதிலும் கீர்த்தி சாவ்லா என்றால் கேட்கவே வேண்டாம். விஜய சிரஞ்சீவியின் இந்த விளையாட்டுத்தனத்தை கோகுலம் 'வுசில் எடுத்து வந்தார் ஜாக்குவார்.

காட்சிப்படி விஜய சிரஞ்சீவி பேசிக்கொண்டிருக்கும்போது திடீரெனப் பாம்பு ஒன்றை கீர்த்தி மீது வீச வேண்டும். பாம்பாட்டியை வரவழைத்து பாம்பையும் தயார் செய்தாயிற்று. ஆனால், கீர்த்தியிடம் மட்டும் பாம்பு விஷயத்தைக் கூறவில்லை.

ஆக்ஷன் சொன்னதும் விஜய சிரஞ்சீவி பேசிக்கொண்டே கீர்த்தி மீது பாம்பை விட்டெறிந்திருக்கிறார். பாம்பைக் கண்டதும் பதறிப்போன கீர்த்தி அலறியபடி அரைகுறை மயக்கத்திற்கு சென்றிருக்கிறார். பிறகு யூனிட்டில் உள்ளவர்கள் கஷ்டப்பட்டு கீர்த்தியை சகஜ நிலைக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். சொல்லாமல் கொள்ளாமல் பாம்பு வீசிய அப்பாவையும் பிள்ளையையும் ஆங்கிலத்திலும் இந்தியிலும் அரைத்தெடுத்திருக்கிறார் கீர்த்தி!





பிரசன்னா - உதய தாரா
கண்ணும் கண்ணும்




விஜய்
போக்கிரி




## திரையில் 4 நிமிடங்களே ஓடும் பாட்டுக்கு ஆட மல்லிகா ஷெராவத்துக்கு ரூ.80 லட்சம்!

மும்பை திரையுலகில் அதிகம் சம்பாதிக்கும் நடிகைகளில் ஒருவர் மல்லிகா ஷெராவத். பல படங்களில் ஒரு பாடலுக்கு ஆட இவரை அழைக்கின்றனர். அதற்கும் லட்சம் லட்சமாக வாங்குகிறார்.

தமிழ் கதாநாயகிகள் ஒரு படத்தில் நடிக்க சராசரியாக ரூ.40 லட்சம் சம்பளம் வாங்குகிறார்கள். ஆனால் மல்லிகா ஷெராவத் 4 நிமிடம் மட்டுமே திரையில் ஓடும் ஒரு கன்னடப் பாடலுக்கு ஆட ரூ.80 லட்சம் வாங்கி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். அந்தப் பாடல் இடம்பெற்றுள்ள படத்தின் பெயர் 'பிரீத்தி ஏக் பூமி மேலே முதே' பிரேம் கதாநாயகனாக நடித்து, இயக்குகிறார்.



இந்தப் படத்துக்கு ஒரு பாடலுக்கு மட்டும் ஆட மல்லிகா ஷெராவத்தை ஒப்பந்தம் செய்தனர். 4 நிமிடமே திரையில் ஓடும் இந்தப் பாடலுக்கு தயாரிப்பாளர் அஸ்விணி ராம்பிரசாத் நிமிடத்துக்கு ரூ.20 லட்சம் செலவிட்டுள்ளார். 6 நாட்கள் இந்தப் பாடலுக்கு கால்ஷீட் கொடுத்து நடித்தார் மல்லிகா ஷெராவத். 7000 அடி காட்சிகள் எடுக்கப்பட்டன.

400 அடியே பயன்படுத்தப்பட்டது. மல்லிகா ஷெராவத் ரூ.80 லட்சம் சம்பளம் பெற்றுக் கொண்டார். படப்பிடிப்பின் போது 4 உதவியாளர்களுடன் பிரபல நட்சத்திர ஓட்டலில் தங்கி இருந்தார். ஹோட்டல் செலவு ரூ.4 லட்சம் ஆனது.

படப்பிடிப்புக்குக் காலை 8 மணிக்கு வரவேண்டிய அவர், 11 மணிக்குத்தான் வந்தார். முத்தம் கொடுக்கமாட்டேன். தூக்கலாகக் கவர்ச்சி காட்ட மாட்டேன் என்றெல்லாம் நிபந்தனைகள் விதித்து ஆடி கொடுத்துள்ளார்.

## கும்பமேளாவில் நடிகர் ஆர்யா : சாமியார்கள் கூட்டத்தில் 'நான் கடவுள்' படப்பிடிப்பு

ஆர்யா நடிக்கும் புதிய படம் 'நான் கடவுள்'. ஜோடியாக பாவனா நடிக்கிறார். நீண்ட இடைவெளிக்குப் பின் பாலா இப்படத்தை இயக்குகிறார். 'நான் கடவுள்' படத்துக்காக ஆர்யா கெட்டப்பை முழுமையாக மாற்றியுள்ளார். பாவனாவும் கிராமத்துப் பெண் சாயலில் நடிக்கிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடக்கிறது. வழிபாட்டுத் தலங்களில் பெரும் பகுதி படப்பிடிப்பு நடத்தப்படுகிறது.

கும்பமேளா திருவிழாவும் படமாக்கப்படுகிறது. அலகபாத்தில் நடைபெறும் இவ்விழா பிரபலமானது. உலகிலேயே அதிக பக்தர்கள் திரளும் விழாவாக 'கும்பமேளா' விழா கருதப்படுகிறது. நாடு முழுவதிலும் இருந்து கோடிக் கணக்கில் சாமியார்கள் இங்கு திரள்வார்கள்.

கடந்த 3ஆம் திகதி கும்பமேளா திருவிழா தொடங்கியது. ஆர்யா, டைரக்டர் பாலா உள்ளிட்ட படக் குழுவினர் கும்பமேளாவுக்குச் சென்றனர். அங்கு பக்தர்கள் கூட்டத்தில் ஆர்யா நடிக்கும் காட்சிகள் படமாக்கப்பட்டன. தமிழ் பேசும் சாமியார்கள் சிலரும் ஆர்யாவுடன் சேர்ந்து நடித்தனர். பாலா படமாக்கினார்.

'நான் கடவுள்' படம் யதார்த்தமாக இருக்க வேண்டும் என்பதற்காக கும்பமேளா விழாவைப் படமாக்கியதாக டைரக்டர் தரப்பில் தெரிவித்தனர்.




## சினிமினி

☞ நடிகைகளிடம் கவர்ச்சியை மட்டுமே எதிர்பார்க்கிறது தென்னிந்திய சினிமா. இது மிகுந்த வருத்தத்தைத் தருகிறது. நடிப்புக்கு வாய்ப்பு அதிகம் உள்ள படங்களில் மட்டுமே நடிக்க முடிவெடுத்திருக்கிறேன். அதனால் தமிழ்ப் படங்களுக்கு கொஞ்ச காலம் குட்பை சொல்லப் போகிறேன் என்றார் நயன்தாரா! அட இதுதான் காரணமா? நாங்க வேற என்னவோன்னு இல்ல நினைச்சோம்.

☞ வியாபாரி படத்தில் படு கவர்ச்சியாக நடித்திருக்கிறார் நமீதா என்று வருகிற செய்திகளில் கொஞ்சூண்டுதான் உண்மை இருக்கிறது. ஒரேயொரு சீனைத் தவிர, மற்றக் காட்சிகளில் எல்லாம் புடைவையில்தான் வருகிறார் நமீதா. அந்த ஒரு சீன் மட்டும்தான் ஹி...ஹி!!!

☞ மறுபடியும் நரேனுடன் ஜோடி சேர பாவனாவிடம் கால்ஷீட் கேட்டாராம் ஒரு இயக்குநர். யார் கூட வேண்டுமானாலும் பாவனா நடிப்பார். ஆனால் நரேன் என்றால் கோடி ரூபாய் கொடுத்தாலும் நடிக்க மாட்டார் என்று சொல்லிவிட்டார்களாம் பாவனா தரப்பில்! அப்படியென்ன இருவருக்குள்ளும் கசமுசா?

☞ சிவ மைந்தன் 'செம பாஸ்ட்'. திருமணமாகி, தேனிலவு சென்று இப்போதுதான் வந்தார்கள். அதற்குள் தனது திருமதியை மாங்காய் சாப்பிட வைத்திருக்கிறார். ஆம்! ஜோதியானவர் கர்ப்பமாக இருக்கிறாராம்!

## ஸ்ரீகாந்தின் புதிய படம் 'ம்'!

இரண்டு மாதத்திற்கு ஒரு படம் ரிலீஸ் ஆனாலும் பயன் ஒன்றுமில்லை. தொடர்ந்து படங்கள் தோல்வியைத் தழுவ, விரக்தியில் இருக்கிறார் ஸ்ரீகாந்த்.

தெலுங்கில் செல்வராகவன் இயக்கும் படத்தில் வெங்கடேஷ், த்ரிஷாவுடன் சிறிய வேடம் ஒன்றில் ஸ்ரீகாந்த் நடிக்கிறார். இது ஒன்றுதான் தற்சமயம் இவர் நடித்து வரும் ஒரே படம்.

நல்ல கதையும், கேரக்டரும் அமைந்தால் மட்டுமே நடிப்பேன் என ஸ்ரீகாந்த் முடிவெடுத்தது, இந்த வறட்சிக்கு ஒரு காரணம். ஸ்டார் வேல்யூ இல்லாத ஸ்ரீகாந்தும் புதுமுகம் மாதிரிதான் என தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும் நினைப்பது இன்னொரு காரணம்.

இதற்கெல்லாம் விடிவு காலம் ஏற்படும் எனத் தோன்றுகிறது. ஸ்ரீகாந்தை 'ரோஜா கூட்டம்' படத்தில் அறிமுகப்படுத்திய சசி மீண்டும் ஸ்ரீகாந்தை வைத்துப் படம் இயக்குகிறார்.

முந்தைய படத்துக்கு 'டிஷ்யூம்' என வித்தியாசமான பெயர் வைத்த சசி இந்தப் படத்துக்கு வைத்திருக்கும் தலைப்பு 'ம்'.

ஓர் எழுத்து டைட்டில் வைப்பதில் தயாரிப்பாளர் பாலாஜி ஒரு முன்னோடி. இவரது ஓரெழுத்து படமான 'தீ' பெரும் வெற்றி பெற்றது. 'ம்' அதனைத் தொடர வாழ்த்துவோம்!

## ஜாக்கிஷெராப் நடிக்கும் வங்கி

அருண் பிலிம் எண்டர்டெயின்மெண்ட் என்ற பட நிறுவனம் மிகப் பிரமாண்டமான முறையில் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று மொழிகளில் தயாரித்துக் கொண்டிருக்கும் படம் 'வங்கி'.

இந்தப் படத்தில் முதன் முறையாக பிரபல இந்தி நடிகர்கள் ஜாக்கிஷெராப், ராகுல்தேவ் நடிக்கிறார்கள். ஜாக்கிஷெராப் ஜோடியாக முன்னணி இந்தி நடிகை நடிக்கிறார். அதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ராகுல்தேவ் வில்லனாக நடிக்கும் இப்படத்தில் அப்பாஸ், ரகுவரன் வேதா சாஸ்திரி, சிந்து ஆகியோரும் நடிக்கிறார்கள்.

500 கோடி ரூபாய் பணம் இருக்கும் ஒரு வங்கியில் கொள்ளை அடிக்க திட்டம் தீட்டுகிறார் ஜாக்கிஷெராப். அவரது கூட்டாளிகளான அப்பாஸ் ரகுவரன் சிந்து ராகுல் தேவ் இவர்களின் உதவியுடன் பணத்தைக் கொள்ளை அடிப்பதற்காக வங்கிக்குப் போகிறார்கள். ஆனால் அங்கிருந்து 100 கோடி ரூபாய் பணத்தை மட்டுமே கொள்ளையடிக்க முடிகிறது. அப்படிக் கொள்ளை அடித்த பணத்தை நகரத்திலிருந்து 36 கிலோ மீட்டர் தள்ளி உள்ள ஒரு பாழடைந்த கிணற்றில் போட்டு வைக்கிறார்கள். அதை எப்படித் துப்பறிந்து பொலிஸ் மீட்கிறது என்பதே 'வங்கி'யின் கதை. முழுக்க முழுக்க ஆக்ஷன் படமாக உருவாகும் இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதித் தயாரித்து, இயக்குகிறார் பி.அருண்குமார்.







ரவி - பாவனா
தீபாவளி




## பிச்சைக்காரர்களின் பயணம்

கடலின் விழுதுகளில் தொங்கிக்
கொண்டிருந்தன
அந்தக் கப்பல்கள்.

வெள்ளைத்தோல் போர்த்து
ஒற்றைப் பரிமாணத்தில் சிந்திக்கும்
கனவான்களின்
பழசாகிப் போன கழுத்துப்
பட்டியைக்
கடலில் வீசுவதற்காகவே
வந்திருக்கின்றன.

கனவான்களின் நிலம் முடிகின்ற
புள்ளியிலும் கடல் இருக்கிறது
உடைந்து போன,
யுரேனியம், தோரியம் மற்றும்
ரேடியத்தின்
துகள்களை,
கழுத்துப் பட்டியில் சுற்றி
அந்தக் கடலில் போட முடியாது.
இந்து சமுத்திரத்தில் போட்டால்
இலகுவில் அமிழ்ந்து விடும் என்பது
அவர்களின் கணிப்பு.
பிச்சைக்காரர்களுக்கு அருகில்
குப்பை கொட்டிப்
பழகிவிட்டனர் எல்லோரும்.

கனவான்களின் வங்கிகள்
புற்றுநோய் பற்றி
ஆராய்ச்சி செய்ய -
பிச்சைக்காரர்களுக்குக்
கடன் தருகின்றன.

கனவான்கள் வீசிய
கழுத்துப் பட்டிகளை
அணிந்துகொண்டு
விழுதுகளில் தொங்கும் கப்பல்களில்
பிச்சைக்காரர்களின்
பயணம் தொடங்குகிறது.

*–வை.சாரங்கன்.*

## வாலிப இம்சை!

அவள்
கூந்தல் தோரணம்
அலங்கரிக்கப்பட்டது
வான வில்லிலா?

வாடியப் பூக்களும்
தலை நிமிர்ந்து பார்க்கும்
தாவணிப் பெண்ணே!
நீ வந்து போகும்
பாதையில் நின்று...!

நீ
கற்கண்டா?
கார மிளகா?
கண்கள் இனிக்கும்
காணும் தோறும்
கண் மறைவில்
உன் உருவானால்
கண்கள் நீர் சுரக்கும்!

வாலிப தேச பக்கங்களில்
அடிக்கடி உன்
அவதரிப்பு
இப்போது கால் தடமும் இல்லை...
காத்திருந்து தவிப்பில் வேகிறது
மனசு...
இனியாகிலும் தந்தி அனுப்பு
எம் பொழுது வீணாகாதிருக்கட்டும்!

சொல்லாமல் கொல்லும்
பெண் பா(ர்)வைகள் விஷம்!
பூப்படைந்த வாலிபங்களோ...
பாவம்!!

*–ஏ.ஆர்.எம்.நதார்,*
*ஜின்னாநகர்.*

## கல்லூரி நாட்கள்

கவலை மறந்த கல்லூரி நாட்கள்
கணப்பொழுதில் கடந்துவிட்டன
அற்புத நாட்கள் அவை
பள்ளிப் பருவமதை பசுமையுடன்
திரும்பிப் பார்க்கிறேன்
இனிமை என்னை இணைத்துக்
கொள்கிறது
இமைக் கீற்றுக்கள் போல
இளமை தழுவ இன்னிசைப் பூக்கள்
தூவி
துன்பங்கள் மறந்த பொழுதுகளை
மறக்கத்தான் முடியுமா...

பள்ளிக் கூடமதில் பட்டாம்பூச்சிகள்
நாங்கள்
படித்திடும் வேளையில் பரவசங்கள்
பல செய்து
பயிலாது திரிந்தோம், பிரிந்துவிட்ட
இதமான நாட்களை
நயமாக ஞாபகப்படுத்தினால்
கண்ணீரில் பல கதைகள்
சொல்லிவிடும் கடந்துவிட்டது காலம்
இதுதான்.

எங்கள் கல்லூரி நந்தவனத்தில்
நாட்களும் நகர்ந்தது போல
பூக்களும் உதிர்ந்து விட்டன
தோழரெல்லாம் தூரமாகிக்
கொள்கின்றனர்
இளமைக் கனவுகள்
இன்பத்தைத் துளைத்து விடுகின்றன
நான் இழந்த இதமான நாட்களை
மறுபடியும் மீட்டிக் கொள்கிறேன்!

*–எம்.எம்.அஸ்வர்,*
*ஓட்டமாவடி – 01.*

## இருள் வெளிச்சத்துக்குள்...

எனக்காகவும்
பல ஜன்னல்கள்
பின்னேரங்களில்
காத்துக் கிடக்கின்றன.

உனக்காக பல வருடங்களாய்
என்னிதயக் கதவு
வரவேற்பு மண்டபமாய்

மின்னலாய் வருகின்ற
ஒவ்வொரு ஒளிக்கீற்றுக்கும்
எந்தவோர் இடி முழக்கமுமில்லை

இதுதான்
கவலையின்றி வாழ்கின்ற
அலைகளின் பயணம்
அலைக்கு பாவம்

என் குருதி ஓர் கவிதை
எழுதியது
அதில்
....'உனக்காக
நான் காய்க்கும்
பூப்பப் பாசியாவேன்
...என்ற கருப்பொருளை
உள்ளடக்கி...'

ஒரு விடயத்தில்
நவீன நாய் வாலாகிவிட்டேன்.

பூரண பௌர்ணமி
இரண்டாம் பிறையாவதால்
பச்சை நிறம்
நெருப்புச் சொல்லாகி
பைத்தியம் பிடித்து
சொத்தியாகிறது.

சமாந்தரக் கோடானது போதும்
மின்சாரத்தில் சிக்கும்
முளையூட்டியாவோம்.

*–ஆயிஸா றிஸ்வின்,*
*மூதூர்.*

## சகதி முகாம் - வாழ்க்கை

அனுபவிக்க முடியாத
அவலம்
அகதி வாழ்க்கை.
அலங்கோலம்
சகதி வாழ்க்கை
இது!
சனங்களெல்லாம்
கும்பல்களாக
சூழ வாழுமிடம்.
சுகாதாரம்
தொலைந்த
சுற்றுச்சூழல் - மாசு
தொற்றுக்கு ஆன
முற்றுமுழுதான
தொழுவம்!
பெயருக்கு
நலன்புரி நிலையம்!
பெருச்சாளிகளுக்கு
விருந்தாகுமிடம்
மருந்துக்குக்கூட
மகிழ்ச்சியை
இங்கு மனம்
வெந்து வாழும்
தமிழ்
மக்களிடமிருந்து
கண்டுகொள்ள
முடியாத
கவலை
குடிகொண்ட இடம்!
சண்டை
வந்ததால் - இன்று
இந்த அவலம்!
சொந்த
இடங்களையெல்லாம்
இருந்த
பொருள்களையெல்லாம்
குண்டு மழை பொழிய
மாண்டவர்கள் போக
உயிர் தப்பி மீண்டவர்கள்
ஓடிவந்த இடம்!
அனுபவிக்க முடியாத
அவலம் நிறைந்த
சகதிமுகாம்!

*–கவிக்குயிலன்,*
*சேனையூர் – 06.*

## இடப்பெயர்வு

வறுமை எனும்
வலிய உளிகளால்
வதைக்கப்பட்ட சிற்பங்கள்! -
இன்று
வரையறையற்ற
இடப்பெயர் வால்
இன்னல் பட்டுந்
துடிக்கிறார்கள்!

இன்பத்தை மட்டும்
இலக்காக நினைத்தவர்கள் -
இன்று
இடப்பெயர்வு எனும்
இடுக்கணால்
இல்லறம் அற்றுத்
தவிக்கிறார்கள்!

பாவம் எனும் பதத்திற்கு
பாடம் தெரியாத
பாலகர்கள் இன்று
பரிதாபச் சாவை மட்டும்
பரிசாகச் சுமக்கிறார்கள்!

அமைதி வழி தேடி - தம்
அவலங்களை கவலைகளாக
கண்களில் நிரப்பியபடி
தெரு ஓரங்களிலும்
தேவையற்ற மர நிழல்களிலும்,
பள்ளியறைகளிலும், ஆலய
முற்றங்களிலும்
அகதி முகாமாக அவலத்துடன்
வாழும்
அந்தப் புண்பட்டவர்கள்
நிழலுக்குக் கூட நிம்மதி
கிடைக்காதா?

*–காந்தன், விசு,*
*சம்பூர் –03.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*கவிதை உலகில் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு; சிலர் தன்னுடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு. அந்த வகையில் கவிதைகள் வரையும் கவிஞர்களை ஊக்குவிப்பதற்காக இணையத்தில் இருந்து சில கவிதைகளை சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம்.*

## பெண்

பெண்ணே உலகிக் ஆதாரம்
அவளற்ற ஆண் வெறும்
தளமற்ற கட்டிடம்

உள்ளத் தவிப்புக்கு மருந்தும்
உயிரின் துடிப்புக்குச் சமாதானமும்
பெண்ணே இன்றி
பெறுவதுதான் எப்படி

கலையா கணினியா
இலக்கியமா இராணுவமா
நாட்டு தலைமையா
விண்வெளிப் புரட்சியா
எங்கே இல்லை அவள்

சொல்லுங்களேன்
உயிரைச் சுமக்கும் ஒரே உயிர்
உலகில் பெண்தானே?

துவண்ட மனதுக்கு
மடிதந்து தலைகோத
ஒரு பெண்ணற்றுப் போயின்
மனித இனம் மொத்தமும்
சுடுகாட்டுப் பிணங்கள்தானே

எல்லாச் சுகங்களும்
எங்கும் கிடந்தாலும்
ஒரு பெண்ணில்லா பூமியில்
சிறு பொழுதேனும் நகருமா

அந்தப் பூமியும் கூட
ஓர் அழகுப் பெண்ணல்லவா

நிலவா மலரா கடலா காற்றா
காண்பதெல்லாம் பெண்ணல்லவா

சுகங்களின் இருப்பிடம் அவள்
சொர்க்கத்தின் பொருளும்
அவளேதான்

ஓராயிரம் ஓட்டைகளும்
உருப்படாத துடுப்புமாய்
நடுக்கடலில் விடப்பட்ட
ஆசை ஓடங்கள்தானே
மனித மனங்கள்

ஒரு பெண்ணின் துணையின்றி
வாழ்வெனும் கரைசேர
வாய்க்குமோ கனவிலும்

அவளின் அன்பின்றி
ஆயுள் ரேகைக்கு
ஆயுள்தான் ஏது

அழப்பிறவா மனிதருண்டோ

ஓரெட்டில் அம்மா
ஈரெட்டில் தங்கை
மூவெட்டில் காதலி
நாலெட்டில் தாரம்
ஐயெட்டில் மகளென்று
சாவெட்டு வரும்வரை
நம் கண்ணீர் நிறுத்தி
அமைதியின் மடிகிடத்த
தம் கண்ணீர் பொழியும்
கருணை மேகங்களல்லவா
பெண்கள்

அறிவுரைக்கோ
ஆயிரம் நாவுகளுண்டு
ஆறுதலுக்கு
அவளன்றி வேறு வழியுண்டோ

பெரும்பாலும் பெண்கள்
உயிர்களைப் பிரசவிக்கும்போது
ஆண்கள்
அணுகுண்டுகளைத்தானே
பிரசவிக்கிறார்கள்

உயிர்களின் ஆக்கமெல்லாம்
பெண்ணே என்பதால்
அந்தத்
தெய்வமும் பெண்தானே!

*–அன்புடன் புகாரி.*

## உங்களைப் போலவே...?

இது...
எங்களின் கதை
நாங்களும் சுமந்தோம்
நிறையக் கனவுகளை
உங்களைப் போலவே...

காகங்கள் அல்ல
கழுகுகளும் வல்லூறுகளும்
தீனிக்காய்
எம் மேனிகொத்திப் போயின

இருண்ட பூமியில்
எம் பாதங்கள்
புதைக்கப்பட்ட போதிலும்
மௌனமாய் இருந்தோம்

முட்டையில் கருபிடுங்கி
தெருவில் வீசப்பட்ட போதும்
சட்டை கழற்றி
நிர்வாண மார்புகளை
உருசி பார்த்த போதும்
எமக்கு கண்ணீரே
வரவில்லை...
எம் முன்னோர்களே...
ஆசையாய்
குலுங்கி குலுங்கி
நீங்கள் பதித்த தடங்கள்
முழுதாய் அழிந்து போயின

வாய் திறந்து
நாங்கள் பிரசவிக்கும்
கொட்டாவிகள்
வட்டமேசை முன் எழுதட்டும்
ஒப்பந்தங்களில் காணாமல் போக...

நாங்களும் சுமக்கின்றோம்
நிறையக் கனவுகளை
இன்னும்...

உங்களைப் போல.

*–ஜே.டானியல், யாழ்ப்பாணம்.*

## அஞ்சி நிற்க மாட்டோம்

நன்றிகெட்ட மனிதருக்கு
அஞ்சிநிற்க மாட்டோம்
நாவினிக்கப் பொய்யுரைக்கும்
பேரைநம்ப மாட்டோம் - என்று
கூறுவோமடா - ஒன்று
சேருவோமடா
வீறுகொண்டு சிங்கம்போல் முன்
ஏறுவோமடா!

எளிய மக்கள் தலையில்காசு
ஏறி மிதிக்குது - அதை
எண்ணி எண்ணித் தொழிலாளர்
நெஞ்சு கொதிக்குது
வஞ்சனைக்கும் அஞ்சிடோம்
பஞ்சம் நோய்க்கும் அஞ்சிடோம்
பட்டினிக்கும் அஞ்சிடோம்
நெஞ்சினைப் பிளந்தபோதும்
நீதி கேட்க அஞ்சிடோம்
நேர்மையற்ற பேர்களின்
கால்களை வணங்கிடோம்
காலி என்றும் கூறி என்றும்
கேலி செய்யுங் கூட்டமே
காத்துமாறி அடிக்குது - நீர்
எடுக்கவேணும் ஓட்டமே
தாலி கட்டிகொண்ட மனைவி
போலுழைத்த எங்களைத்
தவிக்கவிட்ட பேரை - எந்த
நாளும் மறக்கமாட்டோமே.

*–பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.*

# கவர்ந்திழுக்கும் கண்கள்...


**நம்** முகத்திலேயே பளிச்சென்று, பார்ப்பவர்களைக் கவர்ந்திழுக்கும் முதல் விஷயமே கண்கள் தான். ஆனால், இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த கண்களை, நம்மில் பலர் சரியாகப் பராமரிப்பதில்லை.

அதனால்தான், நாம் எவ்வளவு அழகாக மேக்கப் போட்டாலும், கண்கள் சோர்வாகத் தெரிந்தால் முக அழகே அடிபட்டு விடுகிறது.

**சில சமயங்களில் கண்கள் உப்பி விடுவதற்கும், அல்லது சிவந்து போவதற்கும் என்ன காரணம்?**

❁ கம்ப்யூட்டர் அல்லது புத்தகங்கள் போன்ற நுணுக்கமான விஷயங்களை அதிக நேரம் பயன்படுத்துவது.

❁ சரியான தூக்கம் இல்லாததும்



தான் காரணம்.

**சரி, இதைத் தவிர கண்களில் வரும் பொதுவான பிரச்சினைகள் என்னென்ன?**

❁ பெரும்பாலான பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினை கண்களுக்குக் கீழே ஏற்படும் கருவளையம் தான். கண்களுக்கு அடியில் பை போல் சதை தொங்குவதும் மற்றொரு பிரச்சினை.

**எதனால் இந்த மாதிரியான பிரச்சினைகள் வருகின்றன?**

❁ டென்ஷனான வாழ்க்கை முறை கருவளையம் ஏற்பட முக்கியக் காரணம். நல்ல சரிவிகித உணவு சாப்பிடாதது, தூக்கமின்மை, தண்ணீர் சரியாக குடிக்காததும் மற்ற காரணங்கள்.

தவிர...சைனஸ் பிரச்சினைகள், தண்ணீரால் ஏற்படும் இன்பெ.்க்ஷன், சைனஸ், ஆஸ்துமா, அலர்ஜி போன்றவற்றால் கூட, கண்கள் உப்பிப் போவது மற்றும் கண்களுக்கு அடியில் பை போன்று தொங்கும் பிரச்சினைகள் வரலாம். சிலருக்குப் பரம்பரையாகக்கூட, இந்தப் பிரச்சினைகள் ஏற்படலாம்.

**சரி இதை எப்படிப் போக்குவது?**

❁ இன்ஸ்டண்ட் டீ பேக்குகள் (ஈரமானவை) அல்லது ஈர டீஸ்பூனை ப்ரீஸருக்குள் போட்டு வைத்து, அதைக் கண்களில் சில நிமிடங்களுக்கு வைத்திருந்தால் இரத்தக்குழாய்கள் சீராகி, கண்கள் உப்பியிருக்கும் நிலை மாறி சீராகி விடும்!

❁ குளிரூட்டப்பட்ட பாலில் இரண்டு பருத்திப் பஞ்சுகளை நனைத்து கண் இமைகளின் மேல் பத்து நிமிடங்கள் வைக்கலாம்.

❁ குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவி, உருளைக்கிழங்கு துண்டுகளை இமைகளின் மேல் வைத்து, பத்து நிமிடங்களுக்கு ரிலாக்ஸ் செய்யலாம்.

❁ கண்கள் உப்பலாக இருக்கும் நேரங்களில் சாதாரணமாக முகத்துக்குப் போடும் மாய்ஸ் சுரைஸர்களை கண்ணைச் சுற்றிப் போட பயன்படுத்தக்கூடாது. இது இவற்றை அதிகப்படுத்தி விடும். அந்த நேரம் தரமான ஐகேர் புராடக்ட்களை பயன்படுத்துங்கள். நார்மலாக இப்படிப் பயன்படுத்துவது நல்லது.

❁ சாப்பாட்டில் உப்பின் அளவைக் குறைத்தாலே கண்களில் ஏற்படும் உப்பசம் குறைந்து விடும்.

❁ .்பிரஷான பாதாம்பருப்பை பாலில் ஊற வைத்து அரைத்து, அதோடு எலுமிச்சை சாறு கலந்து கண்களைச் சுற்றி தொடர்ந்து போட்டு (படுத்த நிலையில்) பேக் காயும் முன்பே குளிர்ந்த நீரால் கண்களைக் கழுவி வந்தால் கண்களில் ஏற்படும் கருவளையம் போய்விடும்.

❁ கண்கள் உப்பி இருக்கும் நாட்களில் தலைக்குக் கூடுதலாக ஒரு தலையணை வைத்துப் படுங்கள். இது உப்புசம் தரும் கண் திரவங்கள் சுரப்பதைத் தடுத்து, கண்கள் வழமைக்கு வர உதவும்!

**கண்களை எப்படிப் பராமரிக்க வேண்டும்?**

❁ கண்களே, மிகவும் மெல்லிய பாகங்கள். அதனால் கண்களைக் கழுவும்போது, கண்களைச் சுற்றிய பகுதிகளை, அழுத்தித் தேய்க்காமல் மெதுவாகத் தேய்த்துக் கழுவ வேண்டும்.



அழுத்தித் தேய்த்தால், அதிக சுருக்கங்கள் ஏற்படவிடும்.

❁மிகவும் முக்கியமான விஷயம் என்னவென்றால் கண்ணில் போடுகிற மேக்கப்பை, படுக்கச் செல்லும் முன் கலைத்து விட வேண்டும்.

❁ அதே போல் கண்ணுக்குத் தரமான கண் மையை பயன்படுத்த வேண்டும்.

❁ கம்ப்யூட்டரில் வேலை செய்பவர்களுக்குச் சீக்கிரம் கருவளையம் விழுகிறதே? கண்களை எப்படிப் பராமரிப்பது?

❁ நுணுக்கமான வேலையைத் தொடர்ந்து பல மணி நேரங்கள் செய்பவர்கள் இப்படி செய்யலாம்.

❁ இருபது நிமிடங்கள் சேர்ந்தாற் போல் கம்ப்யூட்டரில் வேலை பார்த்தால் ஒரு பத்து நிமிடங்கள் கண்களுக்கு ஓய்வு கொடுப்பது அவசியம்.

கண்களை அகல விரித்து பின் பத்து, இருபது முறை கண்களைச் சிமிட்டுங்கள். அல்லது தூரத்திலிருக்கும் பசுமையான காட்சிகளைப் பார்த்தபடி கண்களைச் சிமிட்டினால், கண்கள் புத்துணர்ச்சி அடையும்...




# பெண்களுக்கு வரும் தைராய்ட் நோய்

**பெண்களைக்** குறி வைத்துத் தாக்கும் நோய்களில் தைராய்டும் ஒன்று.

இது நோய்க் கிருமிகளால் தாக்கப்படுவதில்லை. அயோடின் குறைவே இதற்குக் காரணம்.

கழுத்தில் மூச்சுக் குழலின் கீழே காணப்படும் தைராய்ட் சுரப்பிகள் உற்பத்தி செய்யும் ஹார்மோன்கள், மனித உடலின் இயக்கத்தில் பெரும் பங்கு வகிக்கிறது. அயோடின் ஏற்ற இறக்கம் இந்த சுரப்பிகளின் செயல்பாட்டை பாதிக்கிறது. இதனால் தைராய்ட் நோய் ஏற்படுகிறது.

குறைபாடு காரணமாய் பெண்கள் பருவமடையும் வயது தள்ளிப் போக நேரிடலாம், குறைந்த வயதிலேயே வயதுக்கு வருவதும் உண்டாகலாம் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.



சில பெண்கள் கருத்தரிக்க முடியாமல் போவதற்கும் தைராய்ட் பிரச்சினை காரணமாகி விடுவதுண்டு. அவர்களை மகப்பேறு நிபுணர்கள் முதலில் சோதிப்பது தைராய்ட் இருக்கிறதா என்பதுதான். 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களில் 5 சதவீதம் இந்தக் கோளாறினால் அவதியுறுகின்றனர். இந்த சுரப்பிகள் ஹார்மோனைக் குறைவாக சுரந்தால் கொழுப்பு சக்தி அதிகமாகி விடும். இதனால் இதயம் பாதிக்கப்பட்டு மாரடைப்பு ஏற்படும் சூழ்நிலையும் உருவாகலாம்.

ஹைப்போ தைராயிடிசன்,



ஹைப்பர் தைராயிடிசன், தைராய்ட் கட்டிகள் ஹார்மோன் சுரப்பி இன்மை ஆகியவை தான் தைராய்ட்டைப் பொறுத்தவரைக்கும் ஏற்படும் முக்கிய பிரச்சினைகள் ஆகும்.

சுரப்பியின் செயல்பாடு அதிகமாகி அதனால் ஹார்மோன் உற்பத்தி அதிகம் அடைவது முதல் வகையில் குணங்கள், (ஹைப்போ தைராயிடிசன்). வயது வித்தியாசம் பொறுத்து இதன் அறிகுறிகள் மாறும். சிறுவயதில் அளவுக்கு அதிக உயரம், பருமன் இவைகள் இந்த நோயின் அறிகுறிகள்.

அடுத்தது (ஹைப்பர் தைராயிடிசன்) இதில் வயதானவர்களின் எடைக் குறைவு, அதிக வியர்வை, உடல் நடுக்கம் போன்றவை இதன் அறிகுறிகள், தைராய்ட் மருந்துகளும், ரேடியோ ஆக்டிவ் அயோடினும் இதற்குரிய மருந்துகளில் முக்கியமானவைகள் என்கிறார்கள் மருத்துவர்கள். முடியாத பட்சத்தில் அறுவை சிகிச்சை தேவைப்படும்.

50 வயதைக் கடந்தவர்களுக்கு நினைவாற்றல் குறைவது ஹைப்போ தைராய்ட் பிரச்சினையால் தான். சோர்வு, கவலை என மனநோயாளி போல் ஆகிவிடுவார்கள். மாத்திரைகளை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இது விலகி விடும்.

கழுத்தில் கட்டிகள் வந்து வீக்கம் ஏற்படுவது சுற்றுச்சூழல், பரம்பரை என இரு காரணங்களினால் வருகிறது. இதுவும் அயோடின் குறைபாடு தான். முட்டைகோஸ், கரட் அதிகமாக சேர்க்கப்படக்கூடாது. இது தைராய்ட் பிரச்சினையை அதிகப்படுத்தும். மலையோரப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு கட்டிகள் அதிகம் வரும். இவர்களின் உணவிலும் தண்ணீரிலும் அயோடின் குறைவாக இருப்பது தான் காரணம். அயோடின் கலந்த உப்பை பயன்படுத்த வேண்டும்.

தைராய்ட் கட்டிகளை அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம். மேலும் லேசர் சிகிச்சை இருக்கிறது.

தைராய்ட் கட்டிகளில் சில புற்று நோய் பாதிப்புக்குள்ளாகும். ஆனால் அது மிகவும் அபூர்வமாகவே வரும். இதனை FNAC (Fine Needle Aspiration Citation) மூலம் கண்டுபிடிக்கலாம்.

டென்ஷன் காரணமாய் தைராய்ட் பிரச்சினைகள் வருகிறதென சொல்கிறார்கள் சிலர். சில குழந்தைகள் பிறக்கும் போதே இந்தக் குறைபாட்டுடன் பிறப்பதுண்டு.

ஆனாலும் இந்நோய் ஆண்களை விடப் பெண்களை 7 மடங்கு அதிகமாய் தாக்குகிறது. எனவே பெண்கள் இது விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

பச்சைக் காய்கறிகள், பழங்கள், கீரைகள் ஆகியவற்றை தினசரி உணவில் சேர்ப்பதும், உடற் பயிற்சி செய்வதும் இந்த நோயினின்றும் பாதுகாக்கும் முறைகள்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது —ஷோபா—

## .்ப்ரூட் கஸ்டர்டு

**தேவையானவை :-**

பால் - 1 லீட்டர்

வெனிலா கஸ்டர்டு பவுடர் - 2 மேசைக்கரண்டி

சீனி - 1 கப்

பழக்கலவை - 2 கப் (பொடியாக நறுக்கியது)

(ஆப்பிள், பேரிக்காய், வாழைப்பழம், ஆரஞ்சு)

**செய்முறை :-**

பழக்கலவையுடன் பாதியளவு சீனியைப் பிசறி வைத்துக்கொள்ளுங்கள். ஒரு லீட்டர் பாலில், அரை டம்ளர் பாலை மட்டும் தனியாக எடுத்து வைத்துவிட்டு, மீதம் உள்ளதைக் காய்ச்சுங்கள். காயும் பாலில் சீனியைச் சேர்த்து, கொதிக்க விடுங்கள்.

தனியாக எடுத்து வைத்திருக்கும் அரைக் கப் பாலில் கஸ்டர்டு பவுடரைக் கலந்து, கொதித்துக் கொண்டிருக்கும் பாலில் சேருங்கள். ஐந்து நிமிடம் கொதிக்கவிட்டு இறக்குங்கள். நன்கு ஆறியதும் பழக்கலவையைச் சேர்த்து குளிரவைத்துப் பரிமாறுங்கள்.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

56

பெயர் : ........................................

முகவரி : ........................................

........................................

........................................

BZ

தே.அ. அட்டை இல : ........................................

கையொப்பம் : ........................................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

☞ ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.

☞ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

☞ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -56**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:

23.01.2007

பரிசுப் போட்டி இல - 54
பரிசு பெறும்
அதிர்ஷ்டசாலி

A. தேவராஜா, பள்ளிவாசல் வீதி,
காத்தான்குடி.

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.




**சற்றைக்கெல்லாம்** போவன் எங்களுடன் ஆஸ்பத்திரிக்கு வந்தார். ஜோன்ஸ் எங்களைப் பார்த்ததில் மகிழ்ச்சியடைந்தான். போவன் டாக்டரைத் தேடிச்சென்றவர் அவருடன் திரும்பி வந்தார். "இவர் கால் முறிவுக்குக் கட்டுக் கட்டியது யார்?" என்று டாக்டர் கேட்டார்.

"நானும் முன்பு எங்களுடன் இருந்த ஒருவரும் கட்டினோம். இப்போது அவர் இங்கே இல்லை" என்றேன்.

"ரொம்ப நன்றாகக் கட்டியிருக்கிறீர்கள். நாங்கள் திரும்பக் கட்ட வேண்டிய தேவையே இருக்கவில்லை. இரும்புக் கம்பி வைத்த 'காஸ்ட்' மட்டும் நாங்கள் செய்து தருகிறோம். அத்துடன் கொஞ்சம் கொஞ்சம் நடக்கலாம்"

அவருக்கு எக்கச்சக்கமாய் நன்றி தெரிவித்தோம். டாக்டரும் போவனும் திரும்பிப் போய்விட்டார்கள். ஜோன்ஸுடன் அன்று காலை முழுவதும் பிற்பகலில் கொஞ்ச நேரமும் பொழுதைக் கழித்தோம்.



கடந்த காலத்தைப் பற்றிப் பேச்சுத் திரும்பியது. "இறந்த காலத்தை நாம் மறந்தாக வேண்டும். எதிர் காலத்தைப் பற்றிப் பேசுவோம். எந்த நாட்டுக்குப் போகலாம் நாம்? கொலம்பியாவுக்கா? பனாமாவுக்கா? கோஸ்டாரீக்காவுக்கா? என்னென்ன நாடுகள் நம்மை அனுமதிக்கக்கூடும் என்பதைப் பற்றி போவனிடம் கேட்க வேண்டும்" என்றேன் நான்.

எங்கள் கேள்விக்கு விடையைச் சில நாட்கள் கழித்துத் தந்தார் போவன்.

"எல்லா தூதராலயங்களுக்கும் போன் செய்து கேட்டேன். உங்களுக்கு ஒரு நல்ல சேதி," என்றார் அவர். "க்யுரசாகோவில் சில நாட்கள் நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்வதற்காகத் தங்கலாம். தப்பி வந்த கைதிகள் விஷயத்தில் என்ன செய்வது என்பதைப் பற்றிக் கொலம்பியாவில் திட்டவட்டமான விதிமுறை எதுவும் கிடையாதாம். அவர்கள் தூதராலயங்களுக்குத் தெரிந்த மட்டில், இதுவரை எந்தக் கைதியும் கடல் மார்க்கமாக வந்தது கிடையாதாம். அதற்கும் தாண்டி பிரிட்டிஷ் ஹாண்டுராஸ் இருக்கிறது. மற்றவற்றுக்கு அது மேல்"

நான் நண்பர்களைப் பார்த்துச் சொன்னேன்: "நேரே பிரிட்டிஷ் ஹாண்டுராஸ்"

பத்து நாட்கள் தங்கியாகிவிட்டது. அதிகக் கஷ்டமில்லாமல் ஜோன்ஸினால் நடக்க முடிந்தது. போர்ட் ஆப் ஸ்பெயினின் அரசாங்கக் கப்பல் கூடத்தில் எங்கள் படகு இருந்தது. டிராம் மூலம் அங்கே போவது எப்படி என்பதை நாங்கள் தெரிந்து கொண்டுவிட்டோம். மதுபானக் கடைகள் பலவற்றில் எங்களை வாடிக்கையாளராகக் கருதத் தொடங்கி விட்டார்கள். ஒவ்வொரு நாள் மாலையும், பல சமயம் பிற்பகலிலும் கூட அங்கே சென்றோம்.

படகு பழுது பார்க்கப்பட்டு விட்டது. அடித்தண்டு வலுவாக்கப்பட்டது. பாய்மரத்தை இன்னும் உயரமானதாயும், லேசானதாயும் மாற்றி வைத்தார்கள். ஒரு கப்பற் படைக் காப்டன் எனக்கு முறையான காம்பஸ் ஒன்றும், மாலுமிகளுக்குத் தேவையான அட்டவணை ஒன்றும் தந்தார். அதை எப்படி உபயோகிப்பது என்றும் காட்டினார். நேர் மேற்குத் திசையில், 24 டிகிரி வடக்குப் பார்த்தாற்போல் சென்றால் க்யுரசாவோவை அடையலாமாம்.

நாங்கள் புறப்படுவதற்கு இரண்டு நாள் இருக்கும். ஒரு பொலிஸ் வண்டி என்னைத் தேடி வந்தது. நாங்கள் வந்த தினத்தன்று கேள்விகள் கேட்டாரே, அந்தப் பொலிஸ் அதிகாரியிடம் என்னை அழைத்துச் சென்றார்கள்.

"எங்களுக்காக ஓர் உதவி செய்ய முடியுமா?" என்றார் அவர்.

"முடியக்கூடியதைக் கட்டாயம் மகிழ்ச்சியுடன் செய்கிறோம்"

"மூன்று பிரெஞ்சுக் கைதிகளை இங்கே சிறையில் வைத்திருக்கிறோம். ஏதோ சில்லறைக் குற்றங்கள் செய்தவர்களாம். பல வாரங்களாக அவர்கள் இந்தத் தீவில் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தோழர்கள் அவர்களை இங்கே விட்டு விட்டுப் போய்விட்டதாகச் சொல்கிறார்கள். எப்படிக் கப்பலில் செல்வது என்றே தங்களுக்குத் தெரியாது என்கிறார்கள். அவர்கள் இங்கிருந்து போய்த்தான் ஆகவேண்டும். ஆனால் கிடைக்கிற முதல் பிரெஞ்சுக் கப்பலில் அவர்களை ஏற்றியனுப்ப எனக்கு விருப்பமில்லை"

அவர் சொல்லவிருந்த யோசனை எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் மாட்டேன் என்று சொல்ல முடியாத

எழுதியது: **ஹென்ரி ஷாரியர்**
தமிழில்: **ரா.கி. ரங்கராஜன்**

அளவுக்கு எங்களை அன்போடு ஆதரித்தவர்கள் அவர்கள். "என்னால் என்ன முடியுமோ அதைச் செய்கிறேன் சார். ஆனால் முதலில் அவர்களுடன் நான் பேச வேண்டும். முழுக்க முழுக்க அந்நியர்களான மூன்று பேரைப் படகில் ஏற்றிக் கொள்வது அபாயமான காரியம். அதைத் தாங்கள் உணரவேண்டும்"

"எனக்குப் புரிகிறது" என்றார் அவர். பிறகு அந்த மூன்று பேரையும் சிறை முற்றத்துக்கு அழைத்து வரும்படி பணித்தார். அவர்களைத் தனியே சந்தித்தேன்.

அவர்கள் பெரிய குற்றங்கள் செய்து விட்டுத் தப்பி வந்தவர்கள் என்பது தெரிந்தது.

"ஏன் பின்னே அப்படிச் சொல்லவில்லை?" என்று கேட்டேன்.

"ஒரு பெரிய குற்றம் செய்தோம் என்பதைவிடச் சில சில்லறைக் குற்றங்கள் செய்தவர்கள் என்று சொன்னால், இன்னும் நன்றாய் நடத்துவார்கள் என்று நினைத்தோம். அது தேவையில்லை என்று தோன்றுகிறது."

"உங்கள் மூன்று பேரையும் என் படகில் ஏற்றிக் கொள்ள முடியுமா என்று பொலிஸ் சுப்பிரிண்டன் என்னைக் கேட்டார். உங்களுக்குப் படகு விடத் தெரியாதாமே? ஆகவே, நாங்கள் எங்கள் படகில் அழைத்துச் செல்லவில்லை என்றால், முதல் பிரெஞ்சுக் கப்பல் எது வருகிறதோ அதில் உங்களை ஏற்றியனுப்ப வேண்டியிருக்கும் என்று சொன்னார். என்ன சொல்கிறீர்கள்?"

"மறுபடியும் கடல் பிரயாணம் செய்ய நாங்கள் விரும்பவில்லை. அதற்குக் காரணம் உண்டு. உங்களுடன் புறப்படுகிற மாதிரி பாசாங்கு செய்கிறோம். எங்களை மறுபடியும் இந்தத் தீவின் கோடியில் விட்டுவிட்டு நீங்கள் உங்கள் வழியே போய்விடுங்களேன்?"

"முடியாது. அதைச் செய்ய மாட்டேன். அவர்களுடைய அன்புக்குக் கைமாறாக இப்படியொரு மட்டமான 'டிரிக்'கைச் செய்ய நான் விரும்பவில்லை"

"அப்படியானால் எங்களை அவர்கள் பிரெஞ்சு அதிகாரிகளிடம் பிடித்துக் கொடுக்கும்படி செய்யப் போகிறீர்களா?"

"இல்லை. ஆனால் க்யுரசாவோவைத் தவிர வேறெங்கும் உங்களை விடவும் மாட்டேன்"

"பழைய கஷ்டமெல்லாம் மறுபடியும் படவேண்டுமா? எனக்குப் பிடிக்கவில்லை" என்றான் அவர்களில் ஒருவன்.

"முதலில் படகை வந்து ஒருமுறை பாருங்கள். முன்பு நீங்கள் பயணம் செய்தது மோசமான படகாக இருந்திருக்கலாம்"

ஒரு பொலிஸ்காரரின் துணையுடன் நாங்கள் துறைமுகத்துக்குச் சென்றோம். நாங்கள் வைத்திருக்கும் படகை ஒரு முறை பார்த்ததும் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது.

இரண்டு நாள் கழித்துப் புறப்பட்டோம் ஆறு பேரும் - நாங்கள் மூன்று பேர். அந்நியர்கள் மூன்று பேர். எப்படித்தான் செய்தி பரவியதோ எனக்குத் தெரியாது - மதுக்கடையைச் சேர்ந்த சுமார் ஒரு டஜன் பெண்கள் எங்களை வழியனுப்பக் கூடிவிட்டார்கள். அவர்களோடு போவன் குடும்பத்தாரும், சால்வேஷன் ஆர்மி காப்டனும் வந்திருந்தனர்.

எங்களுக்கு விடை கொடுக்க வந்திருந்தவர்களோடு கடைசி நிமிடம் வரை. இருந்துவிட்டு, விரைவாகத் துறைமுகத்தை விட்டு அகன்றோம். அவர்கள் வெள்ளைக் கைக்குட்டைகளை ஆட்டிக் கொண்டிருந்தார்கள். காற்று எங்கள் பாய்மரங்களில் நிரம்பி உந்தித் தள்ளியது. எங்கள் இலக்குக்கும் எங்களுக்குமிடையே இருந்த பல லட்சக்கணக்கான அலைகளில் முதலாமவற்றின் மீது ஏறினோம்.

படகில் இரண்டு கத்திகள் இருந்தன. ஒன்று என்னுடையது. மற்றொன்று மாசுரெட்டினுடையது. சின்னக் கோடரியும், பெரிய கத்தியும் ஜோன்ஸின் அருகில் இருந்தன. மற்றவர்களிடம் ஆயுதம் எதுவும் கிடையாது என்று எங்களுக்கு நிச்சயமாகத் தெரியும். இருந்தாலும் எங்கள் மூன்று பேரில் இரண்டு பேராவது எப்போதும் விழித்துக் கொண்டிருப்பது என்று ஏற்பாடு செய்து கொண்டோம்.

"உங்கள் பெயர்கள் என்ன?" என்று கேட்டேன்.

"லெப்லாண்ட்" என்றான் ஒருவன்.

"கார்டுரெட் என்பது என் பெயர். நான் பிரிட்டிஷ்காரன்" என்றான் இன்னொருவன்.

"பிரிட்டிஷ்காரனாயிருந்துமா உனக்குப்படகு ஓட்டத் தெரியாது என்கிறாய்?"

"தெரியாது"

"என் பெயர் டபில்ஸ். நான் ஆங்கர்ஸிலிருந்து வருகிறேன்"

"எங்கிருந்து நீ தப்பினாய்?"

"செயின்ட் லாரண்டிலிருந்து சுமார் ஐம்பது மைல் தொலைவிலுள்ள ஒரு காட்டு முகாமிலிருந்து. நாங்கள் ஐந்துபேர் இருந்தோம்."

"என்ன சொன்னாய், ஐந்து பேர் என்றா, மிச்சம் இரண்டு பேர் எங்கே?"

ஒரு தர்மசங்கடமான நிசப்தம் நிலவியது.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*




**இவ்விதமாக** திருப்தியற்ற நிலையில் உணவு உண்ணும் முறையைத் தாங்களே நடைமுறைப்படுத்தி, பெண்ணினத்தைத் தாங்களே ஒடுக்கி வைத்துக் கொள்கின்றனர். இதனால் முழு எதிர்கால சந்ததியும் பாதிக்கப்படுகின்றது.

தேயிலைக் கொழுந்து பறிக்கும் பெண்கள் பெறும் ஊதியத்தில் பங்கு கூட கிடைக்குமா என்பது சந்தேகம் தான்! ஒரு கேள்விக்குறிதான்! எனெனில் எடுக்கும் சம்பளத்தை வீட்டில் கணவன் கவர்ந்துவிடுவார் அல்லது ஆண்மக்கள் யாராக இருந்தாலும் அவர்களின் கைக்குச் சம்பளம் சென்றுவிடுகின்றது. வீட்டிற்குத் தேவையான சாமான்கள் வாங்கி வருவதாகக் கூறி ஏமாற்றும் வித்தையை இக்குடும்பங்களில் காணலாம். மழையில் நனைந்து, வெயிலில் காய்ந்து ஓடாக உருமாறி சம்பாதிக்கும் பணத்தை ஆண்கள் எடுத்து, வீட்டுக்கு வேண்டிய ஒரு சில பொருட்களைத் தேவையான உடைகள், பொருட்கள் வாங்குவதற்கும் ஆண்களிடம் கையேந்துகின்ற பரிதாபமான நிலை உள்ளது. அதே வேளை விருப்பமில்லாத உடைகள் பொருட்களைப் பெற்று வாழவேண்டிய சூழ்நிலையே உள்ளது.

ஒரு சில நாட்களில் சம்பாதித்த பணமும் வீட்டில் வாங்கி வைத்த உணவுப்பொருட்களும், முடிவடைந்துவிடுகிறது. வறுமை தாண்டவமாட, வாசல் வாசலாக சென்று, வட்டிக்குக் கடன் கேட்டு கைநீட்டி நின்று மனைவி காசைப் பெற்றுக்கொண்டு வருவாள் அல்லது வீட்டில் காணப்படும் தங்க நகைகள் ஏதாவது ஒன்றை அடகு வைத்துக் கணவன் பணம் பெறுவான். இவ்விதம் கிடைத்த பணத்தைக் கொண்டு ஒரு சில சாமான்கள் மட்டும் வாங்கிக்கொண்டு வேலையைப் போக்க மதுவில் மூழ்கி, தட்டுத்தடுமாறி வீடு வந்து சேருகிறான். அவ்வேளையில் பிள்ளைகள், பசியினால் வாடி வதங்கி படுக்கையில் கிடப்பார்கள். வாங்கி வந்த பொருட்களைக் கொண்டு சமைத்து, கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் இரவு உணவு பரிமாறி மற்ற கடமைகளையும் முடித்து அதன் பின் நித்திரைக்குச் செல்வாள்.

ஆண்கள் செய்யும் இவ்விதமான பிழையைக் குறித்து மனைவி கேட்டால், அவளை அடித்து வீட்டை விட்டு துரத்தும் சமுதாய அமைப்புக்குள் மலையகப் பெண் இனம் அவதியுறுகிறது. இதனை விட "அடித்தாலும் உதைத்தாலும் கணவனே கண் கண்ட தெய்வம்" என வாழ்வதே மேலானது என்ற கருத்துக்களும் இவர்கள் மத்தியில் மேலோங்கி நிற்கிறது. அத்துடன் எவ்விதமான பிழைகளை ஆண்கள் செய்தாலும் அவர்கள் செய்வது சரி என்று வாதிடும் பெண்களாகவும் உள்ளனர். ஏதோ ஒரு காரியத்தினாலே ஆண்கள் செய்கின்றனர், எனவே அது பிழையில்லை என சமாளித்து பிழைகளுக்கு உடந்தைகளாக பெண்கள் செயற்படுகின்றனர். ஆணுக்கு அடிபணிந்து பெண் வாழ வேண்டும் என்ற வளர்ப்பு முறை பெண்களை அமிழ்த்திவிடுவதும் இதற்கு ஒரு காரணமாகும். மது அருந்துவது சரியென தீர்ப்புக்கொடுக்கும் மனைவிமார் உள்ளனர். கஷ்டப்பட்டு கடினவேலை செய்யும் ஆண்கள், உடல் அலுப்பு நீங்க மது அருந்துவதைப் பிழையென கூறமுடியாது என வாதிடும் பெண்கள் உள்ளனர். மற்றும் கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று, ஒருவனோடு ஒரு பெண் வாழ்க்கைப்பட்டிருந்தால், இறுதி மூச்சுவரையும் அவனோடே வாழ்ந்து இன்பமோ, துன்பமோ, அடியோ, உதையோ அத்தனையையும் பொறுமையுடன் சகித்து, கண்ணீரோடு வாழ்கையை நடத்திச் செல்லும் பெண்களைத் தேயிலைத் தோட்டங்களில் காணலாம். கணவனுக்குச் சேவை செய்வது புண்ணியமென கருதும் பரிதாபகரமான வாழ்கை வாழ்கின்றார்கள்.

### ஓய்வூதியமும் சேவைக்கால பணமும்

முதியோர் பேணிக் காக்கப்பட வேண்டிய பெரும் சொத்துக்கள் என்பது மரபு முறைகளாக வந்துள்ளது. நடைமுறை வாழ்கையில் இது சாத்தியமற்றதாகவே காணப்பட்டுள்ளதென புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று இளமையும் முதுமையும் தவிர்க்க முடியாத இருபக்கங்களாக மனித வாழ்க்கை உள்ளது. தற்போது அதிகமான குடும்பங்களில் முதியோர் வேண்டப்படாதவர்களாகவே கணிக்கப்படுகின்றனர். தேயிலைத்



தோட்டங்களில் அன்றும் இன்றும் இந்நிலையினைக் காணலாம். 'காவோலை விழக் குருத்தோலை சிரிக்குமாம்' என்ற நிலையிலேயே குடும்பங்கள் உள்ளன. காலங்காலமாக குடும்பத்திலும், தேயிலைத் தோட்டங்களில் கஷ்டப்பட்டு உழைத்து கடைசி காலத்தில் ஓய்வாக இருந்து நிம்மதியாக வாழவேண்டுமென ஓய்வூதியம் கொடுக்கப்படுகிறது. ஓய்வூதியம், சேவைக்காலப்பணம் என்று ஆயிரமாய் பெற்றாலும், பெற்ற பிள்ளைகளினால் துரத்தியடிக்கப்படும் பரிதாபமான நிலையிலேயே வயதான தாய்மார்கள் உள்ளனர்.

வயது செல்கின்ற காலத்தில் ஓய்வு பெறுவதற்காக விண்ணப்பம் செய்தபின், மகன்மார்கள் நன்கு பராமரிப்பார்கள். தனிமையாக பிள்ளைகளற்றுக் காணப்பட்டாலும், சொந்தபந்தங்களெல்லாம் சேர்ந்து இவ்வயதானவர்களை கவனித்துக்கொள்வார்கள். ஏனெனில் ஓய்வூதியமாக அல்லது சேவைக்காலம் என வரும் பணத்தை பெற்றுக்கொள்வதற்காகவே இக்கவனிப்புக்கள் இருக்கும். அதுவும் ஒரு சில காலங்களில் முடிந்துவிட நாய் போல நடுத்தெருவில் விரட்டிவிடுவார்கள். உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி, படுக்க பாயின்றி வயது சென்ற தாய்மார்கள் தத்தளிப்பார்கள். இவ்விதமான நிலைமையில் சிலர் வேறு இடங்களிற்குச் சென்று பணக்கார வீடுகளில் வேலை

**ஸ்ரீ முகன்**

செய்வார்கள். பேரப்பிள்ளைகளைப் பராமரித்துக் கொண்டு ஏச்சும் பேச்சும் (அடியும்) வாங்கிக்கொண்டும் வாழும் பெண்களை மலையகத்தில் காணலாம்.

இதுதான் இவ்வயதான பெண்மணிகளின் ஓய்வா? சிறுவயதில் தகப்பன் என்றும், வாலிப காலத்தில் கணவன் என்றும், வயது சென்ற பின் மகன் என்றும், அடிமைபடுத்தப்பட்ட அபலைகளாய் மலையகப் பெண்ணினம் அடக்கி ஒடுக்கப்படுகிறது. தேயிலைத் தோட்டப் பெண்களாகப் பிறந்தால், பிறந்தது முதல் இறக்கும் வரை அடிமை வாழ்வு வாழ்ந்து எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குன்றி இறப்பதுதான் நியதி என்ற நிபந்தனைக்குட்பட்டவர்களாகவே வாழவேண்டும் என்ற நிலையிலேயே மலையகம் உள்ளது.

*(துளிர்க்கும்)*



# புத்தாண்டு எண்கணிதப் பலன்கள்

யதார்த்த ஜோதிடர் ஷெல்வி


**சென்ற வாரத் தொடர்ச்சி**

**7, 16, 25 திகதிகளில், கேதுவின் ஆதிக்கத்தில் பிறந்தவர்களே! ஆண்டின் ஆரம்பமே, ஆனந்தம் தருவதாக அமையும்.**

இயல்பாகவே, இளகிய மனமும் மென்மையான சுபாவமும் கொண்ட உங்களுக்கு, இதுவரைக்கும் மனதில் இருந்த இனம்புரியாத பயம் படிப்படியாக விலக ஆரம்பிக்கும். அதன் காரணமாக தன்னம்பிக்கையும் தைரியமும் ஏற்படும். அதைத் தொடர்ந்து நீங்கள் எடுக்கும் முயற்சிகள் எல்லாம் படிக்கட்டுக்களாக இருந்து வெற்றிப் பாதைக்கு வழியாக அமையும். எப்போ மாறும் இந்த இழிநிலை என்று கவலைப்பட்ட காலம் மாறி, மனதில் மகிழ்ச்சி நிறையும்.

எதையும், செய்யலாமா? வேண்டாமா?என்று தயங்கிய மனநிலை மாறி, எதையும் முயன்று பார்க்கலாம் என்ற எண்ணம் மனசுக்குள் மலரும். அதன் காரணமாகப் பணிகளில் புது உத்வேகம் பிறக்கும். பணியிடம், வியாபார ஸ்தலங்களில் புதுப்புது திட்டங்கள் மூலமாகப் பெரும் ஆதாயம் கிடைக்கும். முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருந்ததெல்லாம் விலகி, சீரான வளர்ச்சிப் பாதைக்கு வழி தெரியும்.

ஏற்கனவே பணியில் உள்ளவர்களுக்கு, உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கும். இதுவரைக்கும் வேலைவாய்ப்பு இல்லாதவர்களுக்கு அதற்கான ஆரம்பம் தெரியும். பட்ட கஷ்டங்களுக்குப் பலன் கிடைக்காதா என்று ஏங்கிய நிலை மாறி, ஏற்றம் ஏற்படும். தொட்டது துலங்கும்.



அரசு, அரசியல் துறை சார்ந்தவர்களுக்கு, திடீர் பதவிகளும் பாராட்டும் கிட்டும். எதிர்பார்த்த இடமாற்றம், பணி மாற்றம் ஏற்படும். சிலருக்கு தொழில் காரணமாகக் குடும்பத்தை விட்டுப் பிரிந்து இருக்க வேண்டிய நிலை ஏற்படலாம். ஆனால் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளுங்கள். இது உங்கள் முன்னேற்றத்துக்கான 'லிப்ட்'. ஏற்க மறுத்தால், அப்படியே இருக்க வேண்டியதுதான்.

மனசில் பக்தி உணர்வு அதிகரிக்கும். விடுபட்ட குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிட்டும். தெய்வத் தல யாத்திரையின்போது, எதிர்பாராத 'சில பெரிய மனிதர்களின் சந்திப்பும், மகான்களின் ஆசியும் கிடைக்கும்.

பற்பல பிரச்சினைகளுக்குப் பிறகு முதன் முறையாக வாழ்க்கையில் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கக் கூடிய அளவுக்கு வளர்ச்சி அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் செல்வாக்கும், சொல்வாக்கும் உயரும். எடுத்த காரியத்தை முடிக்க முடியாமல் திணறிய நிலை மாறும். எதுவும் சாதிக்கலாம் என்ற எண்ணம் ஏற்படும்.

சுபகாரியங்களுக்கு இருந்த தடைகள் நீங்கும். அதனால் மனையில் மங்கல ஒலி கேட்கும். மழலை ஒலி கேட்க ஆசைப்பட்டவர்கள் இல்லத்தில் 'குவா குவா' குரல் கேட்கும். சுபச்செலவுகள் அதிகரித்தாலும், போதுமான பண வரவும் ஏற்படும்.

குடும்பத்தில் இருந்த குழப்பங்களும், அதனால் ஏற்பட்ட பிரிவும் மாறும். அந்நியோன்னியமும் அன்பும் அதிகரிக்கும். பிரிவு நீங்கி ஒற்றுமை ஏற்படும். இது, விட்டுக்கொடுக்கின்ற சுபாவத்தை நீங்க வளர்த்துக் கொண்டால், நிலைக்கும். தனிப்பட்ட யாருடைய பிரச்சினையிலும் வீணாக மூக்கை நுழைக்க வேண்டாம். இது குடும்பத்திலும் சரி, தொழிலிடத்திலும் சரி, தவிர்க்க வேண்டிய விஷயம். உங்கள் குடும்ப விவகாரங்களில் மூன்றாம் மனிதரை மத்தியஸ்தம் செய்யக் கூப்பிடுவதும் தப்பு. குழந்தைகளால் சந்தோஷம் கூடும். சில குழந்தைகள், தங்கள் செயல்களால் உங்களுக்குப் பெருமை தேடித் தருவார்கள்.

வெளிவட்டாரப் பழக்கவழக்கத்தில், ஆடம்பரத்துக்காகவும் வீண் கௌரவத்துக்காகவும் செய்யக்கூடிய செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். யாருக்காகவோ செலவு செய்து, எதிர்காலச் சேமிப்பைக் கரைப்பது நல்லதல்ல.

பயணங்கள் பயன் தருவதாக அமையும். அதே சமயம், தனிமைப் பயணத்தில் சபலமும், சஞ்சலமும் எட்டிப்பார்க்காமல் இருக்க வேண்டும். இதற்கு தெய்வ பக்தி உதவும். பயணத்தின் போது ஏற்படக்கூடிய ஆண் - பெண் நட்புகளில் கவனமாக இருக்க வேண்டும். அதீத நெருக்கம் நெருப்பாகச் சுடும். விலகிவிடுங்கள்.

சூதாட்டம், ரேஸ் போன்ற பழக்கங்களில் ஈடுபாடு உள்ளவர்கள், உடனடியாக அதை விட்டு விடுவது உத்தமம். இல்லை என்றால் இப்போதைய கிரக அமைப்புக்கள் அப்படியே எதிர்மறையான பலன்களைத் தந்து கைப்பொருளையும் கரையச் செய்துவிடும். யாருடைய ஆலோசனையையும் கேட்டு பெரிய முதலீடுகளில் அகலக்கால் வைக்க வேண்டாம். தெரியாத பணியில் பிறருடைய வற்புறுத்தலுக்காக ஈடுபடுவதும் தப்பு.

பணியிடம், வியாபாரத் தலங்களில் எச்சரிக்கை ரொம்ப அவசியம். திடீர் என்று உங்களுக்குக் கிடைக்கக்கூடிய பதவி, புகழ் பிடிக்காதவர்கள், உங்கள் தவறுகளை பூதக்கண்ணாடியினால் படம்பிடித்து மேலிடத்துக்குக் காட்டலாம். அதனால், முழுமையான ஈடுபாட்டோடும் சரியான திட்டமிடலுடனும் செயற்பட்டால், பிரச்சினைகள் வராது. கூட்டுத் தொழிலில் உள்ளவர்கள் 2ஆம் எண்காரர்களுடன் பார்ட்னராகச் சேர்ந்தால், பலன்கள் அதிகரிக்கும்.

அரசு வழியில் இருந்த தடைகள் நீங்கும். அதன் காரணமாக முயற்சிகளில் புது உத்வேகத்துடன் செயற்பட முடியும். ஜாமின் தரப்போவது உங்களுடைய நிழலுக்காக இருந்தாலும்கூட, பலமுறை யோசிப்பது நல்லது. யாருக்கும் வாக்குத் தருவதற்கு முன்பு, அது அவசியம் தானா என்று யோசித்துச் செயற்படுங்கள். யாருடைய தனிப்பட்ட ஆலோசனைக்காகவும் உங்களுடைய செயல்களில் அனாவசியமான மாற்றங்களைச் செய்து கொள்ள வேண்டாம்.

சிலருக்கு ஆடை, ஆபரணம்,பொருள் சேர்க்கை ஏற்படும். புதுமனை புகுதல், மனை, நிலம் வாங்குதல் என்று சிலருக்கு வசதிகள் அதிகரிக்கும். எந்த ஒப்பந்தத்திலும் கையெழுத்துப் போடும் முன் நன்றாகப் படித்துவிட்டுப் போடுங்கள். அவசரமும், பதற்றமும் இதுபோன்ற விஷயங்களில் கூடவே கூடாது.

அரசியல்வாதிகளுக்கு மேலிடத்து அரவணைப்பும், மக்கள் ஆதரவும் அதிகரிக்கும். பதவியும், பாராட்டும் சிலருக்குத் தானாகவே தேடிவரும். ஆனால், கடந்த கால கசப்பு வாழ்க்கையை மறந்துவிட்டு, செயற்படுவது நல்லது. வன்மம், பகைமை பாராட்டினால், நிலைமை மீண்டும் தலைகீழாகிவிடும்.

ஆரோக்கிய விடயத்தில் அலட்சியம் கூடவே கூடாது. மூச்சுக் குழாய், நுரையீரல் போன்ற பகுதிகளில் பிரச்சினை எதுவும் தெரிந்தால், உடனே சிகிச்சை எடுத்துக் கொள்ளுங்கள். கழிவுப்பொருள் வெளியேறும் பாதை, மூட்டுகளில் உபாதை ஏற்பட்டாலும் உடனே மருத்துவச் சிகிச்சை அவசியம். மறந்துவிடாதீர்கள்.

நன்மைகள் எல்லாம் தொடரக்கூடிய இந்தக் காலகட்டத்தில், ஜூலை மாதம் மட்டும் கொஞ்சம் கூடுதல் கவனத்தோடு செயற்பட வேண்டும். வாகனப் பயணத்தில் வேகம், வாழ்க்கைப் பாதையின் முடிவுக்குக் கொண்டு போகலாம். அதனால், வேகம் தவிர்த்துவிடுங்கள். பயணத்தின்போது கவனச் சிதறலும் கூடாது.


இந்த எண் மாணவர்கள், தங்கள் முயற்சிக்கு உரிய பலனைப் பெற்று மகிழ்வார்கள். அதிகாலையில் எழுந்து அன்றன்றைய பாடங்களைப் படிக்கும் பழக்கம் உள்ளவர்கள், தேர்வுகளில் சாதனை செய்யுமளவு கூட மதிப்பெண் பெற வாய்ப்புண்டு.

பொதுவாக எச்சரிக்கை உணர்வுடனும், முழு ஈடுபாட்டுடனும் செய்யக்கூடிய செயல்களால், ஏற்றமும், எதிர்பாரா நன்மைகளும் பெறக்கூடிய காலகட்டம் இது.

**சனிக்கிழமைகளில், கணபதி சன்னதியில் விளக்கேற்றி வழிபடுங்கள். எப்போதும் அவர் துதி சொல்லுங்கள், கேளுங்கள். ஆனைமுகன் அல்லல் எல்லாம் தீர்ப்பார்.**

**8, 17, 26 திகதிகளில் சனி பகவானின் ஆதிக்கத்தில் பிறந்தவர்களே! ஆண்டின் தொடக்கமே ஏற்றம் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.**

தெளிந்த சிந்தனையும், கூர்ந்த மதியும் உள்ள உங்களுக்கு, வருட ஆரம்பத்திலேயே அற்புதமான பலன்கள் ஏற்படும். அதே சமயம், இது நீங்கள் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய காலகட்டம் என்பதையும் மறந்துவிடாதீர்கள். பணியிடத்தில் உங்கள் திட்டங்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும். அவற்றின் மூலம் கிடைக்கக்கூடிய பலன்கள் காரணமாக உங்களுக்குப் பெருமையும், பாராட்டும் நிச்சயம் கிடைக்கும். அதே சமயம், இந்தத் திடீர் புகழ், பலரின் பார்வையில் பொறாமைத் தீயைப் பற்றவைக்கும். ஆனால் உங்களுடைய அடக்கமான குணத்தால் அந்தத் தீயை அணைத்துவிடலாம்.



யாரையும் அநாவசியமாப் புகழ்வதும், அளவுக்கு அதிகமாக வெறுப்பதும் கூடவே கூடாது. பழைய பகைமையை இன்னும் நினைவில் வைத்துக்கொண்டு இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பகுத்தறிவு உங்களுக்கு அதிகமாக இருக்கலாம். ஆனால், யாருடைய பழக்கவழக்கத்தையும், கிண்டல் பண்ணுவதோ, மறைமுகமாகக் கேலி செய்வதோ கூடவே கூடாது. நேரடியாக நீங்கள் இப்படிச் செய்யவில்லை என்றாலும், அப்படிப் பேசக்கூடியவர்கள் நட்பைத் தொடர்வது கூடத் தவறுதான்.

கூட்டுத் தொழிலில் கவனம் ரொம்ப அவசியம். இதுக்கு பார்ட்னர் மேல் சந்தேகப் படவேண்டும் என்று அர்த்தமில்லை. தனிப்பட்ட கவனம் தேவை என்றுதான் அர்த்தம். 5 ஆம் எண்காரர்களோடு கூட்டுச் சேர்ந்தால் தொழிலில் இலாபம் அதிகரிக்கும்.

திடீர் என்று ஞானோதயம் ஏற்பட்டு, பக்திப் பாதையில் நடைபோட ஆரம்பிப்பீர்கள். இதற்கு உங்கள் மனதில் குழப்பம் ஏற்படுவதுதான் காரணம். முறையான தெய்வ வழிபாட்டால் அதை விரட்டுங்கள். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். விடுபட்ட குலதெய்வப் பிரார்த்தனைகளை இப்போது நிறைவேற்ற சந்தர்ப்பம் உண்டு.

எந்தச் செயலையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று செய்வது தவறு. குடும்ப உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசனை செய்து எடுக்கும் எந்தத் தீர்மானமும் நிச்சயம் பலனைத் தரும். அதனால், பெற்றவர்கள், பெரியவர்கள் ஆலோசனை கேட்டு செயற்படுங்கள். தனிப்பட்ட விருப்பு வெறுப்பு எதையும் பணிகளில் காட்டுவது கூடாது. பணிவும், அடக்கமும் இருந்தால், பெருமையும் புகழும் நிலைக்கும்.

குடும்ப உறவுகள் இடையில் இருந்த நீண்டகாலப் பிரிவுக்கு, முடிவு வரும். பிரிந்தவர்கள் நட்போடு சேர வரும்போது பழைய பகையை நினைவுபடுத்திப் பேசுவது வேண்டாம். யாருடைய மனமும் நோகும்படி பேசுவதும், பிறர் குற்றங்களைப் பூதக் கண்ணாடி வைத்துப் பார்ப்பதும் தப்பு.

குழந்தைகளால் பெருமையும், புகழும் ஏற்படும். அதேசமயம், குழந்தைகள் விஷயத்தில் அநாவசியமான கண்டிப்பு, அவர்களை வீணான மனவருத்தத்தில் ஆழ்த்தும். அதன் காரணமாக, அவர்கள் கவனம் சிதறவும் வாய்ப்புண்டு. தவறாகவே அவர்கள் செயல்கள் இருந்தாலும் கூட, அன்பினால் திருத்துங்கள். அதிகாரமும் கண்டிப்பும் வீணான மனச்சங்கடத்தைத்தான் ஏற்படுத்தும். அனுசரித்துப்போனால் குழந்தைகளால் குதூகலம் நிச்சம்.

குடும்பப் பிரச்சினைகளில் அந்நியர் தலையீடு கூடவே கூடாது. மூன்றாம் நபர் மத்தியஸ்தம் பண்ண வந்தால், வீடு இரண்டாகப் பிரிந்துவிடும். மற்றவர்கள் வீட்டுப் பிரச்சினைகளில் நீங்கள் வீணாக மூக்கை நுழைக்கிறதும் தப்பு. யாரையும் யார் முன்னாலும் விளையாட்டுக்குக்கூட கிண்டல், கேலி பண்ண வேண்டாம். இது வீட்டிலும் சரி, வெளிவட்டாரம், பணியிடத்திலும் சரி, மிக மிக முக்கியம். புறம்பேசக்கூடியவர்கள் நட்பைப் புறம் தள்ளுங்கள்.

வீடு, வாகனம், ஆடை, ஆபரணச் சேர்க்கை சிலருக்கு உண்டு. அதேசமயம், இப்படிப்பட்ட சொத்துச் சேர்க்கையின்போது, அது வில்லங்கம் இல்லாமல் இருக்கிறதா என்று கவனித்து வாங்க வேண்டியது அவசியம். பயணங்கள் நன்மை தரும். தொலைதூரப் பயணம் இரவு நேரத்தில் கூடாது. அதி அவசியமானால், குல தெய்வத்தை மனதார வேண்டிக்கொண்டு, வீட்டுப் பூஜையறையில் விளக்கேற்றிவிட்டுப் புறப்படுங்கள். பயணத்தின்போது, உடைமைகள் பத்திரம். வழக்குகள் இழுபறியாக இருந்த நிலை மாறும். ஆனால் நேரடிக் கவனம் இல்லாவிட்டால், தீர்ப்பு எதிர்மறையாகி விடலாம். கவனமாக இருங்கள்.

இரகசியங்கள் எதுவும் இரகசியமாகவே இருந்தால்தான் மதிப்பு. இது பணியிடம், குடும்பம் இரண்டு இடத்துக்கும் பொருந்தும். அதே மாதிரி, சட்டப்புறம்பின் நிழல்கூடச் சுடும். தவறியும் அந்தப் பக்கம் போய்விடாதீர்கள்.

கலைத்துறை சார்ந்தவர்களுக்கு இதுவரையில் நிலவிய மந்தநிலை மாறும். புதுப்புது வாய்ப்புக்கள் தேடி வரும். அந்தச் சமயத்தில் வீண் ஜம்பத்தினால் சின்னச்சின்ன வாய்ப்புத்தானே என்று நழுவவிட வேண்டாம்.

சுபகாரியத்தடைகள் நீங்கும். சுபச்செலவுகளுக்காகக் கடன்பட வேண்டிய அவசியம் ஏற்படலாம். ஆனால், அந்தக் கடன்கள் சுலபமாகப் பைசலாகும்படி இருக்கும். பெற்றோர் ஆசியும், பெரியவர்கள் ஆதரவும் இந்தக் காலகட்டத்தில் அவசியம். அவர்கள் மனம் கோணாதபடி நடந்துகொள்ள வேண்டியது அவசியம். வாக்கில் இனிமை வேண்டும். நல்ல பலன்கள் நடக்கக்கூடிய இந்த ஆண்டில், செப்டெம்பர் மாதத்தில் மட்டும் செயல்களில் கூடுதல் கவனம் அவசியம்.

வாகனங்களில் போகும்போது வீணான கற்பனையில் மூழ்குவதும் தப்பு. பாதையில் மட்டுமே பார்வை பதிய வேண்டும். அதேபோல போதையோடு பயணித்தால், பாதை வீட்டை நோக்கி இருக்காது. யாருடைய நட்புக்காகவும், உந்துதலுக்காகவும் ஜாமீன் கொடுப்பதும், கேரண்டி தருவதும் கூடவே கூடாது.

உடல் நலத்தில் கவனம் அவசியம். எப்போதும் வேலை வேலை என்று உடலை வருத்திக் கொண்டு இருப்பது தப்பு. சரியான நேரத்துக்கு உணவு எடுத்துக் கொள்ளும் பழக்கத்தை வளர்த்துக் கொண்டால், ஆரோக்கியம் சீராக இருக்கும். பற்கள், வாய், சுவாச உறுப்புக்களில் கவனம் அவசியம். சின்னச் சின்ன உபாதை தெரிந்தாலும் உடனடியாக சிகிச்சை எடுத்துக் கொள்ளுங்கள். இரத்த அழுத்த மாறுபாடு காரணமான பிரச்சினைகளை உடனே கவனித்து, உயர் சிகிச்சை எடுத்துக் கொள்ளுங்கள்.

அரசியல் சார்ந்தவர்களுக்கு இது ஆதரவு அதிகரிக்கக்கூடிய ஆண்டாக அமையும். அதேசமயம், மேலிடத்து உறுப்பினர்களிடம் பேசும்போது, வாக்கில் கவனம் அவசியம். யாரைப் பற்றிய இரகசியமும், இரகசியமாகவே இருக்கட்டும். வாய்தவறிச் சொன்னாலும் கூட நிலை தவறிப்போக வாய்ப்பு உண்டு. கீழ்மட்டத் தொண்டர்களிடம் கூட பணிவு காட்டுவது பதவி கிடைப்பதற்கான அஸ்திவாரமாக அமையும்.

8 ஆம் எண் சார்ந்த மாணவர்கள் படிப்பில் அவரவர் முயற்சிக்கு ஏற்ற முன்னேற்றத்தை நிச்சயம் அடைவீர்கள். அதே சமயம் நட்பில் தவறான சகவாசம் தெரிந்தால், உடனே விட்டு விலகிவிடுங்கள்.

மொத்தத்தில் எச்சரிக்கை உணர்வும், தளராத முயற்சியும் இருந்தால் முன்னேற்றம் நிச்சயம்.

**சனிக்கிழமைகளில் விரதம் இருந்து சிவபெருமானை வழிபடுங்கள். சிவ துதி சொல்லுங்கள், கேளுங்கள். சிவனருள் சிந்தை குளிர்விக்கும்.**

**9, 18, 27 திகதிகளில் செவ்வாய்க் கிரகத்தின் ஆதிக்கத்தில் பிறந்தவர்களே! ஆண்டின் ஆரம்பமே அமோகமான பலன்களை அள்ளித்தரும்.**

எத்தகைய சூழலிலும் மனம் தளராமல் செயற்படக்கூடியவர்களான நீங்கள், உங்கள் வாழ்க்கையில் இது வரைக்கும் இருந்த நிலை மாறி ஏற்றம் ஏற்படும். கஷ்டமே தொடர்கதையாக மாறிவிடுமோ என்று நினைத்த சூழல் மாறி, லஷ்மிகரமான ஆண்டாக இது அமையும். பொன் விளையும் ஆண்டாக இந்த ஆண்டு அமையக் காரணம், இந்த வருடத்தின் கூட்டுத்தொகை எண்ணும், உங்கள் எண்ணும் ஒரே எண்ணாக இருப்பதுதான்.

சோதனைகள் சாதனைகளாகவும், தடைக்கற்கள் படிக்கற்களாகவும் மாறக்கூடிய காலகட்டம். இந்தச் சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது உங்களுடைய புத்திசாலித்தனமே. பணியிடம், வியாபாரத் தலங்களில் புதுப்புது திட்டங்கள், மூலமாகப் பாராட்டும், பெருமையும் பெறுவீர்கள். இடமாற்றம், பதவி மாற்றம், ஊதிய உயர்வு எல்லாமும் மனதுக்குப் பிடித்த மாதிரியே அமையும்.

சிலருக்குப் பணி காரணமாகத் தொலை தூர இடங்களுக்குப் போக வேண்டி வரலாம். ஆனால் அது தற்காலிகமாகத்தான் இருக்கும். அத்தோடு அது உங்கள் முன்னேற்றத்துக்கு ஆதாரமாக அமையும் என்பதால், தவிர்க்காமல் ஏற்றுக் கொள்ளுங்கள்.

அரசுத் துறையில் பணியாற்றக்கூடியவர்களின் முன்னேற்றத்தில் இதுவரைக்கும் இருந்த தடைகள் தகரும். தவறுகள் காரணமாகத் தண்டனைக் காலமாகப் பணிநீக்கம் செய்யப்பட்டிருந்தவர்கள், மீண்டும் பணிக்குச் செல்லும் வாய்ப்பு நிச்சயம் இந்த ஆண்டு ஏற்படும். சிலருக்கு, இடைப்பட்ட காலத்திற்கான நஷ்ட ஈட்டுத் தொகையும் கிடைக்கலாம்.

அரசியல் துறை சார்ந்தவர்களுக்கு இது அமோகமான கால கட்டம். எதிர்த்தரப்பு அணியின் பலம் குன்றி, மக்களுடனான ஆதரவு உங்களுக்குக் கிடைக்கக் கூடிய காலகட்டம். சிலருக்கு அரசியல் வாழ்க்கையே அஸ்தமனமாகிவிடுமோ என்று இருந்த நிலை மாறி, புதிய நம்பிக்கை பிறக்கும்.

வெளிநாட்டுச் செய்திகள், வர்த்தகம் இதெல்லாம் நன்மை தருவதாக அமையும். குடும்பத்துடன் ஆன்மீக யாத்திரை மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். அந்தச் சமயத்தில் பயணம் இரவுப் பயணமாகத் தொடங்காமல், பகல் அல்லது மாலை நேரத்தில் புறப்படுகிற மாதிரி அமைத்துக் கொள்ளுவது நல்லது. யாத்திரை சமயத்தில் மகான்களைத் தரிசிக்கவும், பெரிய மனிதர்கள் நட்பைப் பெறவும் சிலருக்கு வாய்ப்பு ஏற்படும். அதன்மூலம் பல நன்மைகள் கிட்டும்.



குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் அணிவகுக்கும். அந்தச் சுபநிகழ்ச்சிக்கான பணவரவு தானாகவே அமையும். சிலருக்குத் திடீர் அதிர்ஷ்டம் காரணமாகச் சமூக அந்தஸ்து உயரும். வழக்குளில் இழுபறி இருந்த நிலை மாறும். சிலருக்குப் பூர்வீக சொத்து சம்பந்தமான பிரச்சினைகள் சுமுகமான தீர்வுக்கு வரும். ஆனால், நேரடி கவனம் இல்லையென்றால், தீர்ப்பு எதிர்மறையாக மாறிவிடலாம். யாரை நம்பியும், ஜாமீன் தருவதும், ஒப்பந்தங்களில் கையெழுத்துப் போடுவதும் வேண்டாம்.

சட்டத்துக்குப் புறம்பானவர்களின் நட்பு, சங்கடம் தரும். அப்படிப்பட்ட சகவாசத்தோடு வாசமே வேண்டாம் என்று விலகிட்டால், விபரீதமாக எதுவும் ஆகாது. குடும்பத்தில் மூத்த உறுப்பினர்கள், பெற்றவர்களிடம் பணிவு மிகவும் அவசியம். இந்தக் கால கட்டத்தில், உங்களை வளமும் நலமுமாக வாழவைக்கிறதே பெரியவர்களுடைய ஆசீர்வாதம் தான். அதை மறந்துவிட வேண்டாம்.

இருண்டு கிடந்த இடத்தில் திடீர் என்று ஒளிவருவது போல், மறைந்து கிடந்த உங்கள் திறமைகள், மேலதிகாரிகள், சக ஊழியர்களால் கண்டு பிடிக்கப்படும். அதன் காரணமாக உங்களுடைய அந்தஸ்தும், பொருளாதாரமும் உயரும். பூமியிலிருந்து கிடைக்கக் கூடிய மற்றும் நிலத்தில் இருந்து விளையக் கூடிய பொருட்கள் சார்ந்த தொழில் புரியக்கூடியவர்களுக்கு இலாபம் அதிகரிக்கும்.

கூட்டுத் தொழில் புரியக் கூடியவர்கள், நிதானம், பொறுமை, நம்பிக்கை இவை மூன்றும் இருந்தால், சீரான வளர்ச்சியும் சிறப்பான இலாபமும் அடையலாம். வெளிநாட்டுச் செய்திகள், வர்த்தகங்கள் நன்மை தரும். அரசு சார்ந்த தடைகள் விலகும். அரசின் ஆதரவும் சிலருக்கு எதிர்பார்த்தபடியே கிடைக்கும்.

இந்த எண் மாணவர்கள் இதுவரைக்கும் படிப்பில் மந்தமாக இருந்த நிலை மாறி, சுறுசுறுப்பும் உற்சாகமுமாய் படித்து, அதிக மதிப்பெண்களும், அதற்காகப் பாராட்டும் பெற முடியும். ஆனால், வீணான கர்வம் மட்டும் கூடாது. நட்பில் வீண் கேளிக்கையும், லாகிரி வஸ்து உபயோகமும் வாழ்க்கையை தலை நிமிரவே முடியாதபடி ஆக்கிவிடும்.

வாழ்க்கையில் மேன்மைகள் பல வரும் நேரத்தில் பழைய சம்பவங்களை அனுபவமாக நினைக்க வேண்டுமே தவிர, அதற்காகப் பழிவாங்கும் மனப்பான்மையைச் சுமக்கக் கூடாது. சமூக அந்தஸ்து உயரக்கூடிய காலகட்டம் இது. அதற்கு உங்களின் அன்பான குணம்தான் காரணம். அதைமட்டும் எப்பவும் மாற்றிக் கொள்ளாமல் இருக்க வேண்டும். வாக்கு ஸ்தானத்தில் மட்டும் ரொம்பக் கவனம் அவசியம். யாராவது யாரைப்பற்றியாவது புறம் சொன்னால், அப்படிக் கோள் சொல்கிறவர்களைப் புறம் தள்ளுங்கள். இல்லையென்றால், நீங்களே புறம் சொன்னதாக அவப்பெயர் ஏற்பட்டுவிடும். கூட்டுத் தொழிலில் 5 எண்காரர்களைப் பங்குதாரராக வைத்துக்கொண்டால், நன்மை எற்படும்.

வாகனப் பயணங்களில், பாதை மீது மட்டும் கவனம் இருக்கட்டும். வீண் சிந்தனையும், அநாவசிய திசை மாற்றும் செயல்களும் வாழ்க்கைப் பாதையைச் சீர்கெடச் செய்துவிடும். கவனமாக இருங்கள். கூட்டமாக இருக்கும் இடங்களில், அனாவசியமாக எட்டிப் பார்ப்பதும் தவறு. இரவு நேரக் கொண்டாட்டங்கள், கேளிக்கைளுளக்குப் போவதும் தவறு. முடிந்தவரைக்கும் அலுவலகத்திலிருந்து நீங்கள் மாலையில் புறப்படுவது உங்கள் வீட்டுக்காகவோ அல்லது ஏதாவது கோயிலுக்காகவோ மட்டும் இருக்கட்டும்.

உடல் நலத்தில் ஒருபோதும் அலட்சியம் கூடாது. அதேபோல், உணவுப் பழக்கவழக்கமும் முறையாக இருக்க வேண்டும். இந்தக் காலகட்டத்தில், வெளியிடங்களில் உண்ணக்கூடிய உணவுப் பொருட்களால் உணவே நஞ்சாகி உடல் நலம் கெடும் அபாயம் உண்டு. கண்ட இடத்தில் சாப்பிடுவதையும், நேரம் கழித்துச் சாப்பிடுவதையும் நிறுத்திக் கொள்ளுங்கள். சரியான நேரத்தில், சுகாதாரமான உணவை மட்டுமே உண்ணுங்கள். பிறப்பு உறுப்பில் ஏதாவது பிரச்சினை தென்பட்டால் தயங்காமல் உடனேயே சிகிச்சை எடுத்துக் கொள்ளுங்கள். தொற்று நோய்ப் பாதிப்பு, ஜுரம், கால்களில் காயம் படுவது, உடல் நலம் குடல் நோயால் பாதிக்கப்படுவது இதெல்லாம் சிலருக்குச் சில பாதிப்புகளைத் தரலாம். முறையான சிகிச்சையால் பாதிப்பைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

பொதுவாக, மேன்மைகள் பல ஏற்படக்கூடிய இந்த ஆண்டில், பெப்ரவரி மாதம் மட்டும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய காலகட்டம். மற்றப்படி நன்மைகள் அதிகரிக்கக்கூடிய சமயத்தில் வாக்கில் மட்டும் கவனமாக இருக்க வேண்டும். யாருடைய அந்தரங்கத்திலும் தலையிடாமல் இருப்பதும் அவசியம்.

**செவ்வாய்க்கிழமைகளில் செந்தில் ஆண்டவனை நினைத்து விரதமிருந்து வழிபடுங்கள். எப்போதும் திருச்செந்தூர் ஆண்டவன் துதியைச் சொல்லுங்கள், கேளுங்கள். முருகன், வருடம் முழுவதும் மகிழ்ச்சியில் மூழ்க வைப்பான்.**

# முட் பாதையில் மரித்த மிதவாதம்


**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பிந்திய இந்திய நிலைமைகள்

ராஜீவ் காந்தியின் படுகொலையையடுத்து இந்தியாவிலும் தமிழகத்திலும் எழுந்த எதிர்ப்பலைகளை பின்னர் நடைபெற்ற இந்திய லோகசபைத் தேர்தலும் தமிழக மாநில சபைத் தேர்தலும் பிரதிபலித்தன. 1989, 1990களில் தமிழகத்தில் புலி இயக்க நடவடிக்கைகளுக்கு வலுவான ஆதரவு வழங்கியதோடு அந்த இயக்கத்தை ஆதரித்தும் பேசிவந்த கலைஞர் கருணாநிதி ஆட்சிப் பொறுப்பிலிருந்து தூக்கி வீசப்பட்டார். இரண்டே இரண்டு ஆசனங்களை மட்டும் கைப்பற்றிய தி.மு.க., தமிழகத்தில் படுதோல்வியைச் சந்தித்தது. அப்போது புலி எதிர்ப்பு நிலைப்பாட்டினை எடுத்திருந்த ஜெயலலிதா அதிகாரத்தைக் கைப்பற்றினார். 1991இல் நடைபெற்ற இந்திய மத்திய அரசுக்கான தேர்தலில் காங்கிரஸ் கட்சி ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. 1991ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின் மூன்றாவது வாரத்தில் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் கட்சி ஆட்சியைப் பொறுப்பேற்றுக் கொண்டது.




1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கையில் தமிழ் மக்களுக்கெதிராகக் கட்டவிழ்த்து விட்டப்பட்ட வன்செயல்கள், படுகொலைகளையடுத்து, இலங்கை நிலைமைகளை நேரடியாகக் கண்டவறிவதற்காக அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டவர் நரசிம்மராவ். அப்போது இந்திய வெளிவிவகார அமைச்சராகப் பணி புரிந்தவர் நரசிம்மராவ். இந்தியப் பிரதமராக நரசிம்மராவ் பதவியேற்றமை, ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவுக்குத்



நரசிம்மராவ்

தனிப்பட்ட ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பெரும் விசனத்தையேற்படுத்தியது. 83 ஜூலைக் கலவரங்களையடுத்து இந்திரா காந்தியின் விசேட பிரதிநிதியாக இலங்கைக்கு வருகை தந்திருந்த நரசிம்மராவை, அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, அமைச்சர் காமினி திஸாநாயக்கா ஆகியோர் உரிய மரியாதையுடன் வரவேற்று உரையாடினர். ஆனால், இலங்கையில் இந்தியாவின் ஈடுபாட்டைக் கடுமையாக எதிர்த்து வந்த பிரேமதாசா, ராவுக்கு அவமரியாதை தெரிவிக்கும் விதத்தில் நடந்து கொண்டார். அப்போது பிரதமராகவிருந்த பிரேமதாசாவைச் சந்திக்க, ஏற்கனவே இணங்கியபடி பிரதமர் அலுவலகத்துக்குச் சென்ற இந்திய வெளிவிவகார அமைச்சரை பதினைந்து, இருபது நிமிடங்கள் வரை காத்திருக்க வைத்தவர் பிரேமதாசா. இது நரசிம்மராவுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியிருக்குமென்பதில் ஐயமில்லை. அத்துடன், 1990ஆம் ஆண்டு இந்தியப் படையை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்குப் புலிகளுடன் இணைந்து செயற்பட்ட பிரேமதாசாவுக்கு மீண்டும் காங்கிரஸ் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டமை

**(அரசியல் தொடர்)**

விரும்பத்தகாத ஒரு விடயமாக அமைந்திருக்கலாம். அத்துடன் அக்காலத்தில் புலிகள் கையாண்ட வன்செயல் நடவடிக்கைகள், இலங்கை அரசின் கழுத்துக்கு நேராகத் தூக்குக் கயிறு போலத் தொங்கிக் கொண்டிருந்தது.

முதிர்ந்த அரசியல்வாதியான நரசிம்மராவ், இலங்கை - இந்திய உறவுகளை மிக அவதானத்துடனும் எச்சரிக்கையுடனும் கையாண்டார். இலங்கை வாழ் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல், சமூக, கலாசார அபிலாஷைகளுக்குத் தொடர்ந்தும் மதிப்பளித்து வந்த நரசிம்மராவ் அரசு, இத்தகைய அபிலாஷைகளை எய்துவதற்குப் புலிகள் இயக்கம் பின்பற்றி வந்த வன்செயல் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புக் காட்டி வந்தது. ஆனால், இலங்கையின் இன நெருக்கடிக்கு அரசியல் கலந்துரையாடல்கள் மூலமே தீர்வு காணப்பட வேண்டுமென்றும் இந்தியா வலியுறுத்தி வந்தது. இலங்கைப் பிரச்சினையில் ராஜீவ் காந்தி காலத்தில் இந்தியா அதீத அக்கறை காட்டி வந்ததாக இரு நாடுகளிலுமே விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதால், நரசிம்மராவின் அரசு மிகக் கவனமாக அடியெடுத்து வைத்தது. இலங்கை அரசும் தமிழர் தரப்பும் தாங்களாகவே தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்பதே இந்திய அரசின் நிலைப்பாடாக இருந்தது. குறிப்பிடத்தக்க இந்த அம்சங்களுக்கு அப்பால் இலங்கை - இந்திய இரு தரப்பு உறவுகளும் அரசியல், பொருளாதார, கலாசார உறவுகளும் இலங்கை விரும்பும் விதத்திலேயே அமைய வேண்டுமென்பதும் இந்திய அரசின் அப்போதைய நிலைப்பாடு.

இந்திய மண், எந்தவொரு அயல் நாட்டுக்கும் எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படக் கூடாதென்பதும் நரசிம்மராவின் நிலைப்பாடு. இதனால் தமிழ் நாட்டிலோ அல்லது இந்தியாவிலோ புலிகள் இயக்கத்துக்குத் தளங்களோ மறைவிடங்களோ இருக்கக் கூடாதென்பதில் இந்திய அரசு உறுதியாகவிருந்தது.

இந்தியா தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாசா கொண்டிருந்த மனோநிலை, அரசியல் பின்புலம் ஆகியவற்றை நன்கு புரிந்து கொண்ட இந்தியப் பிரதமர், இரு நாடுகளுக்குமிடையிலான நடைமுறைச் செயற்பாட்டு உறவுகள் தொடர்ந்திருக்க வேண்டுமென்று விரும்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

பினார். வெளிவிவகார அமைச்சு மட்டத்திலும் வெளிவிவகாரச் செயலாளர் மட்டத்திலும் உறவுகளைப் புதுப்பிக்குமாறும் இலங்கை - இந்தியக் கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுக் கூட்டங்களைத் தொடர்ந்து நடத்துமாறும் இந்திய அதிகாரிகளுக்கு பிரதமர் உத்தரவிட்டார்.

1992, 1993ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஜனாதிபதி பிரேமதாசா, ஐந்து தடவைகள் இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கிறார். 1992ஆம் ஆண்டு ஒரு தடவையும் 93ஆம் ஆண்டு நான்கு தடவைகளும் விஜயம் செய்திருக்கிறார். இவற்றில் ஒன்று மட்டுமே உத்தியோகபூர்வ இருதரப்பு விஜயமாகும். ஏனைய நான்கும் ஒன்றில் அவரின் தனிப்பட்ட விஜயங்கள் அல்லது இடைத்தங்கல் விஜயங்களாகும். இந்திய அரசுடன் உறவுகளைச் சீர்செய்து கொள்ள விரும்பிய ஜனாதிபதி பிரேமதாசா, புத்தகாயாவுக்கு விஜயங்களை மேற்கொண்டார். இந்தியாவின் பீகார் மாநிலத்திலுள்ள புத்தகாயாவிலுள்ள மகா போதியைச் சுற்றித் தங்கவேலி அமைத்துத் தரவும் பிரேமதாசா முன்வந்தார். அத்துடன் புத்தகாயாவிலிருந்த வீடற்ற 100 அல்லது 150 குடும்பங்களுக்கு குடியிருப்புக்களை அமைத்துக் கொடுக்கவும் அவர் முன்வந்தார். இந்த வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பொறுப்பு பிரேமதாசாவின் நெருங்கிய சகாவும் அப்போதைய வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான சிறிசேன குரேயிடம் கையளிக்கப்பட்டது. 1993 ஏப்ரலில், அதாவது பங்களாதேஷில் நடைபெறவிருந்த சார்க் உச்சிமாநாட்டுக்கு முன்னதாக இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. டாக்கா சார்க் உச்சி மாநாட்டை நடத்துவதா? இல்லையா? என்ற நெருக்கடி சார்க் அங்கத்துவ நாடுகளிடையே எழுந்தபோது, இந்த மாநாடு நடத்தப்பட வேண்டுமென்று இரு தலைவர்கள் மட்டுமே வலியுறுத்தினர். ஒருவர் இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா. மற்றவர் பாகிஸ்தான் அதிபர் நவாஸ் ஷெரீப். சார்க் மாநாடு தொடர்பாக பாகிஸ்தானுக்கும் - இந்தியாவுக்கும் இடையில் நடந்த பிரச்சினைக்கு அரசியல் காரணங்கள் இருந்தன. ஜனாதிபதி பிரேமதாசா இந்த மகாநாடு நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியமைக்கும் அரசியல் காரணங்கள் இருக்கின்றன.

புத்தகாயா திட்டத்தை இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் முன்னிலையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்க ஜனாதிபதி பிரேமதாசா விரும்பினார். 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆறாம் திகதி பாப்ரி மஸ்ஜித் இந்துத் தீவிரவாதிகளால் இடித்து தகர்க்கப்பட்டமையும், 1993 மார்ச்சில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் மேற்கொண்ட பம்பாய் குண்டுவெடிப்புகளினால் எழுந்த பதற்ற நிலைகள் காரணமாகவே இந்த அங்குரார்ப்பண வைபவத்தில் நரசிம்மராவ் கலந்து கொள்ளவில்லையெனக் கூறப்பட்டது. ஆனால் பிரேமதாசாவுக்கும் நரசிம்மராவுக்குமிடையில் நிலவிய முரண்பாடு காரணமாகவே, இந் நிகழ்வில் கலந்து கொள்வதை ராவ் தவிர்த்துக் கொண்டார்.

(தொடர்ந்து வரும்....)




**நாலு** நாள் மட்டும் மரத்துக்கிட்டயே போகாம.

இந்த மரம் இருந்ததால அந்த இடத்துக்குப் பக்கத்தில் இருக்கிற பங்களாவையும் வல்லிக்கோட்டை பங்களான்னு சொல்ல ஆரம்பிச்சாங்க. வல்லின்னா, படர்ந்து வளர்ற கொடிங்கறது தெரியுமில்லையா? அதுதான் அதோட அர்த்தம்."

இதற்கு மேல் அந்தப்பாட்டி சொல்வதைக் கேட்டால் உடல் நடுங்கும்.

சுமார் எண்ணூறு வருடங்களுக்கு முன்னால இதே பங்களாவில அஸ்வினிங்கிற எஜமானியம்மா இருந்தாங்க.

அந்தம்மா பிறந்த நட்சத்திரம் அஸ்வினிங்கிறதால அந்தம்மாவுக்கு அதையே நட்சத்திரப்படி பேரா வச்சிட்டாங்க. சும்மா சொல்லக்கூடாது, தேவலோகத்தில் இருந்து வந்த மாதிரி அவ்வளவு அழகா இருப்பாங்க. நாம கோயில் சிலைகளைப் பார்ப்போமே. அந்த மாதிரி உடம்பு.

"இந்திரவில் மாதிரி புருவங்கள்...

"நட்சத்திரங்கள் பிறப்பெடுக்கின்ற கண்கள்...

"நீளமான முனை மடிந்த மூக்கு....

"ஈரமான சிவப்பு உதடுகள்...

"உள் பக்கமாக வளைந்து இறங்கும்



கீழ்த்தட்டின் கீழ்ப்பகுதி....

"வலம்புரிச் சங்கு மாதிரி கழுத்து....

"அவளது அப்பா மந்திர வேலைகளில் தேர்ந்தவராயிருந்தார். அதனால் அஸ்வினியும் சின்ன வயசில இருந்தே அப்பா கூட உதவி செஞ்சு

**புஷ்பாநாத்**
**தமிழில்**
**சிவன்**

ஓலைச்சுவடிகளைப் படிக்க ஆரம்பிச்சா"

ஒருநாள் மோகினி கோவில் வழியாக வந்தபோது அஸ்வினி ஒரு சிலையைப் பார்த்தாள். சாதாரணமா அந்தக் கோவிலுக்குள்ள யாரும் போறதில்லை. அழகான ஒரு கந்தர்வனோட சிலை. அந்தச் சிலையைப் பார்த்ததும் அவருக்குப் பிடிச்சுப் போச்சு.

நல்ல உடல் கட்டோடு அழகா இருந்த அந்தக் கந்தர்வனைக் காதலிக்கவே ஆரம்பிச்சிட்டா.

அன்னைக்குச் சித்திரை மாசத்துப் பௌர்ணமி.

வீட்டுக்குப் போன அஸ்வினி, ஜன்னல் வழியா வெளியே பார்த்தபோது, எதிரே பாலை மரத்தின் கீழ் மனங்கவர்ந்த கந்தர்வன் சிலை வடிவில் இருந்தவன் நிஜமாய்... கண்ணுக்கெதிரே.

கண்ணுக்குத் தெரியறது உண்மைதானா? இரண்டு தடவைக் கண்ணைக் கசக்கிப் பார்த்தாள்.

உண்மையேதான். மரத்தின் கீழே அதே கந்தர்வன். அவள் வாசல் கதவின் தாழ்ப்பாளைத் திறந்தாள். சத்தமில்லாமல் மெதுவாக மூச்சைப் பிடித்தபடி.

காலில் சிலுங்கும் கொலுசு. சத்தமில்லாமல் அதைக் கழற்றி வாசல்படியின் கீழே வைத்தாள். மெதுவாக வலது காலை எடுத்து வைத்துப் படியிறங்கினாள்.

பாலை மரத்தடியில்.... அவளையே பார்த்தபடி நின்றிருக்கும் தேவகந்தர்வன்.

"அஸ்வினி" கந்தர்வனின் நாக்கு அசைந்தது.

"ம்..உம்" அவள் முனகினாள்.

"முதல் நட்சத்திரம்!" சொல்லியபடியே கந்தர்வனின் கைகள் அவளது உடையில்லாத தோள் பகுதியில் பதிந்தது.

அஸ்வினி வெட்கத்துடன் சந்தோஷமும் கலந்து நெளிந்தாள்.

கந்தர்வக் கோயில் மண்டபச் சுவரில் அஸ்வினியின் முதுகு உரசியது. வழுவழுப்பான தரையில் அவளது பிட்டங்கள் அமர்ந்தன.

வழக்கம்போல் சாயந்திர வேளையில் விளக்கு கொளுத்தும்போது அஸ்வினியின் பாட்டி, அஸ்வினியிடம் கேட்டாள்.

"அஸ்வினி.... இன்னைக்கு"

அவள் திரும்பிப் பார்த்தாள். பாட்டி வாக்கியத்தை முடிக்கவில்லை. சந்தேகத்துடன் அஸ்வினியை தலையிலிருந்து கால்வரை பார்த்தாள். ஒருவேளை கொஞ்சம் தள்ளிப்போயிருக்கலாம். ஆனால் மறுநாளும் அஸ்வினி துளசி மாடத்தில் விளக்கேற்றினாள். அவள் பாட்டிக்குப் பயம் எழுந்தது. பதற்றமடைந்தாள். அஸ்வினியிடம் விவரம் கேட்டாள்.

"அதோ... அங்கேதான்" - அஸ்வினி பாலை மரத்தைச் சுட்டிக் காட்டினாள். பாட்டிக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனால்,

அஸ்வினியின் அடிவயிறு கொஞ்சம் கொஞ்சமாய் பெருத்துக் கொண்டு வந்தது.

தாத்தா அஸ்வினியைக் கூப்பிட்டார்.

"என்னடி இது? யாரவன்? எந்தக் குடி கேடன்?" கோபமாய் தாத்தா வலது காலை உயர்த்தினார்.

சட்டென்று அது நிகழ்ந்தது. தாத்தா ஒரு தடவை தான் பார்த்தார்.

அஸ்வினியின் அடிவயிற்றில் சட்டென்று ஒரு வெளிச்சம். அந்த வெளிச்சம் தாத்தாவின் கண்களை இருட்டாக்கியது. அவர் கண்களைக் கைகளால் பொத்தினார்.

அதற்குப் பிறகு நாராயண நம்பூதிரிக்கு ஒருபோதும் சூரிய உதயத்தைப் பார்க்கும் வாய்ப்பு ஏற்படவில்லை. எவ்வளவோ சிகிச்சைகள் செய்தும் கண் பார்வை கடைசி வரைக்கும் திரும்பவில்லை.

இதற்குப் பிறகு இரண்டாவது நாள் தாத்தா உத்தரவிட்டார். "அஸ்வினி இனிமேல் துளசி மாடத்திலும், புற்றுக் கோயிலுக்கும் விளக்கு வைக்கப் போக வேண்டாம்"

மாசங்கள் ஓடியதே தெரியவில்லை. அவ்வளவு விரைவாக விரைந்தது.

சரியாக இருநூற்றித் தொண்ணூற்றி ஒன்பதாவது நாள் அஸ்வினி சாதாரண வலி கூட இல்லாமல் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். இறந்து பிறந்த குழந்தை!

ஒரு தங்க விக்கிரகம் மாதிரி - பெண் குழந்தை! பாட்டி குழந்தையைக் கையில் எடுத்துப் பார்த்தாள். நல்ல கனம். (17 இறாத்தல் எடை) அவளது கை தாழ்ந்தது.

(பயங்கரம் தொடரும்)

## மனதுக்கு நிம்மதி

# யார் தவறு?

**அன்றாட** வாழ்க்கையில் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் பல துன்பங்களுக்குக் காரணம், நம்முடைய தவறுகளை நாம் ஏற்றுக்கொள்ள மறுப்பதுதான். ஆபீஸாக இருந்தாலும் சரி, வீடாக இருந்தாலும் சரி... நம்முடைய தவறுகளை, ஏமாந்த சோணகிரி யாராவது கிடைத்தால் அவர் தலையில் கட்டிவிட்டு, நாம் தப்பித்துக் கொள்வது என்பது இப்போது சர்வசகஜமாகிவிட்டது.


ஒரு முறை நண்பர் ஒருவருடன் சென்னை வீதியில் காரில் போய்க்கொண்டிருந்தேன். என்னைக் குறிப்பிட்ட நேரத்துக்குள் அழைத்துச் செல்லவேண்டும் என்கிற அவசரத்தில் நண்பர் வேகமாகக் கார் ஓட்டினார். அப்போது எதிர்பாராதவிதமாக எதிரே வந்த ஆட்டோ மீது மோதிவிட்டார். வண்டியை மோதிய அதே வேகத்தில் சற்றும் யோசிக்காமல், ஆட்டோ டிரைவரைப் பார்த்து சென்னைத் தமிழில் வெளுத்து வாங்கிவிட்டு, அதே வேகத்தில் காரைக் கிளப்பிக் கொண்டு வந்துவிட்டார்.

சற்றுத் தூரம் சென்றதும், “தவறு நம்முடையதுதானே...? தவறான பாதையில் வந்தது நாம்தானே? நியாயமாகப் பார்த்தால் நாம்தான் அவரிடம் மன்னிப்புக் கேட்டிருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு அவரைத் திட்டித் தீர்த்தது சரியா?” என்று நண்பரிடம் கேட்டேன்.

“சுவாமி, இந்தச் சென்னையைப் பத்தி உங்களுக்குத் தெரியாது. இங்கே ரோட்டில் மத்தவன் மேலே நாம் இடிச்சாலும் சரி, அடுத்தவன் வந்து நம்மை இடிச்சாலும் சரி... முதலில் நாம்தான் சத்தம் போட்டுவிட வேண்டும். அப்போதுதான் எதிராளி பயந்து அடங்கிப்போவான். இல்லை என்றால் நம் தலையில் மிளகாய் அரைத்துவிடுவார்கள்” என்று நண்பர் எனக்கு “வீதி நீதி” பற்றி உபதேசம் செய்தார்.

நான் மிகவும் ரசிக்கும் முல்லா நஸ்ருதீன் கதை ஒன்றை நண்பருக்குச் சொன்னேன்.

முல்லா ஒரு முறை பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்தார். அங்கே



நான்கு ஸீட் தள்ளி உட்கார்ந்திருந்த டிப்டாப் ஆசாமி ஒருவரைப் பார்த்ததும் முல்லாவுக்கு உற்சாகம் மேலோங்கிவிட்டது.

“டேய் பஷீர்... என்னடா அடையாளமே தெரியாத அளவுக்கு மாறிட்டே...!” என்று சத்தமாகக் குசலம் விசாரித்தார் முல்லா.

டிப்டாப் ஆசாமி ஏதோ சொல்ல வாயெடுக்க, முல்லா அவரைப் பேசவே விடாமல், “என்னடா பஷீர்... பீப்பா மாதிரி இப்படிக் குண்டாயிட்டே?” என்றார்.

டிப்டாப் ஆசாமி மீண்டும் ஏதோ சொல்ல வாயெடுத்தார்.

மறுபடியும் முல்லாவே குறுக்கிட்டுப் பேசினார். “காலேஜ்ல படிச்ச போது, குள்ளமாத்தான் இருப்பே. இப்ப எப்படிடா பஷீர் ஆறடி உயரத்துக்கு வளர்ந்துட்டே?”

கடுப்பாகிப்போன அந்த டிப்டாப் ஆசாமி, “கொஞ்சம் என்னைப் பேச விடறீங்களா? என் பேர் பஷீர் இல்லை. இப்ராகிம்” என்றார்.

உடனே முல்லா தன் தவறை உணர்ந்தாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், “அட, ஆள்தான் அடையாளம் தெரியாத அளவுக்கு மாறிட்டேனு பார்த்தா பேரைக்கூடவா மாத்திக்கிட்டே?” என்று சமாளித்தார்.

நகைச்சுவைக்காகச் சொல்லப்படுகிற கதை இது.

ஆனால், நிஜமாகவே நாம் நம்முடைய தவறுகளை இப்படி மூடி மறைத்துக் கொண்டிருந்தால், நாளடைவில் அது நமக்கே கெடுதலாக முடியும். ஒரு கட்டத்தில் நம்முடைய பொய்களை நாமே நம்ப ஆரம்பித்துவிடுவோம். இதைவிட ஒரு பெரிய கேடு இருக்க முடியாது.

சுவரில் ஒட்டியிருக்கும் பல்லி, தான்தான் சுவரையே தாங்குவதாகக் கற்பனை செய்து கொள்ளுமாம். அதைப் போல கம்பெனியையே தான்தான் தாங்குவதாக அங்கு வேலை செய்யும் ஒருவன் எல்லோரிடமும் கதை அளந்து கொண்டிருந்தான். கம்பெனி சம்பந்தமான பல பொறுப்புகளைத் தான்தான் தலையில் சுமப்பதாகப் பார்க்கிறவர்களிடம் எல்லாம் அவன் ரீல் விட்டுக் கொண்டிருந்தான். பல வருட காலமாக இதே பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தவன், ஒரு கட்டத்தில் அவனே அந்தப் பொய்யை நம்பத் தொடங்கிவிட்டான்.


ஒரு முறை அதிகச் சம்பளம் கிடைக்கும் என்ற காரணத்துக்காக வேறு ஒரு கம்பெனியின் இன்டர்வியூவில் கலந்து கொண்டான். இன்டர்வியூவின்போது அந்தக் கம்பெனியின் மானேஜர் சொன்னார்.... “இது ஒரு பெரிய பதவி. முக்கியமான பதவி. அதனால் இந்தப் பதவிக்கு நாங்கள் தேர்ந்தெடுக்கும் நபர் மிக மிகப் பொறுப்பு மிக்கவராக இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்”

இதைக் கேட்டதும் நம்முடைய ஆள், “அதற்கு நான் முற்றிலும் தகுதியானவன். எங்கள் கம்பெனியிலேயே அதிகமான பொறுப்புகள் என்னுடையதுதான்!” என்றான்.

“உண்மையாகவா சொல்கிறீர்கள்?” என்று கேட்டார் மானேஜர்.

“பின்னே..? எங்கள் கம்பெனிக்கு வந்து யாரை வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்கள்... போன வருடம் எங்கள் கம்பெனி கோடௌன் எரிந்து சாம்பலானது. நிர்வாகம் அதற்கு நான்தான் பொறுப்பு என்றது. போன மாதம் கம்பெனியில் ஸ்ட்ரைக் நடந்தது. அதற்கும் கம்பெனி நான்தான் பொறுப்பு என்றது. சென்ற வாரம் ஒரு முக்கியமான ஆர்டர் எங்கள் கையைவிட்டுப் போனது. அதற்கும் நான்தான் பொறுப்பு என்றது கம்பெனி. ஆகையால், எங்கள் கம்பெனியிலேயே அதிகப் பொறுப்புகள் உள்ளவன் நான்தான். இந்த வேலையை நீங்கள் எனக்குக் கொடுத்தால், இதே மாதிரியே அதிகப் பொறுப்போடு செயல்படுவேன்” என்றானாம்.

நம்முடைய தவறுகளை எல்லாம் மூடிமறைத்து, நாமாக ஒரு பொய்யை உருவாக்கி, அதை மற்றவர்களிடமும் பரப்பிக் கொண்டிருந்தால், நாளடைவில் அது நமக்கே தீங்காக முடியும் என்பதை விளக்குவதற்காக நான் அடிக்கடி சொல்லும் கதை இது.



ஆரம்பத்தில் ஒரு தவறு உண்டானபோதே, அதற்கு நாம்தான் காரணம் என்று பொறுப்பேற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும். அப்போதுதான் “அந்தத் தவறு ஏன் நடந்தது? அது மேற்கொண்டு நடக்காமல் எப்படித் தவிர்ப்பது?” என்று நம்மால் தீர யோசித்து, வழி காண முடியும். உண்மையில் நம் மீதுதான் தவறு என்றால், நம்மை நாம் திருத்திக் கொள்ளலாம். அப்படி இல்லையென்றாலும்கூட, சம்பந்தப்பட்டவர் மறுபடி அந்தத் தவறைச் செய்யாதவாறு நம்மால் தடுக்க முடியும். அதை விட்டுவிட்டு, ஆரம்பத்திலேயே பழியை வேறு ஒருவர் மீது சுமத்திவிட்டால், அந்தத் தவறு திருத்தப்படுவதற்கான கதவுகள் அனைத்தும் அடைபட்டுப் போகும். அடுத்தவர் மீது குற்றம் சுமத்தி, அந்த நிமிடத்துக்குத் தப்பிப்பது என்பதை நிர்வாகவியல் நிபுணர்களின் வார்த்தைகளில் சொன்னால் It is a tactical success but a strategic failure.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.201க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

ஏ. ஜே. இஹ்சானா, அகதி முகாம், நாச்சியாதீவு, அநுராதபுரம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. திருமதி ஜெயா ஜேசுதாசன், இயேசுவின் இல்லம், 155/07, ஜெம்பட்டா வீதி, கொழும்பு - 13.
2. எஸ். ஏ. மோகன், 28, 42ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06.
3. அ. சந்தியாகோ, 34/12, அம்பிட்டிய வீதி, தென்னக்கும்புர, கண்டி.
4. ஏ. எஸ். எம். இன்பாஸ், 10ஆம் கட்டை, மெதகம, பிபிலை.
5. க. கமால்தீன், புன்னக்குடா வீதி, ஏறாவூர் - 03.
6. ஆர். கார்த்திகேசு, 3 1/3 42ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06.
7. க. நிரஞ்சன், 22, பிரதிபிம்பாராம வீதி, களுபோவிலை, தெகிவளை.
8. கே. எம். எஸ். ஆப்தீன், 36, போல்ஸ் வீதி, புத்தளம்.
9. கு. வி. விஜயகுமார், சின்னக்கடை, மன்னார்.
10. த. திவ்வியா, குருமண்காடு, வவுனியா.

## குறுக்கெழத்துப் போட்டி 203

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | ■ | 12 |
| 13 | ■ | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | ■ | ■ | 23 | 24 |
| ■ | 26 | 27 | 28 | 29 | ■ |
| 31 | 32 | ■ | 34 | 35 | 36 |

**இடமிருந்து வலம்**

1. கடைசியாக ஆசிய உச்சிமாநாடு நடைபெற்ற நாடு.
07. கலைகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)
15. போராட்டம் அல்லது எழுச்சி என்று பொருள்.
19. பற்பொடியின் மூலப்பொருள் (திரும்பியுள்ளது).
23. தங்கம்.
26.குற்றவாளிகளுக்கு வழங்கப்படுவது (குழம்பியுள்ளது).
31. வெப்பம்
34. ஆசை என்று பொருள்படும் (குழம்பியுள்ளது).

## குறுக்கெழுத்துப் போட்டி 201 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 லா | 2 ழ் | 3 த் | 4 சு | ■ | 6 கா |
| 7 றை | 8 ஆ | ■ | 10 பி | 11 வு | 12 ரி |
| 13 க | 14 ர் | 15 வ | 16 ம் | ■ | 18 தை |
| ■ | 20 லா | 21 கு | ■ | ■ | ■ |
| 25 கா | ■ | 27 ளை | 28 க | ■ | 30 ன் |
| 31 ளி | 32 மா | ■ | 34 ல் | 35 ட | 36 ஊ |

**மேலிருந்து கீழ்**

1. உலக அதிசயங்களில் ஒன்று (குழம்பியுள்ளது).
2. உயிர்களைக் காவு கொடுத்தலை இப்படியும் கூறலாம் (தலைகீழ்).
3. தவறு (குழம்பியுள்ளது).
4. நடன தேவதைகளில் ஒருத்தி (தலைகீழ்).
6. மாணவன் என்றும் கூறலாம் (குழம்பியுள்ளது).
17. திறந்தவெளி என்று பொருள்படும் (குழம்பியுள்ளது).
20. முகத்தில் ஒரு பகுதி
28. அர்ஜுன் நடித்த திரைப்படம் ஒன்று (தலைகீழ்).

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 23.01.2007 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-203
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## மின்சாரக் கதைகள்

- வழங்குவது ராஹில்

# என் காதல் சுவாசிக்க ஆரம்பித்தது!

**என்** நினைவுகளுக்கு நீ நீருற்றி வளர்த்தாய்.

என் கனவுகளுக்குச் சிறகு கொடுத்தாய் நீ!

பருவத்தை நான் தோண்டியபோது ஒரு புதையலாக நீ என் மனதில் விழுந்தாய்.

உன் புன்னகை ஊற்றித்தான் என் உயிரை வளர்த்தேன் நான்.

உன் மௌனத்தை வார்த்தைகளாக்கி சுவாசித்தேன் நான்.

இப்பொழுதும் அந்த அந்திநேரத்தை நான் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்.

அந்தப் பொழுதை நகரவிடாமல் என் விழிகளில் கொழுவியுள்ளேன்.

என் வகுப்பில் நீ புதிதாக மலர்ந்தபோது அத்தனை விழிகளிலும் இனிப்பு வடிந்தது. ஆனால், நானே தேனாகக் கசிந்தேன் உன் பூ உருவம் பருகியதும்.

என் அருகில்தான் பூத்தாய் நீ!

ஒரு தென்றலைக் கண்களால் உண்டேன் நான்.

நான் வாசித்த முதல் கவிதை உன் வாசந்தான்.

எனக்கு உயிருண்டு என்பதை நீ விழிகளால் தெரியப்படுத்தினாய்.

என்னை விழிகளில் நீ ஏற்றியதும் ஒரு சொட்டுப் புன்னகை நெய் இட்டாய்.

அந்தச் சொட்டுப் புன்னகைக்குள் என் வயது அமிழ்ந்து போனது.

‘ராக்கிங்’ வலை வீசி உன்னைப் பிடிக்க முயற்சித்தவர்கள் தோற்றுப் போனார்கள்; உன் உருவத்தால் மற்றவர்களுக்கு ராக்கிங் கொடுத்ததால்!

நீ என் உயிரில் வியர்வைத் துளிகள் நிரம்பின, நீ என் அருகில் வசித்த போதெல்லாம்.

எனக்குள்ளேதான் நீ வசித்தாய் உனக்குத் தெரியாமலே!

ஹலோ சொன்னாய் நீ.

கவிதைபோல் இனித்தேன் நான்.

மிக அழகிய வார்த்தைகள் சிலவற்றை நான் சேகரித்தேன் உனக்காக!

உன் அழகிய மௌனத்தை ருசித்தேன் ஆவலாக!

உன் இளமையை ரசித்தேன் மிக ஆசையாக!

இரவை என் விழிகளில் நிறுத்தி உனக்காக நட்சத்திரங்கள் செய்தேன் நான்.

காகதித்தில் முதன் முதலாக நட்சத்திரங்கள் படைத்தவன் நான்தான்.

வகுப்பிலிருந்து நீ உதிர்ந்தபோது உனது ‘நோட்புக்’ ஐ சுட்டேன் நான் - அதனுள் ஒரு நிலா நுழைப்பதற்காக!

அந்த ‘நோட்புக்’ ஐ திறந்தேன்.

உன் மௌனம் என் அழகை இன்னும் அதிகரிக்கிறது. உன் பக்கத்தில் நான் உட்காரும் போதெல்லாம் வெவ்வேறு மலர்களாகிறேன்.

சுரேஸ்! நீ எனக்குள் வசிக்கிறாய்!

அதை என் வயது வாசித்ததும் என் காதல் சுவாசிக்க ஆரம்பித்தது.

# காதலிக்க நேரமில்லை!

**வசந்தி** - மனம் முழுவதும் நிரம்பி வழிந்த சந்தோஷத்துடன் பஸ்ஸில் ஏறினாள். ஓ! எத்தனை வருடங்கள், எவ்வளவு பிரச்சினைகள் தன் மூன்று சகோதரிகளையும் கரையேற்ற அவள் தன்னை மெழுவர்த்தியாக்கிக் கொண்டாள். தபால் நிலைய ஊழியராக இருந்த அவள் தந்தை, பஸ் விபத்தொன்றில் மரணமாக - அப்போதுதான் க.பொ.த. உயர்தரம் படித்து திறமைச் சித்திப்பெற்று பல்கலைக்கழகம் போவதற்கு


–பாலா.சங்குபிள்ளை, ஹட்டன்.

தயாராகிக்கொண்டிருந்தாள். மூத்தவளான அவள் தலையில் முழுப்பொறுப்பும் விழுந்தது. அதே தபால் நிலையத்தில் அவளுக்கும் வேலை கிடைத்தது. அதற்குப் பின் அவள் இயந்திரமானாள். கடுமையாக உழைத்தாள். வேலை முடிந்து வீட்டுக்கு வந்து டியூஷன் வகுப்புகள் நடத்தினாள்.

வசந்தியின் மனம் கல்லாகி விட்டிருந்தது. அவளுக்கென்று எந்த ஆசையும் இல்லை. குருவித்தலையில் பனங்காய் போல அந்த வயதில் எல்லாப் பொறுப்புகளும் அவள் தலையில்.

கணேஷ்! அதே தபாலகத்தில் வேலை செய்பவன். மிக அழகானவன். அவன் தந்தை காப்புறுதி நிறுவனத்தில் வேலை செய்கிறார். அவனுக்கு இரண்டு தங்கைகள், ஒரு தம்பி. சொந்தத்தில் சிறிய வீடு இருக்கின்றது. குடும்பத் தலைவனாக அப்பா இருப்பதனால் அவனுக்கு எந்த கவலையும் இல்லை. மூத்த தங்கைக்குக் கூட வரன் பார்த்தாகிவிட்டது. கணேஷிடம் மட்டுமே வசந்தி சகஜமாகப் பழகுவாள். அவள் ஓரளவு சந்தோசமா இருக்கும் நிமிஷங்கள் இருக்குமானால் அது கணேஷுடன் பேசும் நேரம் மட்டும்தான். கணேஷுக்கு வசந்தியின் விஷயங்கள் யாவுமே தெரியும். அவள் மேல் அவனுக்கு ஆரம்பத்தில் அனுதாபம் மட்டுமே இருந்தாலும் பின்பு அது காதலாக மாறியது. ஒரு மரத்திலுள்ள பழங்களைச் சரியாக எண்ணிவிடலாம். ஆனால் ஒரு பழத்தால் உருவாகப் போகும் மரங்களை எண்ணிவிட முடியாது. அதே போலத்தான் காதலும். மனதிலுள்ள காதலை யாராலும் சரியாக எடைப்போட்டுவிட முடியாது. கணேஷ் வசந்தியை நேசித்தாலும் அதை அவளிடம் சொல்லவில்லை.

அதேபோலத்தான் வசந்தியும். சகஜமாக அவனுடன் அவள் பழகினாலும் பின்பு அது காதலாக மாறியது. குடும்பப் பொறுப்புகள் தலையில் இருந்தமையினால் அவள் தன் காதலை அவனிடம் சொல்லவில்லை. அவர்கள் இருவரின் காதலும் கடலுக்குள் மலர்ந்த மலரைப் போல தெரியாமலேயே இருந்தது.

நாட்கள் ஓடின. அவள் இரண்டு தங்கைகளுக்கும் அடுத்தடுத்து வரன்கள் வந்தன. வந்தவர்களும் பெரியளவில் சீதனம் எதனையும் எதிர்பார்க்காதவர்களாக நல்லவர்களாக இருந்தார்கள். வசந்தி மிகவும் சிரமப்பட்டு தபாலகத்தில் அவளுக்கிருந்த சலுகைகளைப் பயன்படுத்தி கடன் வாங்கினாள். கணேஷ் அவளுக்கு எல்லாவகையிலும் உதவியாக - ஒத்தாசையாக இருக்க, திருமணங்கள் பிரச்சினைகள் எவையுமின்றி மிக சிறப்பாக நடந்து முடிந்தன. அடுத்த நாலைந்து மாதங்களிலேயே கடைசி தங்கைக்கும் நல்லதொரு இடம் அமைந்தது. இப்போதைக்கு பதிவுத் திருமணமும் ஒருவருடத்திற்குப் பிறகு சம்பிரதாயபூர்வமாக மணம் முடித்து வைப்பதெனவும் அதுவரை மேற்கொண்டு படிக்கட்டுமென்றும் வசந்தி முடிவு செய்தாள். ஆக, அவள் தலையிலிருந்த சுமைகள் யாவும் இறக்கப்பட்டு விட்டன. இனி அவள் சுதந்திரப் பறவை. தன் இஷ்டப்படி யாரை வேண்டுமானாலும் மணம் முடித்து மனமகிழ்ச்சியுடன் வாழமுடியும்...

சட்டென பஸ் நிற்கவும் அவள் கீழே இறங்கினாள். இன்று கணேஷிடம் தன் மனதிலுள்ளதைச் சொல்லி விடவேண்டும். அவளுக்கும் இப்போது திருமண வயதுதான். இவ்வளவு நாளும் கடமைகளிருந்தமையினால் மனதுக்கு கடிவாளம் போட்டிருந்தாள். தற்பொழுது கஷ்டங்கள் மறைந்துவிட்டன. இனி இஷ்டப்படி சிறகடித்து பறக்க வேண்டியதுதான். அவள் தபாலகத்தை அடைந்தாள். கடந்த இரண்டு மூன்று நாட்களாக கணேஷ் வேலைக்கு வரவில்லை. அவள் உள்ளே நுழைந்தாள். அவள் கண்கள் தன்னிச்சையாக கணேஷைத் தேடின.

அவன் தன் இருக்கையில் அமர்ந்திருந்தான். வசந்தி உள்ளே நுழைவதை அவன் கண்டான். அவன் முகம் சலனமுற்றிருந்தது. வசந்தி தன் இருக்கைக்குச் சென்றாள். பகலுணவு வேளையில்தான் அவனுடன் பேசமுடியும். இன்று சாப்பாட்டுடன் சர்க்கரைப் பொங்கலும் செய்து கொண்டு வந்திருந்தாள். இனிப்பான பொங்கலை அவனுக்குக் கொடுத்தப்பின் தான் சந்தோஷமான அந்த விஷயத்தை அவனிடம் சொல்ல வேண்டும்.

உணவுவேளை வந்தது. அவர்கள் இருவரும் ஒன்றாகவே வழமையாக உணவருந்துவார்கள். கணேஷ் வழமையாக அவளிடம் கலகலப்பாக பேசிக்கொண்டே சாப்பிடுவான். ஆனால் - இன்று அவன் பேசாமல் இருந்தான். வசந்தி புன்னகையுடன் அவனைப் பார்த்தாள்.

"என்ன...ரெண்டு நாளா ஆளையே காணோம். எப்போதும் நிமிஷத்துக்கொரு ஜோக் அடிப்பீங்க. இப்போ ரொம்ப அமைதியா இருக்கீங்க...?"

அவன் பேசாமல் இருந்தான்.

"உங்கக் கிட்ட மகிழ்ச்சியான விஷயமொன்று பேசலாம்னு நினைக்கிறேன்..."

அவன் - வசந்தியை பரிதாபமாகப் பார்த்தான்.

இப்போதைக்கு நீங்க எதை சொன்னாலும் அது என்னை சந்தோஷப்படுத்தப் போறதில்லை...

என்ன கணேஷ்...என்ன நடந்திச்சி...ஏன் இப்படி விரக்தியா பேசுறீங்க...?

இது விரக்தியில்ல...என் விதி...நீங்க உங்க கடமைகளையெல்லாம் முடிச்சிட்டு நிம்மதி பெருமூச்சு விட்டுக்கிட்டிருக்கீங்க. ஆனா என்னோட பிரச்சினைகள் இனி எப்போ முடியும்னு பெருமூச்சு விட்டுக்கிட்டிருக்கேன் நான். மூணு நாளைக்கு முன்னால எங்கப்பா திடீர்னு மயங்கி விழுந்துட்டாரு. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனோம். பக்கவாதம் வந்திடுச்சி. பேச ஏலாது. நடக்க ஏலாது. கட்டில்லயேதான் எல்லாமும். இப்போ எல்லா சுமையும் என் தலையில் விழுந்திடுச்சி.

சிட்டுக்குருவியா சிறகடிச்சி பறந்துக்கிட்டிருந்த நான், இப்போ சிறகொடிஞ்ச பறவையாயிட்டேன். என்னோட கடமைகளெல்லாம் முடியிறவரைக்கும் இந்த மனசுல காதல், கல்யாணத்துக்கெல்லாம் இடமேயில்லை. ஆமா நீங்க என்னவோ சந்தோஷமான விஷயம் சொல்லுறதா சொன்னீங்களே அதையாவது சொல்லுங்க...சந்தோஷமாகக் கேட்போம்...

கணேஷ் - பேசி முடித்துவிட்டு வசந்தியைப் பார்க்க, அவள் மனதிலுள்ளதை அவனிடம் சொல்லமுடியாமல் தவித்தாள். பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறினாள். அவனுடைய கடமைகள் எல்லாம் எப்போது முடியுமென்று சொல்ல முடியாது. அதுவரை அவனுக்காக காத்திருப்பதா...அல்லது காலத்தை வீணாக்காமல் வேறு யாருக்காவது கழுத்தை நீட்டுவதா...முடியாது - அவள் மனதில் ஓவியமாக பதிந்து விட்ட அவன் உருவத்தை யாராலுமே அழிக்க முடியாது. அதே சமயம் - கடமைக்காக தன் காதலியையே தள்ளிவைக்க கணேஷ் முடிவு செய்துவிட்டான். அவர்களைப் பொருத்தவரை காதலுக்கும் அவர்களுக்கும் அதிஷ்டமில்லை, அதற்கு நேரமும் வரவில்லை.

*(யாவும் கற்பனை)*

## இவ்வாரச் சிறு கதைகள்

# உன்னைத் தேடி

**சவீதா** நேரத்தைப் பார்த்தாள். காலை 10.30 கடந்திருந்தது. எப்படியும் 10.30 மணிக்கு முன்னரே தபால்காரன் வந்துவிடுவான் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் இன்று இன்னமும் வரவில்லையே. "அவன் தாமதமாகி வருவதோடில்லாமல் என்னையும் சங்கடப்படுத்துகிறானே". தனக்குள்ளே அவனை திட்டினாள். மேலும் சில நிமிடங்கள் வெளிவாயிலில் அவனுக்காகவே காத்திருந்தாள். ம்ஹு...ம் அவன் வருவதாக இல்லை. இதற்கு மேலும் இங்கு நின்றால் அவளது ஆங்கில வகுப்புக்கான நேரம் கடந்துவிடும் என்பதை உணர்ந்தவள், வாயிலை விட்டு வெளியேறி மெதுமெதுவாக நடக்கத் தொடங்கினாள்.

"வகுப்பிற்குப் போய்ச் சேருமுன்பு எதிரிலேயாவது அவன் வந்துவிடமாட்டானா?" என்று மனதுக்குள் ஒரு நப்பாசை. வழியில் அவனோ வரவே இல்லை. ஏமாற்றத்துடன் வகுப்புக்குள் செல்ல முனைந்தாள். சைக்கிள் மணி ஓசையுடன் கூடவே 'சவீதா' என்ற அழைப்பும் அவளை பின்புறம் திரும்ப வைத்தன. திரும்பியவள் முன்னே கையில் கடிதத்தை நீட்டியவாறு இருந்த தபால்காரனைக் கண்டு அகமகிழ்ந்து போனாள்.

"இந்தாம்மா சவீதா உனக்கு ஒரு லெட்டர் வந்திருக்கு". என்று கூறியவாறு கடிதத்தைக் கொடுத்தான். மகிழ்ச்சியுடன் வாங்கியவளுக்கு அதை வாசிக்கக் கிடைக்கவில்லை. அதற்குள் பாடத்திற்கு ஆசிரியர் வந்து விட்டார்.

பாதி நினைவு கடித்திலும் மீதி எண்ணம் பாடத்திலுமாக அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தாள். இக்கடித்தில் சுரேஷ் என்ன எழுதியிருப்பான் என்ற சிந்தனை அவளை இம்சைப்படுத்தியது. ஒருவாறு பாட இடைவேளையும் வந்தது.

'அப்பாடா' என்றிருந்தது அவளுக்கு. தனது புத்தகத்தினுள் அதுவரை மறைத்து வைத்திருந்த கடிதத்தைப் பிரித்தாள்.

"ஹலோ சவீதா...குட்மோர்னிங்" என்று கூறியவாறே அவ்விடம் வந்தான் குமார். சமயம் பார்த்து வந்துவிடுவான். இவனுக்கு வேற வேலையே இல்லையா...? அவனை தனக்குள் திட்டித் தீர்த்தாள். அவள் (மௌனமாகவே இருந்ததால்) முகத்துக்கு முன்னால் தனது கையை லேசாக ஆட்டியபடி குட்...மோர்னிங்...என்றான் மறுபடியும். ம்...குட் மோர்னிங் ஏதோ ஒப்புதலுக்காக பதிலைச் சொல்லி வைத்தாள். கையில் கடிதத்தைக் கண்டபிறகாவது அப்பால் சென்றுவிடுவான் என்று எண்ணியவளுக்கு, அவனோ அவள் எதிரில் உட்கார்ந்து கொண்டுவிட்டதைப் பார்த்ததும் எரிச்சல் எரிச்சலாக வந்தது.

சவீதா - சுமாரான நிறம் என்றாலும் அவளது வதனம் வசீகரமானது. அளவான உயரமும் மெலிந்த தோற்றமுமாய் அழகாகவே இருந்தாள். அவளது பெற்றோருக்கு அவள் மட்டுமே பெண்பிள்ளை என்பதால், அவளுக்குச் செல்லமும் சுதந்திரமும் அதிகமாகவே கிடைத்தது. அவளது விருப்பப்படியே கலைப்பிரிவில் தனது உயர்தரக் கல்வியை தொடர்ந்தவள், திறமையான பெறுபேற்றுடன் பல்கலைக்கழகத்துக்கும் தெரிவாகினாள். அந்தக் காலம் வரை வீட்டில் இருப்பதைவிட எதையாவது படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் ஆங்கில வகுப்புக்குச் சென்று கொண்டிருக்கிறாள்.

சுரேஷ் அவளின் பேனா நண்பன். பத்திரிகையிலும் அவள் முகவரி பிரசுரமாகியிருக்கவில்லை. எப்படியோ அவளது முகவரியைக் கண்டுபிடித்து அவன்தான் முதலில் அவளுக்குக் கடிதம் அனுப்பினான்.

ஏதோ ஒரு ஆர்வத்தில் சவீதாவும் பதில் எழுதினாள். அதற்கு அவனும் பதில் எழுத...இப்படியே கடந்த அவர்களது நட்பை...காதலுறவாக மாற்றியதும் அவன்தான். நேரடியாக இதுவரை அவர்கள் சந்தித்துக் கொண்டதில்லை. ஆனபோதும் அவனது காதலை அவளும் ஏற்றுக்கொண்டாள். அதிலிருந்தே அவனை நேரடியாக காணவேண்டும் என்ற ஆர்வம் அவளுக்கு மேலும் அதிகரித்தது. இதை அவனிடமும் ஓரிருமுறை கடிதம் மூலம் தெரிவித்தாள். அவனும் அதை விரும்பினான். தானே அவளைத் தேடிவருவதாகக் கூறியிருந்தான். தான் வரும் நாளை இந்தக் கடிதத்திலே குறிப்பிடுவதாக ஏற்கனவே கூறியிருந்தான். எதிரே குமார் இருப்பதால் கடிதத்தைப் பிரித்து வாசிக்க முடியவில்லை என்ற ஆதங்கத்துடன் இருந்தாள். மறுபடியும் அவனே பேசினான். மறுபடியும் கேக்குறேன்னு தப்பா எடுத்துக்காதீங்க சவீதா. என்னுடைய காதலை நீங்க ஏத்துக்காததுக்குக் காரணத்தையாவது நான் அறிந்து கொள்ளலாமா? ப்ளீஸ்...கெஞ்சினான். இதற்கு மேலும் மறைக்க விரும்பாத அவள் அவனது முகத்தை நேரடியாக நோக்கினாள்.

இவனும் கிட்டத்திட்ட ஒரு வருடமாகவே என் பின்னால் முன்பு நண்பனாக, இன்று காதலனாகச் சுற்றுகிறான். பாவம்தான்...இருப்பினும் என்ன


–செல்வி நஸீஹா சம்சபாத், ஏத்தாலை,

செய்வது...என்று எண்ணியவள், உங்க விருப்பத்தை ஏத்துக்காததுக்கு காரணம் இருக்கு குமார். நான் ஏற்கனவே சுரேஷ் என்கிற ஒருத்தரை லவ் பண்றேன் என்றாள். அதைக்கேட்ட அவனது முகம் மலர்ச்சியடைந்தது. சவீதாவோ புரியாமல் அவனை பார்த்தாள்.

என்னங்க அப்படி பார்க்கிறீங்க...நான் சந்தோசப்பட காரணம் உங்க முடிவுதான். இதுவரைக்கும் உங்க மனசுல என்ன இருக்குதுன்னே தெரியாம தவிச்சேன். இப்போதான் முடிவை தெளிவாக சொல்லீட்டீங்களே. அதுதான் இனியென்ன என் வழியில் நான் போக வேண்டியதுதான்...அதுசரி இந்த 'லெட்டர்...நிதானமாகக் கேட்டான். அவள் சுரேஷைப்பற்றி முழுவதுமாக கூறினாள். பின்னர் கடிதத்தை வாசித்தாள். அதில் நாளைய தினம் அவளைப் பார்க்க வகுப்பிற்கே வருவதாக எழுதியிருந்தான்.

உங்களை 'டிஸ்டர்ப்' பண்ணியதுக்கு மன்னிச்சுடுங்க. பட்...தொடர்ந்து உங்கள் உறவு வேணும். நட்பாகவாவது என்றான் குமார்...

மறுநாள் உதயமானது. வகுப்பு முடிந்து அனைவரும் கலைந்து சென்றனர். வகுப்பு முடியுமுன்பே வருவதாக கூறியவன் இன்னும் வந்தபாடில்லை. யோசித்த வண்ணமே நின்றுகொண்டிருந்தாள்.

அவன் எப்படியிருப்பானோ கறுப்பா...சிவப்பா..., ஒல்லியா, குண்டா...அவள் மனம்...தீவிர யோசனையிலிருந்தது.

"சவீதா...இதுக்கு மேலயும் உங்க லவ்வர் வருவாருன்னு நினைக்கிறீங்களா..."குமார் கேட்டான்.

ஆமா...கண்டிப்பா வரணும்...அவள் கலவரத்துடன் காணப்பட்டாள்.

சவீதா ஐ ஆம் சொரி...அவர் இனியும் வரமாட்டார். அதை எப்படி நீங்க சொல்வீங்க...புதிராக இருந்தது அவளுக்கு.

உங்க சுரேஷ் உங்க முன்னாடியேதான் நிற்கிறானே...

ஒரு கணம் திகைத்துப் போனவளாக, குமார்...நீங்க...

ஆமா சவீதா...நான் இங்க கிளாஸ் வந்ததிலிருந்தே உங்களை நேசித்தேன். நேரடியாகக் கேட்டால் எங்கே என்னை ஏற்க மாட்டீங்களோன்னுதான் பேனா நண்பனாக அறிமுகமானேன். இப்போ அதுதான் ஜெயிச்சிருக்கு. மறுபடியும் வெரிசொரி... அவளோ குழப்பமும் மகிழ்ச்சியும் ஒன்று சேர நான்தான் சொரி சொல்ல வேணும் உங்களை இத்தனை நாளும் கஷ்டப்படுத்தினதுக்கு என்றாள் குனிந்தபடி...மகிழ்சியுடன் அவ்விடத்தை விட்டு வெளியேறியது சவீதா - சுரேஷ்குமார் என்ற அந்தக் காதல் ஜோடி.

*(யாவும் கற்பனை)*

இலக்கி நயம்

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

## குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**வ**லிமையுள்ளவன் செய்யுந் தீமைகளையும் வாழ்த்துகின்ற இன்றையச் சமூகத்தில் நலிந்தவன் செய்யும் நன்மைகள் கூட தீமையைத் தருவனவாக அமைந்துவிடுகின்றன என்றால், இதற்குக் காரணமாயிருப்பது மக்களிடையில் சுயநலம் சார்ந்த எதிர்பார்புகளேயாகும். அதாவது ஒருவருக்கு உபகாரம் ஒன்றைச் செய்யும் பொழுது, அந்த உபகாரத்தின் மூலம் தமக்கு ஏதாவது நன்மை கிட்டுமாயின், அதனை எதிர்பார்த்துச் செய்பவையாக இருக்கும். உண்டு களைத்திருப்பவருக்குப் பாயாசம் கொடுப்பதுபோல, ஆனால் பட்டினி கிடப்பனுக்கு பருக்கையும் கிடைக்காது. இத்தகைய ஓர் சமூகத்தில் வளரவேண்டிய நெறிகள் பற்றி வள்ளுவப் பெருந்தகை கூறுவது என்ன?


**"உளபோல் முகத்தவன் செய்யும் அளவினாற்**
**கண்ணோட்டம் இல்லாத கண்"**

*குறள் - 574.*

அளவறிந்து கண்ணோட்டம் செய்யாத கண்ணானது, முகத்தில் உள்ளது போலவே இருப்பினும், அதனைப் பெற்றவருக்கு எவ்வித நன்மையுமே செய்யாது.

## ஒன்றிய இதயங்கள்!

**"வேண்டாம்** அங்கயற்கண்ணி. வாதிடுவதால் ஏற்படும் விபரீதம் வாழ்வையே அழித்துவிடும் என்பதற்கு கோவலன், மாதவியின் வரலாறே போதுமானது. அது நமக்கும் வரவேண்டாம்" என்று கீர்த்திவர்மன் கூறியதும், "நான் மட்டும் வேண்டும் என்றா நினைக்கிறேன்?" என்றாள் அங்கயற்கண்ணி. மனதில் எத்தனையோ



வருங்காலக் கனவுகளைச் சுமந்து கொண்டிருக்கும் இதயங்களின் சில விட்டுக் கொடுப்புக்களும் தேவைதான் என்ற உணர்வு இந்த இருவரிடையிலும்

தருவது
கற்பகன்

குறைவாகக் காணப்பட்டபோதிலும், உள்ளூர அன்பிணைப்பு மேலோங்கி நின்றது. அது ஊடலாக மாறுவதிலும் ஓர் இன்பம் போலிருந்தது.

அங்கயற்கண்ணியின் ஆழமான அன்பு அவனின் வீரத்தை மங்கச் செய்துவிடுமோ? என்று அஞ்சினான் கீர்த்திவர்மன்.

இருவருக்குமிடையிலான மௌனத்தை நீடிக்க விரும்பாதவள் போல, "ஏன் மௌனமாகிவிட்டீர்கள்?" என்று அங்கயற்கண்ணி கேட்டதும், அவள் முகத்தைத் திரும்பிப் பார்த்தான் கீர்த்திவர்மன். "ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள். நீங்கள் எதையோ என்னிடம் மறைக்கப் பார்க்கிறீர்கள்" என்றவளின் முகத்தில் ஏற்பட்ட கலவரம், கீர்த்திவர்மனுக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியது. என்ன பதில் கூறுவது? என்று யோசித்தான். ஆனாலும், நான் கூறப்போகும் பதிலால் மேலும் அவள் துன்புறாமலிருக்க வேண்டுமே! என்ற எண்ணமும் அவளைத் திண்டாட்டத்தில் ஆழ்த்தியது. இருந்தாலும் ஓரளவில் மனதைத் திடப்படுத்திக் கொண்டு,

"வெறும் வார்த்தைகளால் மட்டும் மனதிலுள்ளவைகளை மறைத்து விட முடியாது பெண்ணே!" என்று கீர்த்திவர்மன் கூறியதும், "மறைப்பவர் நீங்கள்தானே!" என்றாள் அங்கயற்கண்ணி. "என்ன சொல்கிறாய் அங்கயற்கண்ணி? நான் எதை மறைத்தேன்? நீ என் மீது வைத்திருக்கும் மாசற்ற அன்பை நான் அறிவேன்". என்று கீர்த்திவர்மன் கூறியதும், "தெரிந்து கொண்டும் தெரியாதவர்போல் நாடகம் ஆடுகிறீர்களே? என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லையா?" என்று அவள் கேட்டபோது, அவள் கண்கள் நீரைக் கொட்டிவிடும் போலிருந்தது. இதைக் கவனித்த கீர்த்திவர்மன் "வீணாக ஏன் மனதை அலட்டிக் கொள்கிறாய்? உன்னைப் பிடிக்காமலா இத்தனையும்" என்றவன், அவள் கரத்தைப் பற்றிக் கொண்டு, "நான் ஒன்று கேட்பேன். நீ அழுது விட மாட்டாயே?" என்று குழைந்தான். "ஏன் என்னை அழவைப்பதில் உங்களுக்கு அத்தனை சுகமா?" என்றாள் பதிலுக்கு. "இல்லை அங்கயற்கண்ணி, உன் விழிகளிலிருந்து விழுகின்ற ஒவ்வொரு நீர்த்துளியும், என் இதயத்தைச் சுட்டெரிக்கும் செந்தணல்களாகவே இருக்கும். அதை நீ அறிந்திருக்க முடியாது. ஆனால்..."

"என்ன ஆனால்.."

"என் வாழ்க்கையில் இதுவரை நான் கொண்டிருந்த இலட்சியப் பாதை அடைபட்டு விடுமோ என்று தான் அஞ்சுகின்றேன்" என்றான் கீர்த்திவர்மன்.

அந்த வார்த்தையோடு அவன் மனதிலுள்ள துன்ப உணர்வும் நெடுமூச்சாக வெளிப்பட்டது.

இதைக் கேட்டதும் அங்கயற்கண்ணியின் சிரிப்பொலி அந்த அறை முழுவதும் ஆயிரம் மணிகள் அசைந்து நின்றது போன்ற ஒலி எழுந்து, அடங்குவதற்குப் பல வினாடிகள் நீடித்திருந்தன. கீர்த்திவர்மன் எதுவும் புரியாமல் தவித்தான். ஏன் இப்படிச் சிரிக்கிறாள்? என்ற கேள்வி அவனைத் துருவியது.

"ஏன் சிரிக்கிறாய் அங்கயற்கண்ணி? நான் கூறியது..." என்று கீர்த்திவர்மன் எதையோ சொல்லத் தொடங்கு முன்பே, அங்கயற்கண்ணி இடைமறித்தாள்.

"என்னால் உங்கள் இலட்சியப் பாதை தடைப்பட்டுவிடும் என்று நினைக்கிறீர்கள். அப்படித்தானே? அங்குதான் நீங்கள் தப்பாகப் புரிந்து விட்டீர்கள்" என்று அவள் கூறியதும், அவளை வியப்போடு பார்த்தான் கீர்த்திவர்மன். தொடர்ந்தாள் அவள்.

"நீங்கள் நினைப்பதுபோல் நான் கோழையல்ல. ஒரு வீரனின் மனைவியானவள். அவன் வீரத்தின் செழுமையை உலகறியச் செய்வதையே விரும்பி நிற்பாள். அவனை அன்பு வலைக்குள் கட்டுப்படுத்தி அடிமைத்தனத்துக்குள் அவனை ஆளாக்க மாட்டாள். மனிதகுலத்தில் மானம், காதல் இரண்டும் இரு கண்போன்றவை. என்பதை நான் அறியாதவளல்லவே! உங்கள் இலட்சியப் பணிதானே என்னை உங்களிடம் சேர்த்தது. இப்படியான சூழலில் தொடங்கியதுதானே எங்கள் காதல். நீங்கள் தான் வீணாகச் சஞ்சலப்படுகிறீர்கள்" என்று மூச்சிரைக்கப் பேசி முடித்தாள்.

கண் கொட்டாது அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த கீர்த்திவர்மன், "அங்கயற்கண்ணி!"

"என்னவாம்?"

"என்னை மன்னிப்பாயா?"

"எதுக்காகவோ?"

"உன்னை வீணாகக் கண்கலங்க வைத்து விட்டேனே அதற்காக"

"அப்படியா? அதற்கு மன்னிப்பே கிடையாதாம்."

"தண்டனையாவது நிறைவேற்றலாமே!" என்று கீர்த்திவர்மன் அவள் முன் தாழிட்டான்.

"ஐயையோ! என்ன இது?" என்றவாறு அவன் முன் அவளும் தாளிட்ட வண்ணம் குனிந்து கொண்டிருந்த அவன் முகத்தை தன் இரு கைகளாலும் ஏந்திய வண்ணம் "உங்களுக்குத் தண்டனை தராமல் விடக்கூடாது" என்றவள், அவன் உதட்டில் முத்தமிட்டாள். அந்த அன்புப் பிணைப்பில் காலங்கடந்து கொண்டிருப்பதைப் பற்றி அவர்கள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

***"கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்டகைப்***
***பேதைக் காமர்த்தன கண்"***

குறள் - 1084.

சிந்தியா
பதில்கள்

**✉ மகேஸ்வரன் எம். பி. புலிகளுக்கு விமான உதிரிப்பாகம் கொண்டு வந்ததாகக் கூறப்படுகிறதே உண்மையா?**

***- வி. செல்வி, கந்தளாய்.***

அவர் கொள்வனவு செய்திருக்கும் கப்பல் முன்னர் விமான உதிரிப்பாகங்களை ஏற்றியிறக் கியது என்கிறார். என்றாலும் சிறந்த வியாபாரி என்றளவில் கப்பலுக்குள் மேலதிகமாக ஒரு இரும்புத் துண்டு கூட இருந்ததைக் காணாமலா இருந்திருப் பார் என்ற சந்தேகங்கள் பரவலாக இருக்கின்றன. புலிகளின் அச்சுறுத்தல் இருந்தும் யாழ்ப்பாணத்தில் வியாபாரம் செய்வதற்காகத் துணிந்திருக்கிறார் என்றால், அவர்களுக்கு ஏதாவது அனுகூலம் இவ ரால் இருக்க வேண்டும் என்றும் சந்தேகங்கள் எழத்தான் செய்கின்றது. விசாரணைகள் தீர்மானிக் கட்டும். நமக்கு எதுக்குப் பொல்லாப்பு!

இது நாள்வரை கிழக்கு எந்தத் தமிழரின் கையில் இருந்தது இப்போது பறிபோவதற்கு. "யானை தன் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டது போல்" வடக்கு - கிழக்கு தாயகம், தமிழீழம், என்று வெறும் வாய்ச் சவடால் பேசி, நமது பூர்வீக நிலங்கள் சுவீகரிக்கப்படுவதை எம்மால் தடுக்க முடியவில்லையே. குறைந்த பட்சம் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்படுத் தித்தந்த வடக்கு - கிழக்கு இணைப்பைக்கூட நம்மால் பாதுகாக்க முடியவில்லையே, இப்போது மட்டும் உணர்ச்சியோடு ஏன் வெட்டிப்பேச்சு அருந்தவராஜா? இனி அலுவல்களைப் பார்த்துக் கொள்ளத் திருமலைக்கு வந்து அலையத் தேவை யில்லை. வவுனியாவிலேயே பார்த்துக் கொள் ளலாம் இதுதான் இன்று ஒவ்வொருவரினதும் நிலையும்.

**✉ புதிய அமைச்சரவை மாற்றங்கள் நாட் டில் ஏத்தகைய மாற்றங்களைக் கொண்டு வரும்?**

***- மா. மனோகரன், தெல்தெனியா.***

தலைமையுடன் சேர்ந்து தாவுதல், தலை மையை தவிர்த்துத் தாவுதல் என்று ஏற்கனவே பார்த்த தாவல்களும் ஒரு சில புதிய தாவல் களுமாக வால் முளைச்சதே வாயடைத்துப் போகு மளவுக்கு தாவல்கள் நடக்கலாம்.

'அரசியலில் நிரந்தர எதிரியுமில்லை. நிரந்தர நண்பனுமில்லை' என்பது எத்தனை உயரிய சத்திய வசனம்!

**✉ பழைய படங்களைப் புதிதாய் எடுத்தால் அதில் நடிக்க தமக்கு விருப்பம் என்று தற் போதைய கதாநாயகர்கள் கூறுகிறார்கள். அப் படி ஒரு வாய்ப்பு சிந்தியாவுக்குக் கிடைத்தால் என்ன படத்தைத் தெரிவு செய்வீர்கள்?**

***- ச. மீனலோஜினி, பிலிமத்தலாவை.***

சில ஊடகவியலாளர்கள் சிறந்த நடிகர் களாக இருக்கிறார்கள் என்பதற்காக, ஒரு அரசி யல்வாதியிடம் கேட்க வேண்டிய இந்தக் கேள் வியை என்னிடம் கேட்பது முறையோ? நடிப்பு ஒரு கலை. அதற்கென்று ஒரு முறையான பயிற்சி வேண்டும்.

**✉ பொலித்தீன் பாவனைத் தடைச் சட்டம் அறிவிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்ததாகத் தெரியவில்லையே?**

***-எம்.எம்.சனூஸ், தெமட்டகொடை.***

பொதுவாகச் சட்டங்கள் வெறுமெனவே அறிவிப்புச் சட்டங்கள்தானோ என்று கூட நானும் நினைப்பதுண்டு. பொது இடத்தில் மது பாவனை, புகைபிடித்தல் தடை கூட ஒரு சட்டம்தான். ஆனால் அதுவும் நடக்கிறது. சொப்பிங் பை நமது நுகர்வில் தவிர்க்க முடியாதது போலாகிவிட்டது. நமது சட்டங்களை விடவும் என்று நினைக்கத் தோன்றுகிறது.







**✉ சிந்தியா! தைப்பொங்கல் எப்படிப் போனது?**

***- த. தேவகி, கண்டி.***

தற்போதைய சந்தோஷங்கள் எல்லாமே சம் பிரதாயங்களுக்கு என்றாகிவிட்டது. ஹஜ், கிறிஸ் மஸ் எப்படிப் போனதோ அதுபோல தைப்பொங்க லும் வந்த வழிதெரியாமல் போய்விட்டது.

**✉ சிந்தியா! கிழக்கு மாகாணம் தமிழர்களி டமிருந்து பறிபோவதாக நினைக்கிறேன். நீர் என்ன நினைக்கிறீர்?**

***- அருந்தவராஜா, வவுனியா.***

**✉ 2007ஆம் ஆண்டு உலகக் கோப் பையை இலங்கை கிரிக்கெட் அணி கைப்பற்றுமா?**

***-எஸ்.மதன், நுவரெலியா.***

அப்படி ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்துமளவுக்கு இலங்கை அணி புதுத் தெம்புடன் இருக்கிறது என்பது உண்மை தான். ஆனால், ஆஸி, பாகிஸ்தான், நியூசிலாந்து, மே.இந்தியா, தென் ஆபிரிக்கா அணிகள் சவாலாக இருக்கும் என்று கருதப்படுகிறது. எனினும் வெற்றிக்கு வாழ்த்து வோம். அதுசரி மதன் உங்கள் பக்கம் வெள்ளப் பெருக்கு, மண் சரிவுகள் எந்தளவில் இருக்கின்றன. மீட்புப் பணிகள், நிவாரணம் வழங்கல் சீராக நடைபெறுகிறதா?

**✉ சிந்தியா எந்தெந்த நாடுகள் உலகில் பிரதானமாக எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடு களாக இருக்கின்றன?**

***- இரா. காண்டீபன், வத்தளை.***

சவூதி அரேபியா
ரஷ்யா
ஈராக்
ஈரான்
குவைட்
ஐ. அமெரிக்க இராச்சியம்
வெனிசுலா
மெக்ஸிகோ
லிபியா
சீனா
ஆகிய நாடுகள் தான்.

**✉ ஸ்கொட்லாண்ட் யார்ட் பொலிஸார் வந்து போனார்களே? என்ன முன்னேற்றம் உண்டானது?**

***- பா. வினோத், தலைமன்னார்.***

சர்வதேசப் பொலிஸார் தேடும் குற்றவாளி களையே இன்னும் சட்டத்தின் முன்னால் கொண்டு வர முடியவில்லையே, ஸ்கொட்லண்ட் யார்ட் எந்த மூலைக்கு! அவர்கள் கொண்டுபோன தடயப் பொருட் கள் தொடர்பான அறிக்கையாவது பிரயோஜனப் படுகிறதா பார்ப்போம்!

**✉ "போக்கிரி", "ஆழ்வார்" உமது தீர்ப்பு?**

***- வை. சதீஸ், சிலாபம்.***

நீங்கள் கேட்காவிட்டாலும் நான் சொல்ல வேண்டிய கட்டாயம் உண்டு. ஏன் என்றால் போன வாரம் இந்தக் கேள்வியின் விடைக்காக வாசகர் மதன் இன்னும் தொடர்பில் இருக்கிறார்.

கில்லி + வசீகரா = போக்கிரி
தீனா + வில்லன் = ஆழ்வார்
"போக்கிரி" - ஜோக்கிரி.
"ஆழ்வார்" - சீரியஸ்.

**✉ சிந்தியா! புதிய அமைச்சரவையில் உமக்கு ஒரு அமைச்சர் பதவி கிடைத்தால், ஏற்றுக் கொள்வீரா?**

***- எஸ். ஜெயக்குமார், வத்துகாமம்.***

அரசின் சகல நிர்வாகங்களையும் கண் காணிக்கும் அதிகாரம் நிறைந்த புதிய அமைச்சு ஒன்றை நிறுவி அதன் பணியாளர்களாக திறமை யான இளைஞர், யுவதிகளையும் இணைத்துக் கொள்ளவும் வசதியாக இருக்கக்கூடிய அமைச்சுப் பதவி என்றால் ஏற்றுக் கொள்ளலாம். அது நடக் குமா? நடந்தால் நாட்டுக்கு நல்லது. நடக்காத விஷயங்களுக்காக ஏன் ஜெயக்குமார் நேரத்தை விரையமாக்க வேண்டும்!

## ஆஷஸில் ஆறு போட்டி: ஆஸி. விருப்பம்

வரும் 2010 - 2011ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடக்க உள்ள ஆஷஸ் தொடரில் ஆறு போட்டிகள் நடத்த அந்நாட்டு கிரிக்கெட் போர்ட் விருப்பம் தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதும் வரலாற்றுச் சிறப்பு மிகக் ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர் 2 வருடங்களுக்கு ஒரு முறை நடக்கிறது. பொதுவாக இத்தொடரில் மொத்தம் ஐந்து போட்டிகள் இடம்பெறும். சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் நடந்து முடிந்த தொடரில், இங்கிலாந்து 0 - 5 என்ற கணக்கில் தோல்வி அடைந்தது. அடுத்த ஆஷஸ் தொடர் 2008 - 2009ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடக்க உள்ளது. இந்நிலையில் வரும் 2010 - 2011ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடக்கும் ஆஷஸ் தொடரில் ஆறு போட்டிகளை நடத்த அந்நாட்டு கிரிக்கெட் போர்ட் திட்டமிட்டுள்ளது. இது குறித்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் போர்டின் பொதுக் குழு மேனேஜர் பீட்டர் யெங் கூறுகையில், "அடுத்த முறை ஆஸ்திரேலியாவில் நடக்கும் ஆஷஸ் தொடரில் ஆறு போட்டிகளை நடத்த ஆலோசனை செய்து வருகிறோம். இந்த ஆறாவது போட்டி ஹோபார்ட்டில் நடைபெறும்" என்றார்.





ஆஷஸ் டெஸ்ட் தொடரில் இதுவரை 2 முதல் 6 போட்டிகள் வரை முன்னதாகவே நடத்தப்பட்டுள்ளன. பெரும்பாலும் ஐந்து போட்டிகளே ஆஷஸ் தொடரில் அதிகமாக இடம் பெற்றுள்ளன. கடைசியாக 1997 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற தொடரில் ஆறு போட்டிகள் நடத்தப்பட்டன.

## உலகக் கிண்ண போட்டிக்கான நியூசிலாந்து உத்தேச அணி அறிவிப்பு

மேற்கிந்தியத் தீவுகளில் வரும் மார்ச் மாதம் நடைபெறும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் நியூஸிலாந்து உத்தேச அணியில் வேகப் பந்து வீச்சாளர் டேர் டேரில் ட:.பி இடம்பெற்றுள்ளார். காயம் காரணமாக கடந்த 2 ஆண்டுகளாக இவர் அணியில் இடம் பெறாமல் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

30 வீரர்கள் பட்டியலில் 3 புதுமுக வீரர்களும் பீற்றர் மெக்லாசன், அணியின் தற்போதைய கீப்பர் பிரெண்டன் மெக்கலமின் சகோதரர் நதன் மெக்கலம்,சகலதுறை வீரர் மார்க் ஆர்ச்சர்ட் இடம் பிடித்துள்ளார்.

நடைபெற்று வரும் முக்கோணத் தொடரில் பங்கேற்ற அனைவரும் உத்தேச அணியில் உள்ளனர்.

வீரர்கள் விபரம்: ஆந்த்ரே அடம்ஸ், அஸ்லே, பொண்ட், பிளமிங், பிராங்கிளின், புல்டன்,கிலெஸ்பி, கிறிஸ் ஹரிஸ், போல் ஹிட்ச்காக்,காரெத் ஹாப்கின்ஸ், ஜேமி கோ, ஜேம்ஸ் மாட்டின், கிறிஸ் மார்ட்டின் மைக்கல் மாசன், கைல் மில்ஸ், பிரென்டன் மெக்கலம், நதன் மெக்கலம், பீற்றர் மெக்லாசன், மெக்மிலன், இயான் ஒப்ரியன், ஓரம், மார்க் ஆர்ச்சர்ட், ஜீதன் படேல், சின்கிளயர், ஸ்கொட் ஸ்ரைரிஸ், ராஸ் டெயிலர், டரல் டபி, வெற்றொரி, லூவின்சன்ட் என 15 வீரர்களைக் கொண்ட அணி பெப்ரவரி 13ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## வீரர்களுக்கு ஊக்கமருந்து சோதனை!

உலகக்கோப்பை தொடரில் பங்கேற்கும் பாகிஸ்தான் வீரர்களுக்கு ஊக்கமருந்து சோதனை நடத்தப் போவதாக அந்நாட்டு கிரிக்கெட் போர்ட் தெரிவித்துள்ளது.

எதிர் வரும் மார்ச்சில் துவங்கும் உலகக் கோப்பைத் தொடருக்கான 30 பேர் கொண்ட பாகிஸ்தான் உத்தேச அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இதில் இடம்பெற்றுள்ள வீரர்களுக்கு விரைவில் ஊக்கமருந்து பரிசோதனை நடத்தப்படும் எனத் தெரிகிறது. இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் போர்ட் (பி.சி.பி.) நிர்வாகி ஒருவர் கூறியதாவது: உலகக் கோப்பை தொடரின் போது சிக்கல் எதுவும் வராமல் இருப்பதற்காக இந்த முடிவை மேற்கொள்ள உள்ளோம். இதற்குத் தேவையான மருத்துவ ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறோம். விரைவில் வீரர்களுக்குச் சோதனை நடத்தப்படும். இவை மலேசியாவில் உள்ள ஊக்கமருந்து தடுப்பு மைய பரிசோதனை மையத்திற்கு அனுப்பப்படும். உலகக் கோப்பை தொடரின்போது அக்தர், ஆசிப் மீது ஐ.சி.சி., அல்லது ஊக்கமருந்து தடுப்பு மையம் சோதனை மேற்கொள்ளலாம் என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இதைச் செய்கிறோம் என்று நிர்வாகி தெரிவித்தார்.

## இலங்கை - இந்திய...
04 ஆம் பக்கத் தொடர்ச்சி....

கிழக்கின் பிரிப்புக்கு உத்தரவிட்டிருக்கிறது. ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவுடன் கள்ளக் காதல் கொண்டு, புலிகள் இயக்கம் தேனிலவு அனுபவித்து வந்த காலகட்டத்தில், வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கெதிராகப் புலிகள் செயற்பட்டதை சம்பந்தன் மறந்து விட்டார். வடக்கிலிருந்து முஸ்லிம்களை விரட்டியமை கிழக்கில் முஸ்லிம்களின் சொத்துக்களை அபகரித்தமை போன்ற புலிகளின் நடவடிக்கை முஸ்லிம் மக்களை இணைப்புக்கெதிராக உந்தித் தள்ளவில்லையா? அப்பாவிச் சிங்கள மக்களுக்கெதிராகவும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கெதிராகவும் புலிகள் மேற்கொண்ட அடாவடித்தனங்கள்தான் ஜே.வி.பி., ஜே.எச்.யு போன்ற சிங்களக் கட்சிகளின் வடக்கு கிழக்கு பிரிவினைக் கோஷத்திற்கு தூபமிட்டன என்பதை புலிகளுக்காக கொக்கரிக்கும் சம்பந்தன் ஐயா உணர்ந்து கொள்ள வேண்டும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியது போல், இலங்கை - இந்திய ஒப்பந்தம் வழங்கிய பொன்னான வாய்ப்பை பயன்படுத்தி இருந்திருந்தால் இலங்கை இன்று சுடுகாடாக மாறியிருக்க மாட்டாது. வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தலைநகராக விளங்கிய திருமலை பறிபோய்யிருக்காது. 1987ஆம் ஆண்டுக்குப் பின்னரும் கிழக்கில் இனரீதியான பாராபட்ச முறைகள் தமிழ் பேசும் மக்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்காது. இன்னமும் காலம் பிந்தி விடவில்லை. தமிழீழம் என்பது வெறும் கனவு மட்டுமே என்பதை புலிகள் இயக்கம் உணர்ந்து கொண்டு, பேச்சுவார்தை மேசைக்குத் திரும்ப வேண்டும் முன்னரைப் போன்று ஏனைய தமிழ் அமைப்புகளை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளைக் கைவிட்டு வடக்கு - கிழக்கு இணைப்பைப் பாதுகாப்பதற்காக ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழ் ஏனைய தமிழ் அமைப்புகளுடனும் ஐக்கியப்பட்டுச் செயற்பட முன்வர வேண்டும். அன்று இலங்கை - இந்திய ஒப்பந்தம் வழங்கிய பொன்னான வாய்ப்பை ஜனாதிபதி பிரேமதாசா குழப்பியடித்ததன் பலாபலன்தான் இன்று இருபது வருடங்கள் கழியப் போகும் நிலையிலும் துப்பாக்கி வேட்டுக்கள் அப்பாவி மக்களை வாட்டி கொண்டிருக்கிறது.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 8, கூட்டெண் - 6

8, 17, 26 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டு எண்ணாகிய உயிர் எண் 6 வருமேயானால், இவர்கள் சனி, சுக்கிரன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

பார்ப்பதற்குச் சுமாரான உயரத்துடனுடம், கவர்ச்சியாகவும், சிலர் மிதந்த கண்களுடனும் காட்சியளிப்பர். போக விஷயங்களில் அதிக நாட்டம் கொண்டவராகவும், ஆடம்பரப் பொருட்களைச் சேர்க்கும் ஆர்வமுடையவராகவும் இருப்பர். கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்கள், சோம்பல் இல்லாது உழைத்து வாழ்க்கையில் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை கொண்டவர்.

நல்ல பொருத்தமான எண்களில் பெயர் அமைந்து விடுமேயானால், படிப்படியாக வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவர். இன்னும் சிலர் பணக்காரக் குடும்பத்தில் பிறந்து இளமையில் சகல வசதிகளும் பெற்று வாழ்கின்றனர். ஆனால், பெயர் நன்றாக அமையப் பெறாதவர்கள் போராட்டமான வாழ்க்கையில் சிக்கி பணத்திற்காகவோ மன அமைதிக்காகவோ வழி தேடுகின்றனர்.

இவர்களுக்கு மோட்டார் வாகனங்கள், எலக்ட்ரானிக், எலக்ட்ரிக் தொடர்பான பொருட்கள், ஆடம்பரம் தொடர்பான பொருட்கள், கவிதை, கதை போன்றவற்றிலும் அதிக நாட்டம் உள்ளவராக இருப்பர். தன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் தொழில் செய்பவரா கவும், சிலர் உத்தியோகம் செய்பவர்களாகவும் வாழ்கின்றனர். இவர்களுக்குப் பெயர் பொருத்தமான நல்ல எண்ணில் அமைந்து விட்டால், தான் வகிக்கின்ற உத்தியோகத்திலோ அல்லது தான் செய்கின்ற தொழிலாலோ, உயர்ந்த நிலையை அடைவர். இவர் கள் மனம் பசுமையான இயற்கைக் காட்சிகளையும், பெரிய தொழிற் கூடங்களையும், கடற்கரை ஓரங்களையும், நீர்வீழ்ச்சி களையும், நீர்த்தேக்கங்களையும் கண்டு அமைதி பெறும்.

இவர்களுக்குப் பெயர் பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் நல்ல ஆரோக்கியம், நல்ல மனைவி, நல்ல குழந்தைகள், நிறைந்த செல்வம் ஆகியவற்றைப் பெற்று வாழ்வர். ஆனால் பிறந்த திகதிக்குப் பொருத்தமற்ற பெயர் அமைந்து விட்டால் வீண் குழப்பங்களும், விரையச் செலவுகளும், கோர்ட் வழக்குகளும் வந்து பிரச்சினைக்குள்ளாக நேரிடும். பிறருக்காக ஒரு காரியத்தில் தைரியமாகச் செயற்படும் இவர்கள், தனக்கென்று வரும் போது குழம்பி விடுவர்.

பலருக்கு யோசனை கூறும் அறிவாளியாகவும் இருப்பர். தூரதேசப் பயணங்களில் ஆர்வம் காட்டும் இவர்கள் தான் செய்கின்ற ஒவ்வொரு பயணத்தையும், பயனுள்ளதாகச் செய்வர். ஜோதிடம், சட்டம், சமயம், மருத்துவம், கணிதம், பொறியியல் போன்றவற்றில் இவர்களுக்கு ஆராய்ச்சி இருக்கும். பெயர் ஒழுங்காக அமைந்துவிட்டால் மேற்குறிப்பிட்ட துறைகளில் சிறந்து விளங்குவர்.

இவர்கள் வாகனம் ஓட்டுவதிலும், வாகனத்தை அலங்கா ரமாக வைத்துக் கொள்வதிலும், ஆர்வமுடையவராக இருப்பர். எந்த ஒரு பழக்கத்தைப் பழகினாலும், தனக்குத் தீமையளிக்கும் என்று தெரிந்தவுடன் அதை மறக்கவும் தயாராக இருப்பர். உலக விஷயங்கள் அனைத்தையும் தெரிந்து வைத்திருப்பர். தனிமையில் தன்னுடைய முன்னேற்றத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பர். எப்படியும் வாழ்க்கையில் பொருளாதார நிலையில் உயர்ந்த இடத்தை அடைய வேண்டும் என்பதே இவர்களது இலட்சியம். இந்த எண்ணிக்கையில் பலர் இஞ்சினியர், டாக்டர், வழக்கறிஞர், அரசாங்க உத்தியோகஸ்தர்களாகவும், பெரும் தொழில் அதிபர் களாகவும் இருக்கின்றனர்.

ஆனால் பெயர் நன்றாக அமையப் பெறாதவர்கள் தனது வாய்ப்புகளை எல்லாம் நழுவ விட்டுவிட்டு முன்னேற முடிய வில்லையே என்ற கவலையுடனும் இன்னும் சிலர் குடும்பப் பிரச்சினையுடனும் வாழ்கின்றனர். இவர்கள் பெயரைப் பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக நல்ல எண்ணில் அமைத்துக் கொண்டால் வெற்றி வீரராக நல்ல முன்னேற்றம் பெற்று வாழ லாம்.

***தொழில்*** : இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு இரும்பு, நெருப்பு சம்பந்தமான அனைத்துத் தொழிலும் சிறந்தவையே. மேலும் ஆடம்பர சம்பந்தமான பொருளாலும், கமிஷன் காண்ட் ராக்ட், வாகனம், ஏஜென்சீஸ் போன்ற தொழிலாலும் முன்னேற்றம் பெறுவர்.

***நோய்*** :சனி, சுக்கிரன் போன்ற ஆதிக்கம் கொண்ட இவர் களுக்கு வயிற்றுக் கோளாறு, மூட்டுவலி, இரத்த அழுத்தம், உஷ்ணம் சம்பந்தப்பட்ட நோய், மலச்சிக்கல், தோல்வியாதி போன்றவைகள் வந்து நீங்கலாம்.

***பெயர் அமைக்கும் முறை*** : புதன், சுக்கிரன், சூரியன் போன்ற ஆதிக்கத்திலுள்ள 6, 15, 24, 33, 42, 51, 60, 69 போன்ற எண்களிலும் 5, 14, 23, 32, 41, 50, 59, 77 போன்ற எண்களிலும் 10, 19, 37, 46, 55, 64 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

***பின்பற்ற வேண்டியவை***

யோகமான எண் - 5, 6, 1.

யோகமான திகதிகள் - 5, 14, 23; 6, 15, 24.

யோகமான மோதிரக்கல் - நீலக்கல், மரகதம்.

யோகமான நிறம் - நீலம், மஞ்சள், பச்சை.

ஆகாத திகதி - 3, 12, 21, 30; 8, 17, 26.

ஆகாத நிறம் - கறுப்பு, சிவப்பு.

**குறிப்பு:** 8, 17, 26 போன்ற திகதிகளில் தாங்களாக ஒரு காரியத்தைச் செய்யக்கூடாது. ஆனால் எதிர்பாராத நன்மை அளிக்கவல்லது.

***அடுத்த வாரம் பிறப்பெண் 8, கூட்டெண் 7 பற்றிப் பார்ப்போம்.***


வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

**பண்டாரவளை அதிசிறந்த மலையாள மகா வசிய மாந்திரீகம்..**

ஸ்ரீ மகா பத்திரகாளித் தாயின் அருளைப் பெற்றுள்ள



உங்களுடைய வெற்றி சுகம், சந்தோஷத்துக்கு சேவை செய்வேன் இன்றே அழையுங்கள். 057-2224591-92

**ஷர்மா சுவாமிகள்**

உள்நாட்டு, வெளி நாட்டு அன்பர்களுக்கு சேவை செய்து அருள் அளிப்பார்.

நாம் வாழும் வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். அறிலிருந்து விடுபடுவதே எங்களின் நோக்கம். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலிருந்து விடுப்பட இருதடவை. யோசிக்காமல் என்னை சந்தித்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்பதை உறுதி செய்கிறேன்.

பார்த்துப் பார்த்துக் கொண்டிராதீர்கள் மன நம்பிக்கையோடு செய்து கொள்ளுங்கள்.

**சந்திப்பு**

பண்டாரவளையில்
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 8.00 மாலை 6.00
நெடுஞ்சாலை காரியாலயத்திற்கருகில்
IDL நேர்சிங் ஹோம் மேல் பாதை
ஞாயிறு விடுமுறை கவனிக்கவும்.

வெளிநாட்டவருக்கு விசேட ஏற்பாடுகள்!
தொ. பே. +94-572232441
+94-773227005

இன்றே சுவாமியவர்களைச் சந்தியுங்கள்
தொலைபேசி மூலம் பேசுங்கள். அல்லது முத்திரையுடன் கடித உறையொன்றை அனுப்புங்கள்.

**சகலவிதமான வசிய மாந்திரீகம்**

- வீடு, வியாபார விருத்தி
- விவசாய விருத்தி
- நோய் நொடி சுகப்படுத்தல்
- விட்டுபிரிந்த கணவன் மனைவியர் மீண்டும் ஒன்று சேர.
- தாமதிக்கும் திருமணம் விரைவில் நிறைவேற
- குழந்தைப் பாக்கியம் கிட்ட
- விலைபோகாத காணிகள் விற்பனையாக
- எல்லா பரீட்சைகளிலும் சித்திபெற
- ஜாதகம் பார்ப்பது முதல் சகல ஜோதிட விடயங்கள்
- மண் பரீட்சை செய்தல்
- பிராணிகளை அகற்றுதல்

சகல பரீட்சைகளுக்கு சித்திக்க சரஸ்வதி யந்திரம்.

**ஷர்மா சாமி அவர்கள்**

P.O. Box 2, BANDARAWELA / பண்டாரவளை Regd. No. U/B 99/83
Tel. 077-3227005 057-2224591-92 078-5224681 Fax: 057-2232441
Website : sharmasami.com sribathrakaliamman_temple@yahoo.com

வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

# மிகைல் கொர்பச்சேவ்

**சென்ற** ஆண்டுகளில் நிகழ்ந்த மிக முக்கிய அரசியல் நிகழ்ச்சி, சோவியத் ஒன்றியம் உடைந்து போனதும், பொதுவுடைமை வீழ்ச்சியடைந்ததும் ஆகும். இந்த உலகம் முழுவதையும் விழுங்கிவிடப் போவதாகப் பல்லாண்டுகளாக அச்சுறுத்தி வந்த அந்த மாபெரும் இயக்கம், அதிர்ச்சியூட்டும் வேகத்தில் திடீரென வீழ்ச்சியடைந்தது. இப்போது, ‘வரலாற்றுக் குப்பைக் கூடைக்குள்’ முடங்கிவிடும் நிலைக்கு வந்துள்ளது. இந்த வியப்பூட்டும் வீழ்ச்சியின் இயக்க மையமாகத் தனித்து நிற்கும் ஒரே மனிதர் மிகைல் கொர்பச்சேவ் ஆவார். சோவியத் ஒன்றியத்தின் (USSR)கடைசி ஆறு ஆண்டுகளில் (1985 - 1991)அதன் அரசுத் தலைவராக விளங்கியவர் கொர்பச்சேவ்.

## உலகை வியக்க வைத்தவர்கள்

தெற்கு ரஷ்யாவில் ஸ்டாவ்ரோப்போல் வட்டாரத்திலுள்ள பிரிவோல்னோ என்ற கிராமத்தில் 1931 இல் கொர்பச்சேவ் பிறந்தார். வரலாற்றில் பயங்கர இரத்தக்களறிச் சர்வாதிகாரிகளில் ஒருவரான ஜோசப் ஸ்டாலினின் மிகக் கொடூரமான ஆட்சிக்காலத்தில் அவரது இளமைப்பருவம் அமைந்திருந்தது. கொர்பச்சேவின் சொந்தத் தாத்தா, ஸ்டாலினின் சிறைக்கூடாரங்களில் ஒன்பது ஆண்டுகள் உழன்றார். ரஷ்யா மீது ஜெர்மனி படையெடுத்த சில மாதங்களுக்கு முன்புவரை (1941) அவர் சிறையிலிருந்து விடுதலை பெறவில்லை. கொர்பச்சேவ் மிகவும் சிறுவனாக இருந்தமையினால், அவர் இரண்டாம் உலகப்போரில் பணியாற்றவில்லை. எனினும், அவருடைய தந்தை இராணுவத்தில் பணிபுரிந்தார். அவர் அண்ணன் போர்க்களத்தில் மடிந்தார். பிரிவோல்னோ கிராமம் எட்டு மாத காலம் ஜெர்மனியின் ஆக்கிரமிப்பில் இருந்தது.

ஆனால், இந்த அவலங்கள் எதுவும் கொர்பச்சேவின் முன்னேற்றத்தைத் தாமதப்படுத்தவில்லை. பள்ளியில் மிக உயர்ந்த தகுதிகளுடன் தேர்ச்சி பெற்றார். தம் 15 ஆம் வயதில் ‘கோம்சோமோல்’ (Komsomol) என்ற இளம் பொதுவுடைமையர் கழகத்தில் (Young Communist League) சேர்ந்தார். பின்னர், நான்காண்டுகள் ஓர் அறுவடை இயந்திர இயக்குநராகப் பணியாற்றினார். மாஸ்கோ அரசுப் பல்கலைக்கழகத்தில் 1950 இல் சேர்ந்து சட்டம் கற்று, 1955 இல் பட்டம் பெற்றார். அங்குதான் 1952 இல் அவர் பொதுவுடைமைக் கட்சியின் ஓர் உறுப்பினராகி, தமது வருங்கால மனைவி ரெய்சா மாக்கிமோவ்னா தித்தோரெங்கோவைச் சந்தித்தார். அவர் பட்டம் பெறுவதற்கு முன்பு அவர்கள் திருமணம் செய்து கொண்டனர். அவர்களுக்கு ஒரே பெண் குழந்தை பெயர் இரினா.

சட்டத்தில் பட்டம் பெற்ற பிறகு கொர்பச்சேவ், ஸ்டாவ்ரோப்போல் திரும்பினார். கட்சித் தலைமையில் படிப்படியாக முன்னேறலானார். 1970 இல் வட்டாரக் கட்சிக் குழுவின் முதல் செயலாளரானார். அடுத்த ஆண்டில் பொதுவுடைமைக் கட்சியின் மத்தியக் குழுவில் ஓர் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 1978இல் அவருக்கு ஓர் பெரிய பதவி உயர்வு கிடைத்தது. அப்போது அவர் மாஸ்கோ சென்று, மத்திய குழுவில் வேளாண்மைப் பிரிவுக்குச் செயலாளரானார். 1979இல், சோவியத் ஒன்றியத்தை உண்மையில் ஆட்சி புரிந்து வந்த ஆட்சி மன்றத்தின் ஒரு வேட்பாளர் உறுப்பினரானார். 1980 இல் அவர் அந்த மன்றத்தின் முழு உறுப்பினரானார். சோவியத் ஒன்றியத்தின் அரசுத் தலைவராக லியோனிட் பிரஷ்னேவ் இருந்த கால கட்டத்தில் இந்தப் பதவி உயர்வுகள் யாவும் கிடைத்தன. பிரஷ்னேவின் மறைவுக்குப் பிறகு ஆண்ட்போர் போவ் (1982 - 1984), செர்னெங்கோ (1984 - 1985) இருவரும் சிறிது காலம் அரசுத் தலைவராக இருந்தனர். இந்த ஆண்டுகளின் போதுதான் கொர்பச்சேவ் ஆட்சி மன்றத்தின் மிக முக்கிய உறுப்பினராக உயர்ந்தார். செர்னெங்கோ 1985 மார்ச் 11 அன்று காலமானார். அடுத்த நாளே அவருடைய இடத்தில் கட்சியின் பொதுச் செயலாளராகக் கொர்பச்சேவ் தேர்வு பெற்றார். (ஆட்சி மன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு நடந்தது. ஆனால், தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட மிதவாதியான விக்டர் குரிஷினை விட மிகச்சில வாக்குகள் அதிகம் பெற்றுத்தான் கொர்பச்சேவ் வெற்றி பெற்றார் என்பது வதந்தி. இரண்டு மூன்று பேர் மட்டும் வேறு விதமாக வாக்களித்திருந்தால் வரலாறு எப்படியோ திசை மாறிப் போயிருக்கும்).

சோவியத் தலைவர்களில் பெரும்பாலானோரைப் போலன்றி, கொர்பச்சேவ், கட்சித் தலைவராவதற்கு முன்பு அயல் நாடுகளுக்கு விரைவாகப் பயணம் செய்தார். (1966 இல் பிரான்ஸ், 1967 இல் இத்தாலி, 1983 இல் கனடா, 1984 இல் இங்கிலாந்து) எனவே, அவர் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், கொர்பச்சேவ்,



தமக்கு முந்தியிருந்தவர்களைவிடப் புதுமைச் சிந்தனையும், முற்போக்கு எண்ணங்களும் கொண்ட தலைவராக விளங்குவார் என்று பெரும்பாலான மேலை நாட்டவர்கள் நம்பினார்கள். அவர்கள் நம்பிக்கை வீண்போகவில்லை. ஆனால், அவர் மேற்கொண்ட சீர்திருத்தங்கள் அத்துணை வேகமாகவும், விரிவாகவும் இருக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

கொர்பச்சேவ் பதவியேற்ற பிறகு, சோவியத் ஒன்றியம் ஏராளமான கடும் சிக்கல்களை எதிர்நோக்கியது. ஆனால், இச்சிக்கல்கள் அனைத்திற்கும், படைக்கலங்களுக்காக அரசாங்கம் கணக்கு வழக்கின்றி செலவிட்டதே காரணம். எனவே, இந்த ஆயுதப் போட்டிக்கு முடிவு கட்ட கொர்பச்சேவ் முடிவு செய்தார். அதனால், இதற்காக ஓர் உச்சி மாநாடு நடத்தலாம் என அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரொனால்ட் ரீகன் ஆலோசனை கூறியபோது, அதை உடனடியாக ஏற்றுக் கொண்டார். இரு தலைவர்களும் நான்கு முறை சந்தித்துப் பேசினார்கள். ஜெனீவா (1985), ரேய்க்ஜாவிக் (1986), வாஷிங்டன் (1987), மாஸ்கோ (1988) ஆகிய இடங்களில் இச்சந்திப்புக்கள் நடந்தன.

வியப்புக்கள் தொடரும்....

---

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



> நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
> *-காதில பூ கந்தசாமி-*

**வணக்கமுங்கோ!**

தலைநகரில ஆட்கடத்தல் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரிச்சுக் கொண்டு வருகுது. போன கிழமைக்குள்ள மட்டும் அஞ்சாறு பேரைக் காணயில்லை எண்டு சொல்லினம். அதில ஒருவரை விடுவிச்சிட்டினமாம். அவரைக் கடத்தினவை ‘நீர் புலிகளுக்குப் பண உதவி செய்யிறீர் எண்டு கேள்விப்பட்ட நாங்கள். அதுதான் தூக்கினம். ஆனால் எங்களுக்குக் கிடைச்ச தகவல் பிழையெண்டு நினைக்கிறம். அதாலை உம்மை விடுவிக்கிறம்’ எண்டிச்சினமாம் எண்டு உவர் சொல்லுறாருங்கோ. அது உண்மையோ, பொய்யோ எண்டு யோசிச்சுத்தான் பார்க்க வேணும். நடக்கிற சம்பவங்களையும், பிறகு வெளியாகிற கதையளையும் வச்சுக் கொண்டு என்னாலை எண்டால் எந்த முடிவுக்கும் வரமுடியாதுங்கோ. ஏன் சொல்லுங்கோ, முன்னம் அவர் செய்தி ஆசிரியர் கடத்தப்பட்ட பிறகு, ஆர்ப்பாட்டங்கள், கண்டனங்கள் எண்டு அமர்க்களப்பட்டபோது அவரை விடுவிச்சினம். அவரிட்ட ‘என்ன நடக்க வேணுமெண்டு எதிர்பார்த்தமோ அது நடந்திட்டுது’ எண்டு சொல்லிப்போட்டு விடுவிச்சினமாம். அப்புடியெண்டால் தலைநகரில ஒரு பதற்றம், ஒரு குழப்பம் நடக்க வேணும் எண்டு எதிர்பார்க்கிறவை உதைச் செய்யினம் எண்டால், கடைசியாக விடுவிக்கப்பட்டவர். சொல்லுறது, அதுக்கு நேர்மாறாக இருக்குதுங்கோ.

எனக்கு ஒண்டுமாப் பிடிபடயில்லை எண்டிட்டு நாலுபேரிட்டக் கேப்பம் எண்டு கேட்டால் அவை தங்கட பேரையோ, பதவியையோ யூஸ் பண்ணிப் போடாதேங்கோ எண்டு சொல்லினம். புலியளும் செய்யினம்; அவைக்கு எதிரானவையும் உதைச் செய்யினம். எப்புடியோ ஒண்டுக்கு மேற்பட்ட குரூப் நிண்டு கொண்டு உந்த ஆட்கடத்தலைச் செய்யினமாம். அதுமட்டுமில்லையுங்கோ. பணத்துக்காகச் செய்யிற கோஷ்டியும் உந்தச் சைக்கிள் கெப்பில லொறி ஓட்டிக் கொண்டிருக்கினம் எண்டினமுங்கோ.

அவை சொல்லுறபடியும் நடக்கலாம் எண்டுதான் நினைக்கிறன். அப்புடியெண்டால் ஒண்டுக்கு மேற்பட்ட குழுக்கள் எண்டால் உந்தக் காவல் துறைக்கும், புலனாய்வுத் துறைக்கும் கண்ணில விரலை விட்டு ஆட்டிக் கொண்டே செய்யினம்? சில குற்றவாளிகள் விரலை விட்டு ஆட்டக் கூடியவைதான். ஆனால், எல்லாக் குற்றவாளியும் அப்படி இருக்க மாட்டினம். எங்கேயோ ஒரு இடத்தில வீக் விடுவினம். அது என்ன எண்டு கண்டு பிடிச்சு உந்த ஆட்கடத்தல் சம்பவங்களுக்கு ஒரு தீர்வைக் காண முடியல்லை எண்டால் குற்றவாளியில இல்லை வீக், அதைத் தடுக்க வேண்டிய தரப்பிற்ற தான் வீக் இருக்குது. அதுவும் பென்னம் பெரிய வீக் எண்டதால்தான் அதை குற்றவாளிகள் தங்களுக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு சுதந்திரமாக நடமாடினம் எண்டுதானே சாதாரண சனங்கள் சந்தேகப்படுவினம். சனங்களுக்கு இருக்கிற சந்தேகத்தை இல்லாமல் செய்யிறது யாருடைய கடமையோ அதை சம்பந்தப்பட்டவை செய்ய வேணுமுங்கோ. சும்மா, ‘தேடுறம். விசாரணைகள் ஒன் கொயிங்’ எண்டு கதை சொல்லிக் கொண்டிருக்கிறதில அர்த்தமில்லையுங்கோ. உதுக்குப் பிறகும் உதில ஒரு முன்னேற்றம் இல்லையெண்டால், சனங்கள் என்ன சொன்னாலும் அதை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேணும்.

அது ஒரு பக்கமிருக்கட்டும். சனங்கள் கொஞ்சம் அவதானமாக இருங்கோ. யாரும் வந்து வீட்டுக்கு வெளியில கூப்பிட்டாலோ, விசாரிக்கிற மாதிரி வீட்டுக்குள்ள வந்தலோ கவனமாக இருங்கோ. அது போக, அப்புடி வந்து போற வாகனங்களைச் சரியா கவனியுங்கோ. அடையாளங்கள், நம்பர்கள், ஆக்களின்ர உருவ அமைப்புகள் என்பதையெல்லாம் ஞாபகத்தில பதிஞ்சு கொள்ளுங்கோ. இதற்கு மேலதிகமாக தங்களை யாரும் பின் தொடரினமோ எண்டு மனசுக்குள்ள சந்தேகம் ஏற்பட்டாலோ, நம்மோடு உரையாடும் நபர் சந்தேகம் தரக் கூடிய வகையில உரையாடினாலோ நிலைமையைச் சுதாகரிச்சுக் கொண்டு சுய பாதுகாப்புக்கான வழியைப் பாருங்கோ. எல்லாரையும் எல்லா நேரத்திலையும், எல்லா இடத்திலையும் நம்முடைய அவசரத்துக்கு ஓடி வந்து காவல் துறையோ, சம்பந்தப்பட்ட யாருமோ நம்மைக் காப்பாத்த மாட்டினம். நமக்கு நாமே காவல் எண்டு நினைச்சுக் கொள்ளுங்கோ. உது இந்த வார அட்வைஸ், புரியுதோ?

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

---

# இந்த வாரம் உங்கள் பலன்

(18.01.2007 தொடங்கி 24.01.2007 வரை)

**சோதிட மாமணி தில்லை**

## இந்த வாரக் கிரக நிலை

மகரம் - சூரியன், புதன், வெள்ளி. கும்பம் - இராகு. கர்க்கடகம் - சனி. சிங்கம் - கேது. துலாம் - வியாழன். சந்திரன், தனு, மகரம், கும்பம், மீனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் நன்மை, பணவரவு, மனமகிழ்ச்சி, பெரியோர் சகாயம், உறவினர் உபத்திரவம், சுபகாரியத்தடை, குடும்பச்சிக்கல், செலவதிகம், உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் மந்தம், செலவதிகம், பெரியோர் பகை, வீண் மனஸ்தாபம், அந்நியர் தொல்லை, தேகசுகக் கஷ்டம், குடும்பப் பிரிவு, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் நன்மை, பணக்கஷ்டம், வீண் பிரயாணம், தேகசுகக் குறைவு, மனக்குழப்பம், பெரியோர் சகாயம், குடும்பக் கவலை, உத்தியோகத் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, பெரியோர் உதவி, வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி, குடும்பத் தொல்லை, உத்தியோக மாற்றம், புதிய பதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்) தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி, பணவரவு, தூர இடப் பிரயாணம், அந்நியர் நட்பு, புதிய முயற்சி, குடும்ப நன்மை, சுப காரிய மகிழ்ச்சி, உத்தியோகக் கவலை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் பகை, வீண் குறை கேட்டல், மனக்குறையதிகம், உயர்ந்தோர் நட்பு, பிரயாண மிகுதி, குடும்பப் பகை, உறவினர் தொல்லை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி, பணவரவு, கடன் சுமை, வெளியிட வாழ்க்கை, பணவரவு, கடன் சுமை, வெளியிட வாழ்க்கை, தேகசுகக் கஷ்டம், புதிய நட்பு, குடும்ப நன்மை, உத்தியோகப் பொறுப்பு, மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**


**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் நன்மை, காரியானுகூலம், பணவரவுத் தடை, பெரியோர் உதவி, வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு, பிரயாணக்கஷ்டம், குடும்பப் பாரம், உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 04.**

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, பணவரவுக் கஷ்டம், வீண் பிரயாசம், எதிர்பாராத பிரயாணம், குடும்பக் கவலை, உறவினர் உதவி, உத்தியோகச் சிறப்பு, மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 01.**

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் பலிதம், பணக்கஷ்டம் நீங்கும், உயர்ந்தோர் நட்பு, வெளியிட வாழ்க்கை, தேகசுகக் குறைவு, குடும்பப் பயம், பிள்ளைகள் கவலை, உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் கலக்கம், பணவிரயம், பெரியோர் பகை, வீண் குறை கேட்டல், உறவினர் உபத்திரவம், குடும்பப் பாரம், உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் பலிதம், பணவரவு, கடன் சுமை நீங்கும், பெரியோர் உதவி, குடும்பப் பாரம், சுபகாரிய நன்மை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**




மக்கள் வாழ்வில் மகிழ்ச்சியும் சுபீட்சமும் பொங்கட்டும்.

இலங்கை வங்கி

BOC

தேசத்தின் வங்கியாளர்

Admire 0048


## பிரவேசம்

ஜோன் சீனா என்ற பெயரைக் கேட்டதுமே, சிறுவர்கள் முதல் இளைஞர்கள் வரை புல்லரித்துப் போவார்கள். அந்தளவுக்கு வீரதீரச் செயல்களிலும், சாகச விளையாட்டுக்களிலும் வல்லவர் இந்த இளைஞர். மல்யுத்தம், அடிதடி, சண்டைக் காட்சிகளில் அவருக்கு நிகர் அவரே தான். 'த மரைன்' என்ற பெயரில் இவர் நடித்த முதலாவது திரைப்படம், கொழும்பு மஜெஸ்ரிக் திரையரங்கில் 'ஹவுஸ் புல்' காட்சிகளாக ஓடிக்கொண்டிருக்கிறது. இத் திரைப்படத்தில் கதாநாயகனாக வரும் ஜோன் சீனா, ஜோன் றைரன் என்ற கதாபாத்திரத்தில் தோன்றுகிறார். ஈராக் யுத்த காலத்தின்போது வீரதீரமிக்க கடற்படை வீரராகப் பணிபுரிந்த இவரை, அவரது விருப்புக்கு மாறாகவே சேவையிலிருந்து நீக்கி விடுகிறார்கள். ரோம் என்ற பெயர் கொண்ட ஈவிரக்கமற்ற கிரிமினல் குற்றவாளியொருவனின் தலைமையிலான கொலைகாரக் கும்பலினால், ஜோன் சீனாவின் மனைவி கடத்தப்பட்டதையடுத்து, மீண்டும் தனது வீரதீரச் செயல்களில் புகுந்து விளையாடுகிறார். தனது இலக்கையடைந்த பின்னர் சீனா, தனது கடுமையான செயற்பாடுகளைக் கைவிட்டு விடுகிறார். கடந்த வருடம் அக்டோபர் மாதம் 13 ஆம் திகதி 'த மரைன்' திரைப்படம் உலகளாவிய ரீதியில் வெளியிடப்பட்டது.

---

## அழகு ஆபத்து

1 உலகிலேயே மிக விரைவாக இதழ் விரிக்கும் மலரின் பெயர் பஞ்ச்பெரி டோக்வூட் என்பதாகும். கொர்னஸ் கனடென்சில் என்பது இதன் தாவரவியல் பெயராகும். இந்த மலர் இதழ் விரித்து மகரந்தத்தை வெளியேற்றுவதற்கு 0.5 மில்லி செக்கன்களே செல்லுகின்றன.

2 உலகிலேயே மிகப் பயங்கரமான தாவரம் எது தெரியுமா? சயனைட்டை விட ஆறாயிரம் மடங்கு விஷம் அதிகமான இந்தத் தாவரத்தின் பெயர் காஸ்ரர் பீன் என்றழைக்கப்படுகிறது. பாம்பின் கொடிய விஷத்தை விட 12 ஆயிரம் மடங்கு இத் தாவரத்தின் விஷம் அதிகமாம்.

ரீசினஸ் கொம்யூனிஸ் என்பது இந்த விஷத் தாவரத்தின் தாவரவியல் பெயர்.




3 ரபில்சியா ஆர்னோல்டி என்ற பெயர் கொண்ட ஒட்டுண்ணித் தாவரமொன்றின் பூவே உலகிலேயே மிகவும் பெரிய மலராகும். தென் கிழக்காசிய நாடுகளில் காணப்படும் இந்தப் பூவின் நிறை 24 இறாத்தல்களாகும். இந்தப் பூவின் குறுக்களவு மூன்று அடி. இப் பூவின் இதழ் 0.75 அங்குலம் தடிப்பானது.

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் நதுஜன் / 20.01.2007



கனடாவில் வசிக்கும் ஜெகன் - சுசீதா தம்பதியினரின் செல்வப் புதல்வன் நதுஜன் 20. 01. 2007 அன்று தனது முதலாவது பிறந்த நாளை கொழும்பிலுள்ள தனது அப்பப்பாவின் இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை இவரது அப்பா - அம்மா, உடுப்பிட்டியில் வசிக்கும் அப்பப்பா சிவபாலன், அப்பம்மா சத்தியாதேவி, ஜெசி அத்தை, ஜானு அத்தை, மலேசியாவில் இருக்கும் ஜெயந்தன் சித்தப்பா, புத்தூரைச் சேர்ந்த அம்மம்மா மகேஸ்வரி, ஜேர்மனியில் வசிக்கும் பிரபா பெரியப்பா குடும்பம், பாலா சித்தப்பா குடும்பம், மற்றும் சித்திமார், அத்தைமார், அண்ணாமார், அக்காமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், தாத்தாமார், பாட்டிமார், மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் வல்லைவாழிப் பிள்ளையார் அருள் பெற்று, அன்பிலும் பண்பிலும் சிறந்து, வீரத்துடனும் விவேகத்துடனும் பல்கலைகளும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் :- ஜெகன் (அப்பா).